
உ

சிவமயம்

# திருக்கோவிற் பாமாலை



இலவச வெளியீடு - 15.04.2016

உ


சிவமயம்

# திருக்கோவிற் பாமாலை




வெளியீடு – 15.04.2016

# சமர்ப்பணம்



எம்மை பெற்றெடுத்து
அன்பும், பண்பும், அறிவும், ஆன்மிகத்தில்
ஈடுபாடும் உடையவராய் வளர்த்தெடுத்து,
வையத்தில் முந்தி இருக்கச் செய்த
இருமுது குரவர்களான
தந்தையினதும் தாயினதும் நினைவாக
திருக்கோயிற் பாமலை என்ற இந்நூலை
அவர்களின் திருவடிக்கு சமர்ப்பிக்கின்றோம்.



சுன்னாகம் மயிலணி திருக்குடவாயில்
ஸ்ரீ விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாத சுவாமி

## பொருளடக்கம்


| | |
|---|---|
| நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் | iii |
| வாழ்த்துரை | iv |
| செஞ்சொற் செல்வரின் பிரார்த்தனையுரை | vi |
| சுன்னாகம் ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் தேவஸ்தான ஆதீன கர்த்தாவின் ஆசியுரை | vii |
| வெளியீட்டுரை | viii |
| 1. கணபதி துணை | 01 |
| 2. ஔவையார் அருளிய விநாயகர் அகவல் | 02 |
| 3. நக்கீரர் அருளிய விநாயகர் அகவல் | 05 |
| 4. விநாயகர் கவசம் | 11 |
| 5. வருகக் கோவை | 15 |
| 6. பிள்ளையார் கதை | 17 |
| 7. போற்றித் திருவகவல் | 54 |
| 8. விநாயகர் காரிய சித்தி மாலை | 56 |
| 9. ஸ்ரீ கணேச "பஞ்சரத்னம்" | 58 |
| 10. திருமறைக்காடு | 59 |
| 11. திருமுறை ஓதல் - ஏன், எப்படி? | 61 |
| 12. பஞ்சபுராணப் பாடல்கள் | 65 |
| 13. கொடியேற்றத்தின்போது-ஸ்தம்பத்தடியில் ஓதவேண்டிய திருமுறைகள் | 79 |
| 14. திருவெம்பாவை | 85 |
| 15. திருப்பொற்சுண்ணம் | 92 |
| 16. திருப்பொன்னூஞ்சல் | 98 |
| 17. திருப்பள்ளியெழுச்சி | 101 |
| 18. திருப்பல்லாண்டு | 104 |
| 19. கொடிக்கவி | 108 |

20. சுன்னாகம் சந்திரசேகரப்பிள்ளையார் ஊஞ்சல் 109
21. ஆதிமயிலிட்டி காசிப்பூதராயர் ஊஞ்சல் 115
22. சுன்னாகம் மயிலணி திருக்குடவாயில் ஸ்ரீ விஸ்வநாதசுவாமி திருவூஞ்சல் 121
23. சுன்னாகம் மயிலணிச் சுப்பிரமணியர் ஊஞ்சல் 125
24. சுன்னாகம் மயிலணி மகாவிஷ்ணு ஊஞ்சல் 131
25. சுன்னாகத்தில் கோயில் கொண்டு வீற்றிருக்கும் ஐயனார் மீது திருவூஞ்சல் 133
26. ஸ்ரீ சுவர்ணாம்பிகை பாகர் ஸ்ரீ பொன்னம்பலவாணப் பெருமானின் திருவூஞ்சற் பாமாலை 139
27. புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை ஐங்கரனூஞ்சல் 143
28. தெல்லிப்பழை, வீணாக்கடவைக் காசிநாயகர் திருவூஞ்சல் 149
29. திருவூஞ்சல் -தெல்லிநகர்க் குருநாதசுவாமி 153
30. திருவூஞ்சல் - யாழ்ப்பாணம் - தெல்லியூர் குருநாத சுவாமி 157
31. ஸ்ரீ முத்துமாரி அம்பாள் (ஸ்ரீ வடலி அம்மன்) திருவூஞ்சல் 161
32. சுன்னாகம் சிவபூதராயர் ஊஞ்சல் 167
33. வருஷப்புலம் ஸ்ரீமகாமாரி அம்பாள் ஊஞ்சல் பாட்டு 171
34. ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் திருவூஞ்சல் 177
35. கந்தரோடை - அருளானந்த விநாயகர்- திருவூஞ்சல் 183
36. ஸ்ரீ விசாலாக்ஷி அம்பாள் சமேத விஸ்வநாதஸ்வாமி - திருவூஞ்சல் 187
37. திருப்புகழ் 191
38. சங்கரப்பிள்ளை மண்டல நாயகம் 193
நன்றி உரை

---

**வெளியிடுவோர்**

**மண்டலநாயகம் குடும்பம் சார்பாக ம. கோணேஸ்வரன்**

**"செல்வ வாசகம்"**

**சுன்னாகம்.**

உ
சிவமயம்
குருபாதம்





# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர் :- ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
முதலாவது குருமஹா சந்நிதானம்
ஆதீன குரு முதல்வர் :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்
ஸ்தாபிதம் : 1966

பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.
021 222 2870

ஆசிச் செய்தி

04.07.2016.

சிவனேசச் செல்வர்களே!

"திருக்கோயிற் பாமாலை" என்னும் மலர் வெளியீடு மகிழ்ச்சியை தருகின்றது. திருமுறை பாமாலை என்னும் நூல் வெளிவருவது, மன மகிழ்ச்சியைத் தருகிறது. பலவிடயங்களை பிள்ளையார் கதை, விநாயகர் அகவல், விநாயகர் கவசம், சுன்னாகப் பிரதேசத்தின் ஆலயங்களின் ஊஞ்சற் பதிகம், திருக்கதவு திறந்த பதிகம், திருப்பொற் சுண்ணம், நவசந்தியில் படிக்கும் திருமுறைகள், திருப்பள்ளிஎழுச்சி, திருவெம்பாவை இன்னும் பல அருளாளர்களுடைய பாடல்கள் கொண்ட நூலாக திரு. திருமதி மண்டலநாயகம் நினைவாக இந்நூல் வெளிவருவது அனைவருக்கும் பயனாக அமைந்துள்ளது. இந்நூலை அனைவரும் படித்து பயன்பெற இறை அருளைச் சித்திக்கின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு"

இரண்டாவது குருமஹாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

## வாழ்த்துரை

"ஆடும் பரி வேல் அணி சேவல் எனப்
பாடும் பணியே பணியாய் அருள்வாய்
கூடும் கய மாமுகனைச் செருவில்
சாடும் தனி யானை சகோதரனே"

என முருகப்பெருமானிடம் உனைப் "பாடும் பணியே பணியாய் அருள்வாய்" என அருணகிரிநாதர் வேண்டுகின்றார். மேலும்

"பக்தியால் யான் உனைப் பலகாலும்
பற்றியே மாதிருப்புகழ் பாடி
முத்தனா மாறு நற் பெருவாழ்வில்
முத்தியே சேர்வதற்கு அருள்வாயே....."

என, நான் பாடுவது உன் முத்தியைப் பெறுவதற்கே. ஆதலால் என் கடன் பாடுவது உன்கடன் முத்தியைத் தருவது எனச்சொல்லாமற் சொல்கின்றார்.

அவரவர் பக்குவ நிலைக்கு ஏற்பவே குலதெய்வமும், வழி படு தெய்வமும் எமக்குக் கிடைக்கின்றன. ஆதலால் அவரவர் பக்குவ நிலைக்கு ஏற்ப பாடிப் பணி செய்தால் இறையருள் சித்திக்கும். எங்கும் நின்று நிறைந்திருப்பவர் ஒரு கடவுளே. ஆகவே எக்கடவுளை வணங்கினாலும் அது சிவவழி பாடாகவே அமையும்.

"யாதொரு தெய்வங்கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே
மாதொரு பாகனார்தாம் வருவர்................"

என்பது சிவஞானசித்தியார் உணர்த்தும் உண்மையாகும்.

இவ்வுண்மையை நன்குணர்ந்த இந்த நூல் பதிப்பாளர்கள் நாம், சிவனையோ, அம்பாளையோ, முருகனையோ, விநாயக ரையோ, பிற தெய்வங்களையோ எத்தெய்வத்தையும் பாடி வணங்குதற்குரிய பதிகங்களைத் தொகுத்துத் "திருக்கோயிற் பாமாலை" எனும் நூலாகத் தந்திருப்பது சிறந்த சிவபுண்ணியமாகும். அதுவும் தங்கள் பெற்றாரின் நினைவாகத் தந்திருப்பது பெற்றார்க்கும் சிவபுண்ணியம் தேடிக்கொடுக்கும் சிறந்த முன்மாதிரியான போற்று தலுக்குரிய செயலாகும்.

அவர்களை வாழ்த்துவதுடன் நாமும் பாடிப் பணிந்து பயன்பெறுவோம்.

**கலாபூஷணம், சைவப்புலவர்**
**சு. செல்லத்துரை**

## செஞ்சொற் செல்வரின் பிரார்த்தனையுரை

இறையருளைப் பெறுவதற்கு உகந்த மார்க்கங்களில் இசை அர்ச்சனை முதன்மையானது. சாமவேதம் இசை வடிவமானது. சுந்தரமூர்த்தி சுவாமிகளிடம் இறைவன் வேண்டியது "சொற்றமிழால் பாடிப் பரவுமாறு" எனவே இசைவடிவில் இறைவனை நாடுவதற்கு நாம் அருளாளர் களின் பாக்களை அர்ப்பணம் செய்தல் வேண்டும். அவ்வகையில் "திருக்கோவிற் பாமாலை" என்ற இந்நூல் தெய் வீகமான பாக்களின் தொகுப்பாகும். சுன்னாகத்தில் மிகப்பெருமையோடு வாழ்ந்த குடும்பத்தின் தலைமகனாகிய அமரர். சங்கரப்பிள்ளை மண்டலநாயகம் விதானையார் நினைவாகவும் அவரது பாரியார் திருமதி இரத்தினதேவி மண்டலநாயகம் நினைவாகவும் அவர்களின் மைந்தன் திரு. ம. கோணேஸ்வரன் அவர்கள் இப்பாமாலை நூலை இலவச மாக வெளி யிடுவது அறிந்து மிகவும் ஆனந்தமடைகிறேன்.

விநாயகப் பெருமானின் திருவருளை எடுத்துரைக்கும் ஔவைப்பிராட்டியின் விநாயகர்அகவல் முதல் அருண கிரிநாதரின் திருப்புகழ் வரை இம்மலரில் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இறையருளை நாடும் பக்தர்களுக்கு இந்நூல் வரப்பிரசாதமாகும். பரோபகாரியாகவும், ஆளுமைமிக்க கிராமத் தலைமைக்காரனாகவும் விளங்கிய ஸ்ரீமான் மண்டலநாயகம் தம்பதிகளின் நினைவாக இக்கைங்கரியம் மூலம் பலருக்கு உதவ முன்வந்த குடும்பத்தவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து இம்மலர் அடியார்களை என்றும் ஆற்றுப்படுத்தப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

கலாநிதி. ஆறு திருமுருகன்,
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

## சுன்னாகம் ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் தேவஸ்தான ஆதீன கர்த்தாவின் ஆசியுரை

தெய்வத்திரு மண்டலநாயகமும் அவரது குடும்பமும் சைவத்திற்கும் தமிழுக்கும் மிகவும் சேவையாற்றி வந்தவர்களாவார். இவரது குடும்பம் சந்திரசேகரப் பிள்ளையாரிடமும், கோவில் ஐயா குடும்பத்துடனும் மிகவும் ஈடுபாடுடையவர்கள். ஆலய வளர்ச்சிக்கு மிகவும் பாடுபட்டவர்கள். இவர்கள் பண உதவி, பொருளுதவி புரிந்ததுடன், மகாலக்ஷ்மி கோவில் அமைத்து பிரதிஷ்டை செய்தனர். அத்துடன் பல உபயங்கள் செய்கின்றனர். மஹோற்சவத்தில் 4 ஆம் திருவிழா செய்கின்றனர். பல வழிகளில் தொண்டாற்றி வரும் மண்டலநாயகம் குடும்பம், இப்பொழுது மக்களின் வசதிக்கும் மகோற்சவத்தில் நவசந்திப் பண்கள், வார நாட்களில் பாடவேண்டிய தேவாரங்கள், பஞ்சபுராணங்கள், கோவில் திருப்பொன்னூஞ்சல்கள் இப்படி பல அரிய பொக்கிஷங்கள் அடங்கிய "திருக்கோயில் பாமாலை" என்னும் தொகுப்பை வெளியிடுகின்றனர்.

மண்டலநாயகத்தின் நான்காவது குமாரனாகிய திரு. கோணேஸ்வரன் சந்திரசேகர விநாயகர் ஆலய நிர்வாக சபையில் காரியதரிசியாய் இருக்கின்றார். இவர் மூலமாக இந்த பொக்கிஷம் வெளியிடப்படவுள்ளது. இவர்களின் இந்த முயற்சிக்கும், இளைஞர் மத்தியில் சைவத்தை வளர்க்க வேண்டுமென்ற ஆற்றலுக்கும் என்றென்றும் சந்திரசேகரன் அருள்புரிவான் என்று அவனின் பாதார விந்தங்களைப் பணிகின்றேன். இவர்களுக்கு என்னுடைய நல்லாசி எப்பொழுதும் கிடைக்கும்.

*"சுணார்ப்பணமஸ்து"*

சிவஸ்ரீ. சோ. சந்திரகாந்தகுருக்கள்
(ஆதீன கர்த்தா)

## வெளியீட்டுரை

ஆலய வழிபாட்டில் திருமுறை ஓதுதல் ஓர் முக்கிய அங்கமாக உள்ளது. "நமக்கும் அன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க அர்ச்சனை பாட்டே ஆகும்" என சுந்தர மூர்த்தி நாயனாருக்கு, சிவபெருமான் கூறியதாக சேக்கிழார் பெரிய புராணத்தில் பாடியுள்ளார். சைவசமயிகள் யாவராலும் சிவபெருமானுக்கு மிக எளிமையாகச் செய்யக்கூடிய அர்ச்சனை திருமுறை பாடுதலே ஆகும்.

திருக்கோயில் வழிபாட்டில் நித்திய பூசை, விசேட பூசை, மகோற்சவ காலம், கும்பாபிஷேக நிகழ்வு என்பவற்றின்போது பாடப்படுகின்ற திருமுறைகளை , ஒரே புத்தகத்தில் தொகுக்க வேண்டும் என்ற எண்ணம் இறைவனின் திருவருளினால் தோன்றியது. அதற்கேற்ப இறைவனைப் பள்ளியறையிலிருந்து எழுப்பும் திருப்பள்ளியெழுச்சி, கொடியேற்றத்தின்போது பாடப்படும் கொடிக்கவி, நவசந்திப் பண்களுக்குரிய தேவாரங்கள், தேரில் இறைவன் எழுந்தருளும் பொழுது பாடப்படும் திருப்பல் லாண்டு, தீர்த்தத் திருவிழாவில், சுண்ணம் இடிக்கும்பொழுது பாடப்படும் திருப்பொற்சுண்ணம், கும்பாபிஷேகம், பக்த முக்தி பாவனோற்சவம் போன்றவற்றில் கதவு திறக்கப் படும்போது பாடப்படும் "பண்ணினேர்" என்று தொடங்கும் பதிகம், திருவெம்பாவை நாட்களில் பாடப்படும் திருவெம்பாவை, திருவாதிரையன்று எம்பெருமானை ஊஞ்சலில் வைத்துப் பாடும் திருப்பொன்னூஞ்சல், சுன்னா கத்திலும் அதனை அண்டியுள்ள ஆலயங்களினதும் ஊஞ்சற் பதிகங்கள், மற்றும் பிள்ளையார் கதை, பஞ்சபுராணம் போன்ற வற்றை இப்புத்தகத்தில் தொகுத்துள்ளேன்.

கீழ்வரும் வரலாற்றுப் பின்னணி கொண்ட எமது பாசம் மிகுந்த தாய் தந்தையரின் நினைவாகத் "திருக்கோவிற் பாமாலை" என்ற நூலைத் தொகுத்துள்ளேன்.

திருமூலரால் சிவபூமி என்றழைக்கப்பட்ட இலங்கைத் தீவின் வடபால் அமைந்துள்ள சுன்னாகம் எனும் நன்னகரில் சைவ பரம்பரையில் புகழ்பூத்த குடும்பத்தில் 1909ஆம் ஆண்டு சங்கரப்பிள்ளை, செல்லப்பிள்ளை தம்பதிகளுக்கு ஏக புத்திரனாக அவதரித்தார் மண்டலநாயகம். இவர் தாயின் வயிற்றில் இருக்கும் போதே தந்தையர் மலேசியாவில் சிவபதம் அடைந்துவிட்டதால் தாயின் செல்லப்பிள்ளையாகவும், செல்வப் பிள்ளையாகவும் வாழ்ந்தார். சிறு வயதிலேயே சிவ தீட்சை பெற்று, சைவ ஆசாரங்களுடன் வாழ்க்கையை ஆரம்பித்தார். இவர் ஆரம்பக்கல்வியை மல்லாகம் ஆங்கிலப் பாடசாலையிலும், உயர்நிலைக் கல்வியைப் பரமேஸ்வராக் கல்லூரி, ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, யாழ் இந்துக் கல்லூரி என்பவற்றிலும் கற்றார். இவர் லண்டன் மெற்றிகுலேசன் (London Matriculation) பரீட்சையில் சித்தி எய்தி, உயர் தொழிலுக்கு நேர்முகப்பரீட்சையில் தெரிவான போதும் தாய் மற்றும் ஊர் மக்கள், உறவினர்கள் வேண்டுகோளுக்கு இணங்க சுன்னாகம் (சுன்னாகம், கந்தரோடை) கிராமத் தலைமைக்காரன் (Village Headman - விதானையார்) பதவியை ஏற்று மக்களின் அன்பனாக வேலை செய்து வந்தார்.

1941ஆம் ஆண்டு, முன்னாள், ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் ஆங்கில ஆசிரியர், புன்னாலைக்கட்டுவன் செல்லப்பா தங்கப்பிள்ளை தம்பதிகளின் ஏகபுத்திரி இரத்தினதேவியைத் திருமணம் புரிந்து நான்கு ஆண் பிள்ளைகளையும், நான்கு பெண் பிள்ளைகளையும் நன்மக்களாகப் பெற்று, அன்பும், அறமும் கூடிய வாழ்க்கை வாழ்ந்து சகல சௌபாக்கியங்களும் பெற்றார். 1953ஆம் ஆண்டு, நேர்மையுடன் சிறந்த தொழில் புரிந்தமைக்காக முடிக்குரிய எலிசபெத் மகாராணி அவர்களால் மகாதேசாதிபதி மூலமாகப் பதக்கம் கொடுத்து கௌரவிக் கப்பட்டார். அகில இலங்கைக் கிராமத் தலைமை

அதிகாரிகள் சங்கத்தின் (All Ceylon Village Headmen Association) உப தலைவராக இருந்து பெரும் பணியாற்றினார். மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் நிர்வாகசபை அங்கத்தவராக இருந்து, வைத்தியசாலை வளர்ச்சிக்கும் உதவினார். சுன்னாகம் மயிலணி சைவவித்தியாசாலையின் முகாமைத்துவ உறுப்பினராகவும் (Management Committee) இருந்து பாடசாலையின் வளர்ச்சிக்குச் சேவையாற்றினார். சுன்னாகத்தில் உள்ள ஆலயங்களின் முன்னேற்றத்திற்கு, பதவி மூலமும், தனிப்பட்ட முறையிலும் இயன்றளவு உதவி செய்தார். இவர் மகாஞானி யோகர் சுவாமிகளின் பக்தன். சுவாமிகள் அன்னாரின் இல்லத்துக்குப் பல தடவை சென்றிருக்கிறார். சுவாமிகள் அவரை அன்பாக மண்டலம் என்று அழைப்பார். தனக்கு யோகர் சுவாமிகள் மாலையிடுவதாகக் கனவில் கண்டு கூறியவர், இருகிழமைகளில் நோயுற்று, பின் சிவபதமடைந்தார்.

மண்டலநாயகம் சிவபதமடைந்தபொழுது சுன்னாகம் பண்டினசபை வழங்கிய அனுதாபச் செய்தியில் இருந்து சிலவரிகள் "திரு மண்டலநாயகம் அவர்கள் தனது சேவைக்காலத்திலும், ஓய்வு பெற்ற காலத்திலும் சுன்னாகம், கந்தரோடை மக்களுக்குத் தன்னால் இயன்ற சேவை செய்வதுடன் உயர்வு, தாழ்வற்ற முறையில், ஏழை, பணக்காரன் என்ற வேற்றுமையின்றி எல்லோருக்கும் நேர்மையான முறையில் தன்னலம் கருதாது சேவை செய்து சகல இன, மத மக்களின் பராட்டுதல்களையும் பெற்றுக்கொண்டார். யாழ் மாவட்டத்தில் கடமைபுரிந்த கிராம அதிகாரிகள், காரிய அதிகாரிகள், உயர் அதிகாரிகள், மாவட்ட அதிபர்கள், உள்ளூராட்சி உறுப்பினர்கள், மதத்தலைவர்கள் ஆகியோரின் மதிப்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமாகச் சேவை செய்து சுன்னாகம் கந்தரோடை மக்களுக்குப் பெருமை தேடித்தந்துள்ளார்."

திரு மண்டலநாயகம் அவர்களின் பிரியபத்தினி, மனைத்தக்க மாண்புடையாள் இரத்தினதேவி அவர்கள் ஒரு அன்பான தாயாகவும், கணவனுக்கு அவரின் பதவிக்கு ஏற்ப சகல ஒத்துழைப்பையும் வழங்கும் இனிய மனைவியாகவும், ஊரார் போற்றும் உத்தமியாகவும் வாழ்ந்தார். பிள்ளைகளைப் பண்புடனும், சமயப் பற்றுள்ளவர்களாகவும் வளர வழிகாட்டி, ஆரோக்கியமான உணவளித்து, நோய்நொடி வராமல் பாதுகாத்து, வளர்த்தார். இல்லத்திற்கு வருவோரை இன்முகத்துடன் வரவேற்று உணவளித்து உபசரிக்கும் இனிய இல்லத் தலைவியாகவும் விளங்கினார்.

இவர்கள் இருவரும் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, சமுதாயத்திற்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தார்கள். அவர்களின் இப்பண்பிற்கு ஓர் அர்ப்பணமாக இம் மலரை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியும், பெருமிதமும் அடைகிறோம். இந்த நூல், ஆலய வழிபாட்டில் ஈடுபாடு கொண்ட அடியார்களுக்குப் பெரிதும் பயன்படும் என நம்புகிறோம்.

**குடும்பத்தினர்**

உ
சிவமயம்

# கணபதி துணை



வேழமுகத்துவிநாயகனைத் தொழவாழ்வுமிகுத்துவரும்
வெற்றிமிகுத்துவேலவனைத் தொழபுத்திமிகுத்துவரும்
வெள்ளைக்கொம்பன் விநாயகனைத் தொழதுள்ளி ஓடும்
தொடர்ந்தவினைகள்
அப்பமுப்பழம் அமுதுசெய்தருளிய
தொப்பையப்பனைத் தொழவினையறுமே

அல்லல்போம் வல்வினைபோம் அன்னைவயிற்றிற்பிறந்த
தொல்லை போம்போகாத்துயரம்போம். - நல்ல
குணமதிகமாமருணைக்கோபுரத்துள்மேவும்
கணபதியைக்கைதொழுதக்கால்.

-விவேகசிந்தாமணி

ஐந்துகரத்தனை யானைமுகத்தனை
இந்தினிளம்பிறை போலும் எயிற்றனை
நந்திமகன் றனைஞானக்கொழுந்தினைப்
புந்தியில்வைத்தடி போற்றுகின்றேனே.

-திருமந்திரம்



ஔவையார் அருளிய

# விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன் அரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வண்ண மருங்கில் வளர்ந்தது அழகு எறிப்பப்
பேழை வயிறும் பெரும் பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நால் இரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்கு பொன் முடியும்
திரண்ட முப்புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே !
முப்பழம் நுகரும் மூஷிக வாகன !
இப்பொழுதென்னை ஆட்கொள் வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந்தருளி
மாயாப்பிறவி மயக்கம் அறுத்துத்

திருந்திய முதல் ஐந்தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து
குருவடிவாகிக் குவலயம் தன்னில்
திருவடி வைத்துத் திறம் இது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடாயுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டி என் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி,
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலம்ஒரு நான்கும் தந்தெனக் கருளி
மலம்ஒரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி
ஆறா தாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே,
இடைபிங்கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமும் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி அதனில் கூடிய அசவை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து,
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறிவித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற் சக்கரத்தின் உறுப்பையும் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண்முகம் ஆக இனிதெனக் கருளிப்

புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்தன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டிற்கு ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத் தழுத்தி என்செவியில்
எல்லை இல்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள் வழிகாட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறிவித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக ! விநாயக ! விரைகழல் சரணே.



நக்கீரர் அருளிய

# விநாயகர் அகவல்

சீர்தரு மூலச் செழுஞ்சுடர் விளக்கே
கார்நிற மேனிக் கற்பகக் களிறே
அல்லல் வினையை யறுத்திடு ஞான
வல்லபை தன்னை மருவிய மார்பா
பொங்கர வணிந்த புண்ணியமூர்த்தி
சங்கர னருளிய சற்குரு விநாயக
ஏழை யடியேன் இருவிழி காண
வேழ முகமும் வெண்பிறைக் கோடும்
பெருகிய செவியும் பேழை வயிறும்
திருவளர் நுதலில் திருநீற் றழகும்
சிறுத்த கண்ணுஞ் சீதளப் பார்வையும்
நறுத்திகழ் நாசியும் நாண்மலர்ப் பாதமும்
நவமணி மகுடநன்மலர் முடியும்
கவச குண்டல காந்தியும் விளங்கச்
சிந்தூரத் திலகச் சந்தனப் பொட்டும்
ஐந்து கரத்தி னழகும்வீற் றிருக்க
பாச வினையைப் பறித்திடு மங்குச
பாசத் தொளியும் பன்மணி மார்பும்

பொன்னாபரணமும் பொருந்துமுந் நூலும்
மின்னா மெனவே விளங்கு பட்டழகும்
உந்திச் சுழியும் உரோமத் தழகும்
தொந்தி வயிறுந் துதிக்கையுந் தோன்ற
வேதனு மாலும் விமலனு மறியாப்
பாதச் சதங்கைப் பலதொளி யார்ப்பத்
தண்டைச் சிலம்புந் தங்கக் கொலுசும்
எண்டிசை மண்டல மெங்கு முழங்க
தொகுது துந்துமி தொந்தோ மெனவே
தகுகு திந்திமி தாள முழங்க
ஆடிய பாத மண்டர்கள் போற்ற
நாடிமெய் யடியார் நாளுந் துதிக்கக்
கருணை புரிந்து காட்சி தந்தருள்
இருளைக் கடிந்து எங்கும் நிறையப்
பொங்குபே ரொளியாப் பொன்மலை போலத்
திங்கள் முடியான் றிருவுள மகிழ
வந்த வாரண வடிவையுங் காட்டிச்
சிந்தை தளர்ந்த சீரடி யார்க்கு
இகபர சாதன மிரண்டு முதலி
அகவினைத் துன்ப மகந்தை யறுத்து
மூலா தார முச்சுடர் காட்டி
வாலாம் பிகைதன் வடிவையுங் காட்டி
மாணிக்க மேனி மலர்ப்பதங் காட்டிப்
பேணிப் பணியப் பீஜாட் சரமும்
ஓமென் றுதித்த ஓங்காரத் துள்ளே
ஆமென் றெழுந்த அக்ஷர வடிவும்
இடைபிங் கலைக ளிரண்டி னடுவே
கடைமுனை சுழிமுனைக் கபாலங்குறித்து
மண்டல மூன்றும் வாயுவோர் பத்தும்
குண்டலி யசைவிலி கூறிய நாடியும்
பூதமும் பொறியும் புகழ்குண மூன்றும்
வாதனை செய்யு மறிவையும் காட்டி

ஆரா தார அங்குச நிலையைப்
பேறாகி நின்ற பெருமையுங் காட்டி
பஞ்ச மூர்த்திகள் பாகத் தமர்ந்த
பஞ்ச சக்திகளின் பாதமும் காட்டி
நவ்விட மௌவும் நடுவணை வீட்டில்
அவ்வு மாக்கினை அனாதி சதாசிவம்
மைவிழிஞான மனோன்மணி பாதமும்
நைவினை நணுகா நாத கீதமும்
கண்டு வணங்கக் கண்ணைத் திறந்து
விண்டல மான வெளியையும் காட்டி
ஐம்பத் தோரெழுத் தட்சர நிலையை
இன்பச் சக்கர விதிதனைக் காட்டிப்
புருவ நடுவணை பொற்கம லாசான்
திருவிளை யாடலுந் திருவடி காட்டி
நாதமும் விந்தும் நடுநிலை காட்டிப்
போத நிறைந்த பூரணங் காட்டி
உச்சி வெளிதனி லுள்ளொளி காட்டி
வச்சிரம் பச்சை மரகத முத்துப்
பவள நிறைந்த பளிங்கொளி காட்டிச்
சிவகயி லாசச் சேர்வையுங் காட்டிச்
சத்தம் பிறந்த தலத்தையும் காட்டித்
தத்துவந் தொண்ணூற் றாறையும் நீக்கிக்
கருவி கரணம் களங்க மறுத்து
மருவிய பிறவி மாயையை நீக்கி
உம்பர்க ளிருடிகள் ஒருவரும் காணா
அம்பர வெளியி னருளையுங் காட்டிச்
சக்தி பராபரை சதானந்தி நிராமய
நித்திய ரூபி நிலைமையுங் காட்டி
அடியார் ஞான மமிர்தமா யுண்ணும்
வடிவை யறியும் வழிதனைக் காட்டி
நாசி நுனியில் நடக்குங் கலைகள்
வாசிவா வென்று வாங்கிப் பிடித்து

நின்மல வடிவாய் நிறுவித் தப்புறம்
வின் மயமான விதத்தையுங் காட்டித்
தராதல முழுதுந் தானாய் நிறைந்த
பராபர வெளியைப் பணிந்திடக் காட்டி
என்னுட லாவி யிடம்பொரு ளியாவுந்
தன்னுடை வசமாந் தவநிலை காட்டி
நானெனு மாணவம் நாசம தாகத்
தானென வந்து தயக்கந்தீர
ஆன குருவா யாட்கொண் டருளி
மோன ஞான முழுது மளித்துச்
சிற்பரி பூரண சிவத்தைக் காண
நற்சிவ நிஷ்கள நாட்டமுந் தந்து
குருவுஞ் சீஷனுங் கூடிக் கலந்து
இருவரு மொருதனி யிடந்தனிற் சேர்ந்து
தானந்த மாகித் தற்பர வெளியில்
ஆனந்த போத அறிவைக் கலந்து
புவனத் தொழிலைப் பொய்யென் றுணர்ந்து
மவுன முத்திரையை மனத்தினி லிருத்திப்
பெண்டு பிள்ளை பண்டு பதார்த்தங்
கண்டது மாயைக் கனவென வுணர்ந்து
எல்லா முன்செய லென்றே யுணர
நல்லா யுள்ளருள் நாட்டந் தருவாய்
காரண குருவே கற்பகக் களிறே
வாரண முகத்து வள்ளலே போற்றி
நித்திய பூசை நைவேத் தியமும்
பக்தியாய்க் கொடுத்துப் பரமனே போற்றி
ஏத்திய னுதின மெளியேன் பணியக்
கூற்றினை யுதைத்த குளிர்பதந் தந்து
சுக மதுர வமிர்த மளித்துப்
பேக ஞானப் பேறெனக் கருளி
மனத்தில் நினைத்த மதுர வாசகம்
நினைவிலும் கனவிலும் நேசம் பொருந்தி

அருண கிரியா ரவ்வை போலக்
கருத்து மிகுந்து கவிமழை பொழிய
வாக்குக் கெட்டா வாழ்வை யளித்து
நோக்கரு ஞான நோக்கு மளித்து
இல்லற வழ்க்கை யிடையூ றகற்றிப்
புல்ல ரிடத்திற் புகுந்துழ லாமல்
ஏற்ப திகழ்ச்சி யென்ப தகற்றிக்
காப்ப துனக்குக் கடன்கண் டாயே
நல்வினை தீவினை நாடி வருகினுஞ்
செல்வினை யெல்லாஞ் செயலுன தாமால்
தந்தையும் நீயே தாயும் நீயே
எந்தையும் நீயே ஈசனும் நீயே
போத ஞானப் பொருளும் நீயே
நாதமும் நீயே நான்மறை நீயே
அரியும் நீயே அயனும் நீயே
திரிபுர தகனஞ் செய்தவன் நீயே
சக்தியும் நீயே சதாசிவம் நீயே
புத்தியும் நீயே புராந்தகன் நீயே
பக்தியும் நீயே பந்தமும் நீயே
முத்தியும் நீயே மோட்சமும் நீயே
ஏகமும் நீயே என்னுயிர் நீயே
தேகமும் நீயே தேவனும் நீயே
உன்னரு ளன்றி உயிர்த்துணை காணேன்
பின்னொரு தெய்வம் பேசவு மறியேன்
வேதனை கொடுத்த மெய்யிது தன்னில்
வாத பித்தம் வருத்திடு சிலேத்துமம்
மூன்று நாடியும் முக்குண மாகித்
தோன்றும் வினையின் துன்ப மறுத்து
நாலா யிரத்து நானூற்று நாற்பத்தெட்டு
மேலாம் வினையை மெலியக் களைந்து
அஞ்சா நிலைமை யருளிய நித்தன்
பஞ்சாட் சரநிலை பாலித் தெனக்கு

செல்வமும் கல்வியுஞ் சீரும் பெருக
நல்வர மேதரும் நான்மறை விநாயக
சத்திய வாக்குச் சத்தா யுதவிப்
புத்திரனே தரும் புண்ணிய முதலே
வெண்ணீ ரணியும் விமலன் புதல்வா
பெண்ணா முலையாள் பெற்றிடுந் தேவே
அரிதிரு மருகா அறுமுகன் றுணைவா
கரிமுக வாரணக் கணபதி சரணம்
குருவே சரணம் குணமே சரணம்
பெருவயி றோனே பொற்றாள் சரணம்
கண்ணே மணியே கதியே சரணம்
விண்ணே யொளியே வேந்தே சரணம்
மானத வாவி மலர்த்தடத் தருகிற்
றானத்தில் வாழும் தற்பரா சரணம்
உச்சிப் புருவத் துதித்துல களிக்குஞ்
சச்சி தானந்த சற்குரு சரணம்
விக்கின விநாயகா தேவே ஓம்
அரகர சண்முக பவனே ஓம்
சிவ சிவ மஹாதேவ சம்போ ஓம்!!

(நல்லனவெல்லாம் தரும்)
நக்கீரர் அருளிய
திருவிநாயகர் திருவகவல் நிறைவுற்றது.



காசிப முனிவர் அருளிச்செய்த

# விநாயகர் கவசம்

திருச்சிற்றம்பலம்

ஆதியில் இக் கவசத்தைக் காசிபமுனிவர் முற்கல முனிவருக்கு அருளிச்செய்ய. அவர் மாண்டவியமுனிவருக்கு அநுக்கிரக்கிக்க அவர் மரீசிமுனிவருக்கு உபதேசித்தருள, அவர் பல முனிவர்களுக்குத் திருவாய் மலர்தருளிச் செய்தனரென்றறிக.

நித்திய கருமங்களை முடித்துப் பரிசுத்தமாகிய ஒரிடத்தில் இருந்து கொண்டு, ஒன்று பட்ட மனத்துடனே விநாயகரைத் தியானித்து, இதைச் செபிக்கவேண்டும்.

வளர்ச்சிகையைப் பராபரமாய் வயங்குவிநா
யகர்காக்க; வாய்த்த சென்னி
அளவுபடா அதிகசௌந் தரதேக
மகோற்கடர்தாம் அமர்ந்து காக்க;
விளரறநெற் றியையென்றும் விளங்கியகா
சிபர்காக்க; புருவந் தம்மைத்
தளர்வில்மகோ தரர்காக்க; தடவிழிகள்
பாலசந் திரனார் காக்க;

கவின் வளரும் அதரங்கச முகர்காக்க;
தாள் அங்கணக் கிரீடர் காக்க;
நவில்சிபுகம் கிரிசைசுதர் காக்க; நனி
வாக்கைவிநா யகர்தாம் காக்க;
அவிர்நகைதுன் முகர்காக்க அள் எழிற்செஞ்
செவிபாச பாணி காக்க;
தவிர்தலுறா திளங்கொடி போல் வளர்மணிநா
சியைச்சிந்தி தார்த்தர் காக்க;

காமருபூ முகந் தன்னைக் குணேசர்நனி
காக்க; களம் கணேசர் காக்க;
வாமமுறு இருதோளும் வயங்குகந்த
பூர்வசர்தாம் மகிழ்ந்து காக்க;
ஏமமுறு மணிமுலைவிக் கினவிநா
சன்காக்க இதயந் தன்னைத்
தோமகலுங் கணநாதர் காக்க; அகட்
டினைத் துலங்கு ஏரம்பர் காக்க;

பக்கமிரண் டையுந்தரா தரர் காக்க;
பிருட்டத்தைப் பாவம் நீக்கும்
விக்கினகரன் காக்க; விளங்கிலிங்கம்
வியாளபூ டணர்தாம் காக்க;
தக்ககுய்யந் தன்னைவக் கிரதுண்டர்
காக்க; சகனத்தை அல்லல்
உக்ககண பன்காக்க; ஊருவைமங்
களமூர்த்தி உவந்து காக்க;

தாமுழந்தாள் மகாபுத்தி காக்க; இரு
பதம்ஏக தந்தர் காக்க;
வாழ்கரம்கிப் பிரப்பிரசா தனர்காக்க;
முன்கையை வணங்கு வார்நோய்
ஆழ்தரச் செய் ஆசாபூ ரகர்காக்க
விரல்பதும அத்தர் காக்க;
கேழ்கிளரும் நகங்கள்விநா யகர்காக்க;
கிழக்கினிற்புத் தீசர் காக்க;

அக்கினியிற் சித்தீசர் காக்க; உமா
புத்திரர்தென் னாசை காக்க;
மிக்கநிரு தியிற்கணே சுரர்காக்க;
விக்கினவர்த் தனர்மேற்கென்னுந்
திக்கதனிற் காக்க; வாயுவிற்கசகன்
னர்காக்க; திகழு தீசி
தக்கநிதி பன்காக்க; வடகிழக்கில்
ஈசநந் தனரே காக்க;

ஏகதந்தர் பகல்முழுதுங் காக்க; இர
வினுஞ்சந்தி இரண்டன் மாட்டும்
ஓகையின்விக் கினகிருது காக்க; இராக்
கதர்பூதம் உறுவே தாளம்
மோனியைபேய் இவையாதி உயிர்த்திறத்தால்
வருந்துயரும் முடிவி லாத
வேகமுறு பிணிபலவும் விலக்குபா
சாங்குசர்தாம் விரைந்து காக்க;

மதிஞானம் தவம்தானம் மானம்ஒளி
புகழ்குலம்வண் சரீரம் முற்றும்
பதிவான தனம்தானி யம்கிருகம்
மனைவிமைந்தர் பயில்நட் பாதிக்
கதியாவுங் கலந்துசர்வா யுதர்காக்க;
காமர்பவுத் திரர்முன் னான
விதியாருஞ்சுற்றமெலாம் மயூரேசர்
எஞ்ஞான்றும் விரும்பிக் காக்க;

வென்றிசீ விதங்கபிலர் காக்க; கரி
யாதியெலாம் விகடர் காக்க;
என்றிவ்வா றிதுதனைமுக் காலமுமோ
திடின்நும்பால் இடையூறு ஒன்றும்
ஒன்றுறா, முனிவர்காள் ! அறிமின்கள்
யாரொருவர் ஓதினாலும்
மன்றஆங் கவர்தேகம் பிணியறவச்
சிரதேக மாகி மன்னும்.

திருச்சிற்றம்பலம்

பக்தியுடனே இந்தக் கவசத்தைப் பாராயணஞ் செய்பவர்களுக்குப் பிணியும், வறுமையும், பேய் பூதங்களாலுண்டாகின்ற பல துன்பங்களும், கவலைகளும், பாவமுதலியவைகளும் நீங்கும், அன்றியும், பெருஞ் செல்வமும், தீர்க்காயுளும், களத்திர புத்திர மித்திராதிகளும் உண்டாகும். அன்றியும், யாத்திரையிலே இதைச் செபித்தால் சகல விக்கினமும் போய்ப் பயன்களெல்லாம் கைகூடும். யுத்தத்திலே இதைச் சொன்னால் சயமுண்டாகும். இருபத்தொருநாள் நாளொன்றுக்கு ஏழுமுறை தோத்திரஞ் செய்தால். மாரண நீங்குவதன்றி உச்சாடனம் ஆகருஷணம், ஸ்தம்பண முதலியவைகள் பயனுறும், இருபத்தொருநாள் நித்தியம் இருபத்தொருதரஞ் செபித்தால் சிறையிருப்பு விடுதலாவதுமன்றி, அரசர்களுடைய நிஷ்டூரமு நீங்கும், அரசனைக் காணப்போகும் போது பத்தியினால் மூன்றுதரம் இதை ஒதினால் அவன் வசப்படுவான். இதைப் படித்தாலும் ஒருவர் சொல்லக்கேட்டாலும் பூசித்தாலும், எப்படிப்பட்ட துன்பமும் நீங்கும்.

# வருகக் கோவை

| | |
|---|---|
| அன்புடைக்கடவுளர்க்கதிபதி | செயசெய |
| ஆபத்தகற்றுமைங்கர | செயசெய |
| இந்துச்சடைமுடியிறைவா | செயசெய |
| ஈசன்பெற்றஎம்மான் | செயசெய |
| உன்னியமுடிக்குமொருவா | செயசெய |
| ஊர்மனைசந்தியுகந்தாய் | செயசெய |
| எம்பெருமானேயேகனே | செயசெய |
| எழுலகுந்தொழவிருப்பாய் | செயசெய |
| ஐயாகணங்கட்காதீ | செயசெய |
| ஒற்றைமருப்பையுடையாய் | செயசெய |
| ஓங்கியகரிமுகமுற்றாய் | செயசெய |
| ஔவியமில்லாதவனே | செயசெய |
| அஃரவணிந்தவாதீ | செயசெய |
| கண்மூன்றுடையகளிறே | செயசெய |
| ஙப்பொன்மழுவொன்றேந்தீ | செயசெய |
| சங்கரன்றேரச்சறுத்தாய் | செயசெய |
| ஞயமுடையவித்தகநம்பீ | செயசெய |
| இடமுடைவிக்கினேசுரா | செயசெய |
| இணங்கியவன்பர்க்கினியாய் | செயசெய |
| தத்துவமுறைதருசாமீ | செயசெய |
| நன்னெறிவித்தகநம்பீ | செயசெய |
| பகீரதிக்கினியபாலா | செயசெய |
| மன்றுளாடிமகனே | செயசெய |
| இயக்கரைக்களையுமிறைவா | செயசெய |
| அரவக்கிண்கிணியணிவாய் | செயசெய |
| இலகக்கொம்பொன்றேந்தீ | செயசெய |
| வஞ்சனைப்பழவினைமாற்றுவாய் | செயசெய |
| அழகியவேலனுக்கண்ணா | செயசெய |
| இளமதயானைமுகத்தாய் | செயசெய |

இறக்கரிசாடுமிறைவா செயசெய
அனந்தலாடுமரசே செயசெய
கரமைந்துடையகணபதி செயசெய
காமன்பகைவன்காதல செயசெய
கிரியிற்பாரதந்தீட்டினாய் செயசெய
கீழ்மையொழித்துக்கிளர்வாய் செயசெய
குண்டப்பண்டிக்குருவே செயசெய
கூறியமும்மதக்கோவே செயசெய
கெண்டையங்கண்ணுமைமகனே செயசெய
கேதாரப்பிர்யமானாய் செயசெய
கையிற்சக்கர முடையாய் செயசெய
கொவ்வைக்கனிவாய்மதலாய் செயசெய
கோலக்குடநிகர்வயிற்றாய் செயசெய
கௌவைப்பழவினைதீர்ப்பாய் செயசெய



சுன்னாகம் வரதபண்டிதர் அருளிய

# பிள்ளையார் கதை

## காப்பு

கரும்பும் இளநீருங் காரெள்ளுந் தேனும்
விரும்பும் அவல்பலவும் மேன்மேல் - அருந்திக்
குணமுடைய னாய்வந்து குற்றங்கள் தீர்க்குங்
கணபதியே இக்கதைக்குக் காப்பு.

திருவிளங்கு மான்மருகா சேவதனில் ஏறி
வரும் அரன்றாள் ஈன்றருளும் மைந்தா - முருகனுக்கு
முன்பிறந்த யானை முகவா உனைத்தொழுவேன்
என்கதைக்கு நீஎன்றுங் காப்பு.

## விநாயகர் துதி

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமு கத்தானைக்
காதலாற் கூப்புவர்தம் கை.

ஒற்றை மருப்பும் ஓரிரண்டு கைத்தலமும்
வெற்றி புனைந்த விழிமூன்றும் - பெற்றதொரு
தண்டைக்கால் வாரணத்தைத் தன்மனத்தில் எப்பொழுதுங்
கொண்டக்கால் வாராது கூற்று.

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்து உனக்கு நான்தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ்மூன்றும் தா.

## சப்பாணி

எள்ளு பொரிதேன் அவல்அப்பமிக்கும் பயறும் இளநீரும்
வள்ளிக் கிழங்கும் மாம்பழமும் வாழைப்பழமும் பலாப்பழமும்
வெள்ளைப்பாலும் மோதகமும் விரும்பிப் படைத்தேன் சந்நிதியில்
கொள்ளைக் கருணைக் கணபதியேகொட்டி அருள்க சப்பாணி.

சண்டப் பெருச்சாளி ஏறிச் சடைகொண்டு வையத் துலாவி
அண்டத்து அமரர் துதிக்க அடியார்க்கு அருளும் பிரானே
எண்திக்கும் அன்பர்கள் பார்க்க இணையற்ற பேரொளி வீசக்
குண்டைக் கணபதி நம்பி கொடுங்கையாற் சப்பாணி கொட்டே.

## சரஸ்வதி துதி

புத்தகத்துள்ளுறை மாதே பூவில் அமர்ந்திடு வாழ்வே
வித்தகப் பெண்பிள்ளாய் நங்காய் வேதப் பொருளுக்கு இறைவீ
முத்தின் குடைஉடை யாளே மூவுல குந்தொழுது ஏத்துஞ்
செப்புக் கவித்த முலையாய் செவ்வரி ஓடிய கண்ணாய்.
தக்கோலந் தின்னும் வாயாய் சரஸ்வதி என்னுந் திருவே
எக்காலமும் உன்னைத் தொழுவேன் இயலிசை நாடகம் என்னும்
முத்தமிழ்க் கல்விகள் எல்லாம் முழுதும் எனக்கருள் செய்துஎன்
சித்தந் தனில்நீ இருந்து திருவருள் செய்திடு வாயே.

## அதிகாரம்

பொன்னிறங் கடுக்கும் புனற்செறி குடுமித்
தென்மலை இருந்த சீர்சால் முனிவன்
கந்த மும்மதக் கரிமுகன் கதைதனைச்
செந்தமிழ் வகையால் தெளிவுறச் செப்பினன்
அன்னதிற் பிறவில் அரிறபத்திரட்டித்
தொன்னெறி விளங்கச் சொல்லுவன் கதையே.

## கதை

மந்தர கிரியில் வடபால் ஆங்கு ஓர்
இந்துதவழ் சோலை இராசமா நகரில்
அந்தணன் ஒருவனும் ஆயிழை ஒருத்தியுஞ்
சுந்தரப் புதல்வரைப் பெறுதல் வேண்டிக்
கடவுள் ஆலயமுங் கடிமலர்ப் பொய்கையும்
தடநிழற் பள்ளியுந் தாம்பல சமைத்துப்
புதல்வரைத் தருகெனப் பொருப்பு அரசு ஈன்ற
மதர்விழி பாகனை வழிபடும் நாளில்
மற்றவர் புரியும் மாதவங் கண்டு
சிற்றிடை உமையாள் சிவன்அடி வணங்கிப்
பரனே சிவனே பல்லுயிர்க்கு உயிரே
அரனே மறையவர்க்கு அருள் புரிந்து அருளென
அந்த அந்தணனுக்கு இந்தநற் பிறப்பில்
மைந்தரில்லை என்று மறுத்து அரன் உரைப்ப
எப்பரிசு ஆயினும் எம்பொருட்டு ஒருசுதன்
தப்பிலா மறையோன் தனக்கு அருள் செய்கென
எமையா ளுடைய உமையாள் மொழிய
இமையா முக்கண் இறைவன் வெகுண்டு
பெண்சொற் கேட்டல் பேதைமை என்று
பண்சொற் பயிலும் பாவையை நோக்கிப்
பேதாய் நீபோய்ப் பிறஎன மொழிய
மாதுமை அவளும் மனந்தளர்வு உற்றுப்
பொன்றிடும் மானிடப் புன்பிறப்பு எய்துதல்
நன்றல என்றே நடுக்கமுற்று உரைப்பக்
கறைமிடற்று அண்ணல் கருணை கூர்ந்து
பிறைநுதல் அவட்குநீ பிள்ளை யாகச்
சென்றுஅவண் வளர்ந்து சிலபகல் கழித்தால்
மன்றல் செய்து அருள்வோம் வருந்தலை என்று
விடைகொடுத்து அருள விலங்கல்மா மகளும்
பெடைமயிற் சாயற் பெண்மகவு ஆகித்
தார்மலி மார்பன் சதுர்மறைக் கிழவன்
சீர்மலி மனைவி திருவயிற்று உதித்துப்

பாவையுஞ் சிற்றிலும் பந்தொடு கழங்கும்
யாவையும் பயின்ற இயல்பினள் ஆகி
ஐயாண்டு அடைந்தபின் அன்னையும் அத்தனும்
மையார் கருங்குழல் வாணுதல் தன்னை
மானுட மறையோர்க்கு வதுவை செய்திடக்
கான்அமர் குழலியைக் கருதிக் கேட்பப்
பிறப்பு இறப்பு இல்லாப் பெரியோர்க்கு அன்றி
அறத்தகு வதுவைக்கு அமையேன் யான்என
மற்றவன் தன்னை உன் மணமக னாகப்
பெற்றிடல் அரிதெனப் பெயர்த்து அவர் பேச
அருந்தவ முயற்சியால் அணுகுவேன் யான்எனக்
கருந்தட நெடுங்கண் கவுரிஅங்கு உரைப்ப
மருமலி கமல மலர்த்தடத்து அருகில்
தருமலி நிழல்தவச் சாலையது அமைத்துப்
பணியணி பற்பல பாங்கியர் சூழ
அணிமலர்க் குழல்உமை அருந்தவம் புரிதலும்
அரிவை தன்அருந்தவம் அறிவோம் யாம்என
இருவரும் அறியா இமையவர் பெருமான்
மான்இடம் ஏத்தும் வண்ணமது ஒழிந்து
மானிட யோக மறையவன் ஆகிக்
குடையொடு தண்டுநற் குண்டிகை கொண்டு
மடமயில் தவம்புரி வாவிக்கரையிற்
கண்ணுதல் வந்து கருணை காட்டித்
தண்நறுங் கூந்தல் தையலை நோக்கி
மின்பெறு நுண்இடை மெல்லிய லாய்நீ
என்பெறத் தவம் இங்கு இயற்றுவது என்றலுங்
கொன்றைவார் சடையனைக் கூடஎன்று உரைத்தலும்
நன்றுஎனச் சிரித்து நான்மறை யோனும்
மாட்டினில் ஏறி மான்மழு தரித்துக்
காட்டினிற் சுடலையிற் கணத்துடன் ஆடிப்
பாம்பும் எலும்பும் பல்தலை மாலையுஞ்
சாம்பரும் அணிந்து தலையோடு ஏந்திப்
பிச்சைகொண்டு உழலும் பித்தன் தன்னை

நச்சிநீர் செய்தவம் நகைதரும் நுமக்கெனப்
பூங்கொடி அருந்தவம் பூசுரன் குலைத்தலும்
ஆங்கு அவள் நாணமுற்று அணிமனை புகுதச்
சேடியர் வந்து செழுமலர் குழலியை
வாடுதல் ஒழிகென மனம்மிகத் தேற்றிச்
சிந்துர வாள்நுதற் சேடியர் சிலர்போய்த்
தந்தைதாய் இருவர் தாளிணை வணங்கி
வாவிக் கரையில் வந்து ஒரு மறையோன்
பாவைதன் செங்கையைப் பற்றினன் என்றலுந்
தோடுஅலர் கமலத் தொடைமறை முனியை
ஆடக மாடத்து அணிமனை கொணர்களென
மாடக யாழ்முரல் மங்கையர் ஓடி
நீடிய புகழாய் நீ எழுந்து அருள்என
மைமலர்க் குழலி வந்து எனை அழைக்கில்
அம்மனைப் புகுவன்என்று அந்தணன் உரைத்தலும்
பொற்றொடி நீபோய்ப் பொய்கையில் நின்ற
நற்றவ முன்னியை நடாத்திக் கொணர்கென
சிவனை இகழ்ந்த சிற்றறி வுடையோன்
அவனை யான்சென்று இங்கு அழைத்திடேன் என்று
சிற்றிடை மடந்தையுஞ் சீறின ளாகி
மற்றைய மாதர் மதிமுகம் நோக்கி
நெற்றியிற் கண்ணுடை நிமலனுக்கு அல்லதென்
பொற்புஅமர் கொங்கை பொருந்துதற்கு அரிதால்
மானிட வேட மறையவன் தனக்கு
யான்வெளிப் படுவ தில்லை என்று இசைப்ப
மனையிடை வந்த மாமுனி தன்னை
இணைஅடி தொழுதல் இளையோர்க்கு இயல்பெனத்
தந்தையுந் தாயுந் தகைபெற மொழியச்
சிந்தை குளிர்ந்து சீறுதல் ஒழிந்து
தாய்சொல் மறுத்தல் பாவம் என்று அஞ்சி
ஆயிழை தானும் அவன்எதிர் சென்று
சுற்றிவந்து அவனடி சுந்தரி வணங்கி
மற்றவன் தன்னை மனையிற் கொணர்ந்து
ஆதியம் பகவற்கு அன்பன் ஆகும்

வேதியன் பழைய விருத்தன்என்று எண்ணி
ஆசனம் நல்கி அருக்கியம் முதலாய்ப்
பாதபூ சனைகள் பண்ணிய பின்னர்ப்
போனகம் படைத்துப் பொரிக்கறி பருப்புநெய்
ஆன்பால் மாங்கனி அழகிய பலாச்சுளை
தேன்கத லிப்பழஞ் சீர்பெறப் படைத்து
அந்தணன் தன்னை அமுது செய்வித்துச்
சந்தனங் குங்குமச் சாந்திவை கொடுத்துத்
தக்கோ லத்தொடு சாதிக்காயும்
கற்பூரத் தொடு கவின்பெறக் கொண்டு
வெள்ளிலை அடைக்காய் விளங்கிய பொன்னின்
ஒள்ளிய தட்டில் உவந்துமுன் வைத்துச்
சிவன்எனப் பாவனை செய்து நினைந்து
தவமுறை முனிவனைத் தாளிணை வணங்கத்
தேன்அமர் குழலி திருமுகம் நோக்கி
மோனமா முனிபுன் முறுவல் காட்டிக்
கற்றைச் சடையுங் கரமொரு நான்கும்
நெற்றியில் நயனமும் நீலகண்டமும்
மானும் மழுவும் மலர்க்கரத்து இலங்கக்
கூன்மதி நிலவுங் கொழித்திட முடிமேல்
வரந்தரு முதல்வன் மடமயில் காணக்
கரந்ததன் உருவங் காட்டிமுன் நிற்ப
மரகத மேனி மலைமகள் தானும்
விரைவொடு அங்கு அவன்அடி வீழ்ந்து இறைஞ் சினளே
அரிஅயன் இந்திரன் அமரர் விஞ்சையர்
கருடர் கின்னரர் காய வாசியர்
ஏதமில் முனிவர் அவுணர் இராக்கதர்
பூதர் இயக்கர்கிம் புருடர் அலகை
சித்தர் தாரகைகந்த ருவர்கள் முதலாய்க்
கணிக்கரும் பதினெண் கணத்தில்உள் ளவரும்
மணிக்கருங் களத்தனை வந்தடைந்து அதன்பின்
மன்றல்அங் குழலிக்கு வதுவைநாள் குறித்துத்
தென்றல்வந்து இலங்கு முன்றில் அகத்துப்
பொன்திகழ் பவளப் பொற்கால் நாட்டி

மாணிக் கத்தால் வளைபல பரப்பி
ஆணிப்பொன் தகட்டால் அழகுற வேய்ந்து
நித்தில மாலை நிரைநிரை தூக்கிப்
பத்திகள் தோறும் பலமணி பதித்துத்
தோரணம் நாட்டித் துகில்விதா னித்துப்
பூரண பொற்குடம் பொலிவுற வைத்துத்
திக்குத் தோறுந் திருவிளக்கு ஏற்றிப்
பக்திப் படர்முளைப் பாலிகை பரப்பிக்
கன்னலுங் கமுகுங் கதலியும் நாட்டிப்
பன்மலர் நாற்றிப் பந்தர்சோ டித்து
நலமிகு கைவலோர் நஞ்சுஅணி மிடற்றனைக்
குலவிய திருமணக் கோலம் புனைந்தார்
வருசுரர் மகளிர் மலைமகள் தன்னைத்
திருமணக்கோலஞ் செய்தனர் ஆங்கே
எம்பிரா னையும் இளங்கொடி தன்னையும்
உம்பர் எல்லாம் ஒருங்குடன் கூடிக்
கடல்என விளங்குங் காவணந் தன்னிற்
சுடர்விடு பவளச் சுந்தரப் பலகையில்
மறைபுகழ்ந்து ஏத்த மகிழ்ந்து உட னிருத்திப்
பறைஒலி யோடு பனிவளை ஆர்ப்ப
வதுவைக்கு ஏற்ற மறைவிதி நெறியே
சதுர்முகன் ஓமச் சடங்குகள் இயற்றத்
தறுகலன் ஒளிபொன் தாலி பூட்டிச்
சிறுமதி நுதலியைச் சிவன்கைப் பிடித்தபின்
அரிவலஞ் சூழ எரிவலம் வந்து
பரிவுடன் பரிமளப் பாயலில் வைகிப்
போதுஅணி கருங்குழற் பூவைதன் உடனே
ஓதநீர் வேலைசூழ் உஞ்சை அம்பதிபுக
ஏரார் வழியின் எண்திசை தன்னைப்
பாரா தேவா பனிமொழி நீஎன
வரும்கருங் குழலாள் மற்றும்உண் டோஎனத்
திருந்துஇழை மடந்தை திரும்பினள் பார்க்கக்
களிறும் பிடியும் கலந்துவிளை யாடல்கண்டு
ஒளிர்மணி பூணாள் உரவோன் உடனே

இவ்வகை யாய்விளை யாடுவோம் ஈங்கென
அவ்வகை அரனும் அதற்குஉடன் பட்டு
மதகரி உரித்தோன் மதகரி யாக
மதர்விழி உமைபிடி வடிவம தாகிக்
கூடிய கல்வியிற் குவலயம் விளங்க
நீடிய வானோர் நெறியுடன் வாழ
அந்தணர் சிறக்க ஆனினம் பெருகச்
செந்தழல் வேள்விவேத ஆகமஞ் சிறக்க
அறம்பல பெருக மறம்பல சுருங்கத்
திறம்பல அரசர் செகதலம் விளங்க
வெங்கரி முகமும் வியன்புழைக் கையொடு
ஐங்கர தலமும் மலர்ப்பதம் இரண்டும்
பவளத்து ஒளிசேர் பைந்துவர் வாயுந்
தவளக் கிம்புரித் தடமருப்பு இரண்டுங்
கோடிசூ ரியர்போற் குலவிடு மேனியும்
பேழைபோல் அகன்ற பெருங்குட வயிறும்
நெற்றியில் நயனமும் முப்புரி நூலுங்
கற்றைச் சடையுங் கனகநீள் முடியுந்
தங்கிய முறம்போல் தழைமடிச் செவியுமாய்
ஐங்கரத்து அண்ணல் வந்து அவ தரித்தலும்
பொங்கரவு அணிந்த புண்ணிய மூர்த்தியும்
மங்கை மனமிக மகிழ்ந்து உடன் நோக்கி
விண்ணு ளோர்களும் விரிந்தநான் முகனு
மண்ணு ளோர்களும் வந்துஉனை வணங்க
ஆங்குஅவர் தங்கட்கு அருள்கரந்து அருளித்
தீங்கது தீர்த்துச் செந்நெறி அளித்துப்
பாரண மாகப் பலகனி அருந்தி
ஏரணி ஆலின்கீழ் இனிதிரு என்று
பூதலந் தன்னிற் புதல்வனை இருத்திக்
காதல்கூர் மடநடைக் கன்னியுந் தானும்
மைவளர் சோலை மாநகர் புகுந்து
தெய்வ நாயகன் சிறந்துஇனிது இருந்தபின்
வானவ ராலும் மானுட ராலுங்
கான்அமர் கொடிய கடுவிலங் காலுங்

கருவிக ளாலுங் கால னாலும்
ஒருவகை யாலும் உயிர்அழி யாமல்
திரம்பெற மாதவஞ் செய்துமுன் னாளில்
வரம்பெறு கின்ற வலிமையி னாலே
ஐமுகச் சீயமொத்து அடற்படை சூழக்
கைமுகம் படைத்த கயமுகத்து அவுணன்
பொன்னுலகு அழித்துப் புலவரை வருத்தி
இந்நிலத்தவரை இடுக்கண் படுத்திக்
கொடுந்தொழில் புரியுங் கொடுமைகண்டு ஏங்கி
அடுந்தொழிற் குலிசத்து அண்ணலும் அமரரருங்
கறைபடு கண்டக் கடவுளைப் போற்றி
முறையிடக் கேட்டு முப்புரம் எரித்தோன்
அஞ்சலீர் என்று அவர்க்கு அபயங் கொடுத்தே
அஞ்சுகைக் கரிமுகத்து அண்ணலை நோக்கி
ஆனை மாமுகத்து அவுணனொடு அவன்தன்
சேனைகள் முழுவதுஞ் சிந்திடப் பொருது
குன்றுபோல் வளர்ந்த குறட்படை கூட்டி
வென்றுவா என்று விடைகொடுத்து அருள
ஆங்குஅவன் தன்னோடு அமர்பல உடற்றிப்
பாங்குறும் அவன்படை பற்றுஅறக் கொன்றபின்
தேர்மிசை ஏறிச் சினங்கொடு செருவிற்
கார்முகம் வளைத்த கயமுகா சுரன்மேல்
ஒற்றை வெண் மருப்பை ஒடித்து அவன் உரத்திற்
குற்றிட எறிந்தான் குருதிசோர்ந் திடவே
சோர்ந்து அவன் வீழ்ந்து துண்ணென எழுந்து
வாய்ந்தமூ டிகமாய் வந்துஅவன் பொரவே
வந்த மூடிகத்தை வாகனம் ஆக்கி
எந்தை விநாயகன் ஏறினன் இப்பால்
எறிந்தவெண் மருப்புஅங்கு இமைநொடி அளவிற்
செறிந்தது மற்றவன் திருக்கரத் தினிலே
வெல்லவைக் கதிர்வேல் விழிபடைத்து அருளும்
வல்லவை தனைத்தன் மனைஎன மணந்தே
ஓகையோடு எழுந்து ஆங்கு உயர்படைசூழ
வாகையும் புனைந்து வரும்வழி தன்னிற்

கருச்சங் கோட்டிக் கயல்கமுகு ஏறுந்
திருச்செங் காட்டிற் சிவனை அர்ச் சித்துக்
கணபதீச் சரம்எனுங் காரண நாமம்
பணபதி புகழ்தரு பதிக்குஉண் டாக்கிச்
சங்கரன் பார்பதி தனிமனம் மகிழ
இங்குவந்து அன்புடன் எய்திய பின்னர்க்
கணங்களுக்கு அரசாய்க் கதிர்முடி சூட்டி
இணங்கிய பெருமைபெற்று இருந்திட ஆங்கே
தேவர்கள் முனிவர் சித்தர்கந் தருவர்
யாவரும் வந்துஇவண் ஏவல்செய் திடுநாள்
அதிகமாய் உரைக்கும் ஆவணித் திங்களின்
மதிவளர் பக்கம் வந்திடு சதுர்த்தியில்
விநாயகர்க்கு உரிய விரதம் என்றுஎண்ணி
மனாதிகள் கழித்து மரபொடு நோற்றார்
இப்படி நோற்றிட எண்ணிய பெருநாள்
ஒப்பரும் விரதத்து உறும்ஒரு சதுர்த்தியில்
நோற்றுநற் பூசை நுடங்காது ஆற்றிப்
போற்றிசெய் திட்டார் புலவர் ஐங்கரனை
மருமலர் தூவும் வானவர் முன்னே
நிருமலன் குமரன் நிருத்தம் புரிந்தான்
அனைவரும் கைதொழுது அடிஇணை போற்ற
வனைகழற் சந்திரன் மனச்செருக்கு அதனால்
பேழைபோல் வயிறும் பெருத்தகாத் திரமும்
தாழ்துளைக் கையுந் தழைமுறச் செவியுங்
கண்டனன் நகைத்தான் கரிமுகக் கடவுளுங்
கொண்டனன் சீற்றங் குபேரனை நோக்கி
என்னைக் கண்டுஇங்கு இகழ்ந்தனை சிரித்தாய்
உன்னைக் கண்டவர் உரைக்கும்இத் தினத்திற்
பழியொடு பாவம் பலபல விதனமும்
அழிவும்எய் துவரென்று அசனிபோற் சபித்தான்
விண்ணவர் எல்லாம் மிகமனம்வெருவிக்
கண்ணருள் கூருங் கடவுள்இத் தினத்திற்
கோரவெஞ் சினமிகக் கொண்டனன் அந்நாள்
மார்கழித் திங்கள் மதிவளர் பக்கஞ்

சதயந் தொட்ட சட்டிநல்விரதமென்று
இதயத்து எண்ணி யாவரும் நோற்றனர்
இப்புவி மாந்தர் இயம்பிய விரதம்
வைப்புடன் நோற்ற வகைஇனிச் சொல்வாம்
குருமணி முடிபுனை குருகுலத் துதித்த
தருமனும் இளைய தம்பியர் நால்வருந்
தேவகி மைந்தன் திருமுகம் நோக்கி
எண்ணிய விரதம் இடையூறு இன்றிப்
பண்ணிய பொழுதே பலிப்பு உண்டாகவுஞ்
செருவினில் எதிர்த்த செறுநரை வென்று
மருமலர்ப் புயத்தில் வாகை சூடவும்
எந்தத் தெய்வம் எவ்விர தத்தை
வந்தனை செய்யில் வருநமக்கு உரையெனப்
பாட்டுஅளி துதையும் பசுந்துழாய் மார்பனுங்
கேட்டருள் வீர்எனக் கிளர்த்துதல் உற்றான்
அக்குநீ றணியும் அரன்முதல் அளித்தோன்
விக்கினந் தீர்க்கும் விநாயக மூர்த்தி
ஓடவைத் திடும்பொன் ஒத்துஒளி விளங்குங்
கோடி சூரியர்போற் குலவிய மேனியன்
கடகரி முகத்தோன் காத்திரம் பெருத்தோன்
தடவரை போலுஞ் சதுர்ப்புயம் உடையோன்
சர்வ ஆபரணமுந் தரிக்கப் பட்டவன்
உறுமதிக் குழவிபோல் ஒருமருப்பு உடையோன்
ஒருகையில் தந்தமும் ஒரு கையிற் பாசமும்
ஒருகையில் மோதகம் ஒருகையிற் செபஞ்செய்
உத்தம மாலையோன் உறுநினை வின்படி
சித்திசெய் வதனாற் சித்திவி நாயகன்
என்றுஇமை யவரும் யாவருந் துதிப்ப
நன்றி தருந்திரு நாமம் படைத்தோன்
புரவலர் காணப் புறப்படும் போதுஞ்
செருவினில் யுத்தஞ் செய்திடும் போதும்
வித்தியா ரம்பம் விரும்பிடும் போதும்
உத்தியோ கங்கள் உஞற்றிடும் போதும்
ஆங்குஅவன் தன்னை அருச்சனை புரிந்தால்

தீங்குஉறாது எல்லாஞ் செயம்உண் டாகும்
கரதலம் ஐந்துடைக் கணபதிக்கு உரிய
விரதம்ஒன் றுஉளதுஅதை விரும்பிநோற் றவர்க்குச்
சந்ததி தழைத்திடுஞ் சம்பத்து உண்டாம்
புந்தியில் நினைந்த பொருள்கை கூடும்
மேலவர் தம்மையும் வென்றிட லாம்எனத்
தேவகி மைந்தன் செப்பிடக் கேட்டு
நுவலரும் விரதம் நோற்றிடும் இயல்பும்
புகர்முகக் கடவுளைப் பூசைசெய் விதமும்
விரித்துஎமக்கு உரைத்திட வேண்டும் என்று இரப்ப
வரைக்குடை கவித்தோன் வகுத்துஉரை செய்வான்
தேருநீர் ஆவணித் திங்களின் மதிவளர்
பூர்வ பக்கம் புணர்ந்திடு சதுர்த்தியின்
முந்தும் புலரியின் முறைநீர் படிந்து
சந்தி வந்தனந் தவறாது இயற்றி
அத்தினம் அதனில் ஐங்கரக் கடவுளைப்
பக்தியோடு அர்ச்சனை பண்ணுதல் வேண்டும்
வெள்ளியாற் பொன்னால் விளங்கும் அவன்றன்
ஒள்ளிய அருள்திரு உருஉண் டாக்கிப்
பூசனை புரியப் புகன்றனர் பெரியோர்
ஆசுஇலா மண்ணால் அமைத்தலும் தகுமால்
பூசைசெய் திடும்இடம் புனிதமது ஆக்கி
வாசமென் மலரின் மஞ்சரி தூக்கிக்
கோடிகங் கோசிகங்கொடிவிதா னித்து
நீடிய நூல்வளை நிறைகுடத்து இருத்தி
விந்தைசேர் சித்தி விநாயகன் உருவைச்
சிந்தையின் நினைத்து தியானம் பண்ணி
ஆவா கனம்முதல் அர்க்கிய பாத்தியம்
வாகா ராச மனம்வரை கொடுத்து
ஐந்து அமிர் தத்தால் அபிடே கித்துக்
கந்தஞ் சாத்திக் கணேசமந் திரத்தால்
ஈசுர புத்திரன் என்னும்மந் திரத்தால்
மாசுஅகல் இரண்டு வத்திரஞ் சாத்திப்
பொருந்துஉமை சுதனாப் புகலுமந் திரத்தால்

திருந்தும் பளிதத் தீபங் கொடுத்துப்
பச்சறுகு உடன்இரு பத்தொரு விதமாப்
பத்திர புட்பம் பலபல கொணர்ந்தே
உமாசுதன் கணாதிபன் உயர்கரி முகத்தோன்
குமார குரவன் பாசஅங் குசகரன்
ஏக தந்தன் ஈசுர புத்திரன்
ஆகு வாகனன் அருள்தரு விநாயகன்
சர்வகா ரியமுந் தந்துஅருள் புரிவோன்
ஏரம்ப மூர்த்தி என்னும்நா மங்களால்
ஆரம் பத்துடன் அர்ச்சனை பண்ணி
மோதகம் அப்பம் முதற்பணி காரந்
தீதகல் மாங்கனி தீங்கத லிப்பழம்
வருக்கை கபித்த மாதுளங் கனியொடு
தரித்திடு நெட்டிலைத் தாழைமுப் புடைக்காய்
பருப்புநெய் பொரிக்கறி பால்தயிர் போனகம்
விருப்புள சுவைப்பொருள் மிகவும்முன் வைத்து
உருத்திரப் பிரியஎன்று உரைக்கும்மந் திரத்தால்
நிருத்தன் மகற்கு நிவேதனங் கொடுத்து
நற்றவர் புகன்றநா னான்குஉப சாரமும்
மற்றவன் திருவுளம் மகிழ்ந்திடச் செய்து
எண்ணுந் தகுதி இருபிறப்பாளர்க்கு
உண்அறு சுவைசேர் ஓதனம் நல்கிச்
சந்தனம் முத்துத் தானந் தக்கிணை
அந்தணர்க்கு ஈர்ந்திட்டு அருச்சகன் தனக்குத்
திருத்தகு விநாயகத் திருஉரு வத்தைத்
தரித்தவத் திரத்துடன் தானமாக் கொடுத்து
நைமித் திகம்என நவில்தரு மரபால்
இம்முறை பூசனை யாவர்செய் தாலும்
எண்ணிய கருமம் யாவையும் முடிப்பர்
திண்ணிய செருவிற் செயம்மிகப் பெறுவர்
அரன் இவன் தன்னைமுன் அர்ச்சனை பண்ணிப்
புரம்ஒரு மூன்றும் போடிபட எரித்தான்
உருத்திரன் இவனை உபாசனை பண்ணி
விருத்திரா சுரனை வென்றுகொன் றிட்டான்

அகலிகை இவன் தாள் அர்ச்சனை பண்ணி
பகர்தருங் கணவனைப் பரிவுடன டைந்தாள்
தண்ஆர் மதிமுகத் தாள்தம யந்தி
அன்னாள் இவனை அர்ச்சனை பண்ணி
நண்ணார் பரவும் நளனை அடைந்தாள்
ஐங்கரக் கடவுளை அர்ச்சனை பண்ணி
வெங்கத நிருதரை வேர்அறக் களைந்து
தசரதன் மைந்தன் சீதையை அடைந்தான்
பகிரதன் என்னும் பார்த்திவன் இவனை
மகிதலந் தன்னில் மலர்கொடு அர்ச்சித்து
வரநதி தன்னை வையகத்து அழைத்தான்
அட்டதே வதைகளும் அர்ச்சித்து இவனை
அட்ட போகத்துடன் அமிர்தமும் பெற்றார்
உருக்குமணி என்னும் ஒண்டொடி தன்னைச்
செருக்கொடு வவ்விச் சிசுபா லன்றான்
கொண்டுபோம் அளவிற் குஞ்சர முகவனை
வண்டுபாண் மிழற்றா மலர்கொடுஅர்ச் சித்துத்
தாரியின் மறித்தவன் தனைப்புறங் கண்டு
யாமும்அங்கு அவளை இன்புறப் பெற்றோம்
புகர்முகக் கடவுளைப் பூசனை புரிந்து
மிகமிக மனத்தில் விழைந்தன பெற்றார்
இப்புவி தன்னில் எண்ணுதற்கு அரிதால்
அப்படி நீவிரும் அவனை அர்ச் சித்தால்
எப்பொருள் விரும்பினீர் அப்பொருள் பெறுவீர்
என்றுகன்று எறிந்தோன் எடுத்திவை உரைப்ப
அன்றுமுதல் தருமனும் அனுசரும் இவனைப்
பூசனை புரிந்துகட் புலன் இலான் மைந்தரை
நாசனம் பண்ணி நராதிபர் ஆகிச்
சிந்தையில் நினைந்தவை செகத்தினிற் செயங்கொண்டு
அந்தமில் செல்வத்து அரசியல் பெற்றார்
ஈங்குஇது நிற்க இவ்விர தத்துஇயல்
ஓங்கிய காதைமற்று ஒன்றுஉரை செய்வாம்
கஞ்சநான் முகன்தருங் காசிபன் புணர்ந்த
வஞ்சக மனத்தாள் மாயைதன் வயிற்றிற்

சூரன் என்று ஒருவனுந் துணைவருந் தோன்றி
ஆர்கலி சூழ்புவி அனைத்தையும் அழித்தே
சீருடைச் சுவர்க்கத் திருவளங் கெடுத்தும்
புரந்தரன் முதலிய புலவரை வருத்தியும்
நிரந்தந் தீய நெறிநடத் துதலால்
ஆயிரங் கண்ணனும் அமரரும் முனிவரும்
நீஇரங்கு எமக்குஎன நெடுங்கரங் கூப்பி
இரசத கிரிஉறை இறைவனை வணங்கி
வரமிகுஞ் சூரன் வலிமைகள் உரைக்கச்
சுடர்விடு மணிமுடிச் சூரனை வெல்லக்
கதிர்விடு வடி வேல் கரதலத்து ஏந்தும்
புதல்வனைத் தருவோம் போமின் நீர்என
அமரர் கோனுக்கு அரன்விடை கொடுத்துச்
சமர வேல்விழித் தையலுந் தானுங்
கூடிய கலவியிற் கூடாது ஊடலும்
ஓடிய வானோர் ஒருங்கு உடன் கூடிப்
பாவகன் தன்னைப் பரிவுடன் அழைத்துச்
சூரன் செய்யுந் துயரம் எல்லாம்
ஊர்அரவு அணிந்தோற்கு உரையென உரைப்பக்
காமனை எரித்த கடவுள்என்று அஞ்சிப்
பாகவன் பயமுறப் பயம்உனக்கு ஏதென
உற்றிடுங் கரதலத்து உன்னையே தரித்தான்
நெற்றியின் நயனமும் நீயே ஆதலிற்
குற்றம்அடாது கூறுநீ சென்றென
வானவர் மொழிய மற்றவன் தானுந்
தானும்அச் சபையில் தரியாது ஏகி
எமைஆ ளுடைய உமையா ளுடனே
அமையா இன்பத்து அமர்ந்துஇனிது இருந்த
பள்ளி மண்டபம் பாவகன் குறுகலும்
ஒள்ளிய மடந்தை ஒதுங்கிநா ணுதலுந்
தெள்ளிதிற் பரமனுந் தேயுவைக் கண்டே
அறுமுகப் பிள்ளையை அவன்கையில் ஈதலும்
வறியவன் பெற்ற வான்பொருள் போலச்
சோதி நீள்முடிச் சுடரோன் கொணர்ந்து

வாத ராசன் மலர்க்கையிற் கொடுப்ப
நீதி யோடு நின்றுகை யேந்திப்
போதநீள் வாயுவும் பொறுக்கலொண் ணாமல்
தரும்புனற் கங்கை தன்கையிற் கொடுப்பத்
தரும்புனற் கங்கையும் தாங்க ஒண்ணாமற்
பொருந்திரைச் சரவணைப் பொய்கையில் வைப்பத்
தண்ஆர் வதனத் தாமரை ஆறுங்
கண்ஆ றிரண்டுங் கரம்ஈ ராறும்
தூண் எனத் திரண்ட தோள் ஈராறும்
மாண்அயில் ஆதி வான்படை யுங்கொண்டு
அறுமுகக் கடவுள் அங்கு அவதரித் திடலும்
மறுகிய உம்பர் மகிழ்வுடன் கூடி
அறுமீன் களைப்பால் அளித்திர்என்று அனுப்ப
ஆங்கவர் முலைஉண்டு அறுமுகன் தானும்
ஓங்கிய வளர்ச்சி உற்றிடு நாளில்
விமலனும் உமையும் விடையு கைத்து ஆறு
தலைமகன் இருந்த சரவணத்து அடைந்து
முருகுஅலர் குழல்உமை முலைப்பால் ஊட்ட
இருவரும் இன்பால் எடுத்துஎடுத்து அணைத்துத்
தேவர்தம் படைக்குச் சேனா பதியெனக்
காவல் கொண்டு அளிக்கக் கதிர்முடி சூட்டி
அயில்வேல் முதற்பல ஆயுதங் கொடுத்துத்
திசைஎலாஞ் சொல்லுந் தேரும்ஒன்று உதவிப்
பூதப் படைகள் புடைவரப் போய்நீ
ஓதுறும் அவுணரை ஒறுத்திடுஎன்று அனுப்ப
இருளைப் பருகும் இரவியைப் போலத்
தகுவரென்று அவரைச் சமரிடை முருக்கிக்
குருகுப் பேர்பெறுங் குன்றமுஞ் சூரன்
மருமமுந் துளைபட வடிவேல் விடுத்தே
யாவரும் வியப்புற இந்திரன் மகளாந்
தேவகுஞ் சரியைத் திருமணம் புணர்ந்திட்டு
அமரர்கோனுக்கு அமருலகு அளித்துக்
குமர வேளுங் குவலயம் விளங்க
அமரா வதியில் அமர்ந்துஇனிது இருந்தான்

சமரவேலுடைச் சண்முகன் வடிவுகண்டு
அமரர் மாதர் அனைவரும் மயங்கி
எண்டருங் கற்பினை இழந்தது கண்டே
அண்டர் எல்லாம் அடைவுடன் கூடி
மாதொரு பாகனை வந்துஅடி வணங்கி
மருமலர்க் கடம்பன்எம் மாநகர் புகாமல்
அருள்செய வேண்டும்நீ அம்பிகா பதியென
இமையவர் உரைப்ப இறைவன் தானுங்
குமரனைக் கோபங் கொண்டுமுன் முனியக்
காவல்கொண்டு எம்வினை கட்டறுத்து அருளுஞ்
சேவலங் கொடியோன் தேசம் போகத்
திருந்திழை உமையாள் அருந்துயர் எய்தி
வருந்திமுன் நிற்க மங்கையைப் பார்த்து
மங்கை நீதான் வருந்துதல் ஒழிகுதி
அங்கையாற் சூதெறிந்து ஆடுவோம் வாவென
வென்றதுந் தோற்றதும் விளம்புவார் யாரெனக்
குன்றமென் முலையாள் கூறிய சமயம்
புற்றுஅரவு அணிந்த புனிதனைக் காணஅங்கு
உற்றனன் திருமால் ஊழ்வினை வலியாற்
சக்கர பாணியைச் சான்றெனக் குறித்து
மிக்கதோர் சூது விருப்புடன் ஆடச்
சாயக நேருந் தடநெடுங் கருங்கண்
நாயகி வெல்ல நாயகன் தோற்ப
இன்பவாய் இதழ்உமை யான்வென் றேன்என
எம்பெரு மானும் யான்வென் றேன்என
ஒருவர்க் கொருவர் உத்தரம் பேசி
இருவரும் சாட்சி இவனைக் கேட்ப
மாமனை வதைத்த மால்முகம் நோக்கிக்
காமனை எரித்தோன் கண்கடை காட்ட
வென்ற நாயகி தோற்றாள் என்றுந்
தோற்ற நாயகன் வென்றான் என்றும்
ஒன்றிய பொய்க்கரி உடன் அங்கு உரைப்பக்
கன்றிய மனத்தோடு கவுரி அங்கு உருத்து
நோக்கிநீ இருந்தும் நுவன்றிலை உண்மை

வாக்கினில் ஒன்றாய் மனத்தினில் ஒன்றாய்
மைக்கரி உரித்தோன் வதனம் நோக்கிப்
பொய்க்கரி உரைத்த புன்மையி னாலே
கனல்என வயிற்றிற் கடும்பசி கனற்ற
நிலமிசைக் குருட்டு நெட்டுடற் பாம்பாய்க்
கடகரி முகத்துக் கடவுள்வீற்று இருக்கும்
வடதரு நீழலிற் கிடவெனச் சபித்தாள்
முளரிகள் பூத்த முகில் நிறத்து உருப்போய்த்
துளவுஅணி மருமகனுந் துணைவிழி இழந்தே
ஆண்டுஅரைக் கணத்தில் ஆயிரம் யோசனை
நீண்டபைப் பாந்தள் நெட்டுடல் எடுத்து
வளர்மருப்பு ஒன்றுடை வள்ளல்வீற்று இருக்குங்
கிளர்சினை ஆலின் கீழ்க்கிடந் தன்னால்
திரிகடக் கரியின் திருமுகக் கடவுளும்
வழிபடும் அடியார் வல்வினை தீர்த்தே
எழில்பெறு வடமரத் தின்கீழ் இருந்தான்
கம்பமா முகத்துக் கடவுள்தன் பெருமையை
அம்புவி யோருக்கு அறிவிப் போம்என
உம்பர் உலகத்து ஓரெழு கன்னியர்
தம்பநூல் ஏணியில் தாரணி வந்து
கரிமுகக் கடவுளைக் கைதொழுது ஏத்திக்
கார்த்திகைக் கார்த்திகை கழிந்தபின் நாளில்
ஆர்த்த கலிங்கத்து அணியிழை வாங்கி
இருபத் தோர்இழை இன்புறக் கட்டி
ஒருபோது உண்டி உண்டுஒரு மனமாய்
வேதத்து ஆதியும் பூமியில் எழுத்தும்
ஆதிவி நாயகற்கு ஆன எழுத்தும்
மூன்றுஎழுத் ததனால் மொழிந்தமந் திரமும்
தேன்தருங் குழலியர் சிந்தையுட் செபித்தே
உரைதரு பதினாறு உபசா ரத்தால்
வரைமகள் மதலையை வழிபாடு ஆற்றி
இருபது நாளும் இப்படி நோற்று
மற்றநாள் ஐங்கர மாமுகன் பிறந்த
அற்றைநாட் சதயமும் ஆறாம் பக்கமுஞ்

சேரும் அத் தினத்தில் தெளிபுனல் ஆடி
வாரண முகத்தோன் வருபெருங் கோயில்
சீர்பெற மெழுகித் திருவிளக்கு ஏற்றிக்
குலவுபொற் கலைகள் கொடுவி தானித்து
மலர்பல தொடுத்திடு மாலைகள் ஆற்றிக்
கொலைபுரி வடிவேற் குகற்குமுன் வருகை
மலைமுகக் கடவுளை மஞ்சனம் ஆட்டிப்
பொற்கலை நல்நூற் பூந்துகில் சாத்திச்
சொற்பெறு சந்தனச் சுகந்தம் பூசிச்
செருந்தி சண்பகஞ் செங்கழு நீரொடு
குருந்து மல்லிகை கோங்கொடு பிச்சி
கருமுகை புன்னை கடிகமழ் பாதிரி
மருவிரி ஞாழல் மகிழ்இரு வாட்சி
தாமரை முல்லை தளைஅவிழ் கொன்றை
பூமலர் நொச்சி பூந்தமைக் குவளை
காந்தள் ஆத்தி கடம்புசெவ் வந்தி
வாய்ந்தநல் எருக்கு மலர்க்கர வீரம்
பச்சிலை நொச்சி படர்கொடி அறுகு
முத்தளக் கூவிளம் முதலிய சாத்தித்
தூபதீ பங்கள் சுகம்பெறக் கொடுத்தே
அப்பம் மோதகம் அவல்எள் ளுண்டை
முப்பழந் தேங்காய் முதிர்மொழிக் கரும்பு
சீனிதேன் சர்க்கரை செவ்விள நீருடன்
பால்நறு நெய்தயிர் பருப்புடன் போனகங்
கற்பகக் கடவுள் களித்திடத் திருமுன்
பொற்புறப் படைத்துப் பூசனை பண்ணி
நோற்பது கண்டு நோலாது இருந்த
பாப்புரு வாகிய பஞ்சா யுதனும்
யாப்புறு கொங்கையீர் யானும்நோற் பேனென
ஆங்குஅவன் தனக்கும் வேண்டுவது அளித்துப்
பாங்கொடுஇவ் விரதம் பரிந்துநோற் பித்தார்
அண்டர்நா யகனாம் ஐங்கரன் அருளால்
விண்டுவும் பண்டுஉள வேடம் பெற்றே
உஞ்ஞைமா நகர்புகுந்து உமையொடு விமலன்

கஞ்சநாள் மலர்ப்பதங் கைதொழு திடலும்
பஞ்சிமென் சீறடிப் பார்ப்பதி நெஞ்சின்
வெஞ்சினம் மிகுந்து விமலனை நோக்கி
யான்இடுஞ் சாபம் நீங்கியது ஏனென
மானெடுங் கண்ணி மணிக்கதவு அடைப்ப
இறையவன் இதற்குக் காரணம் ஏதென
மறிகடல் துயிலும் மாயவன் உரைப்பான்
பிறைமருப்பு ஒன்றுடைப் பிள்ளைஅன்று எனக்குத்
தந்துஅருள் புரிந்த தவப்பயன் ஈதெனச்
சிந்தை மகிழ்ந்து தேவர் தேவனும்
பூங்கொடி அடைத்த பொன்தாழ் நீங்கச்
சாங்குமுன் உரைத்த சங்கர பாணி
இக்கதை சொல்ல அக்கணி சடையனும்
மிக்கநல் விரதம் விரும்புடன் நோற்றபின்
மாதுமை அடைத்த வன்தாழ் நீக்கி
நாதனை நணுகிட நம்பனும் நகைத்தான்
நானோ வந்து நகையா னதுஎனத்
தேன்நேர் மொழியாள் தெளியக் கூறென
நன்மதி நுதலாய் நானிலந் தன்னில்
உன்மகன் நோன்பின் உறுதி அறிந்து
சிந்தை மகிழ்ந்து சிரித்தேன் யானென
அந்தமில் அரனை ஆயிழை வணங்கிப்
பொருஞ்சூர் அறவேல் போக்கிய குமரன்
வரும்படி யானும் வருந்திநோற் பேனென
இறைவன் கதைசொல ஏந்திழை நோற்றபின்
குறமட மகளைக் குலமணம் புணர்ந்தோன்
சுடர்வடி வேலோன் தொல்வினை தீர்ந்து
தாதுமை வண்டுஉழுந் தாமத் தாமனை
மாதுமை யாளை வந்துகண்டனனே
கண்ணநீ கண்ணிலாக் கட்செவி யாகெனத்
தண்நறுங் குழல்உமை சாபம் இட் டதுவும்
அக்குநீறு அணியும் அரன்முதல் அளித்த
விக்கின விநாயக விரதம்நோற்று அதன்பின்
சுடர்க்கதை ஏந்துந் துளவ மாலையன்

விடர்பணி உருவம் விட்டுநீங் கியதும்
பரிவுகொள் கூத்துடைப் பரமனும் நோற்றுக்
கவுரிஅன்று அடைத்த கபாடந் திறந்ததும்
வாசமென் குழலுடை மாதுமை நோற்பத்
தேசம் போகிய செவ்வேள் வந்ததும்
வானவர் நோற்று வரங்கள் பெற்றதும்
நாரத முனிவன் நவின்றிடக் கேட்டே
இந்நிலந் தன்னில் இவ்விர தத்தை
மன்னவன் வச்சிர மாலிமுன் நோற்றுக்
காயத் தெழுந்த கடும்பிணி தீர்ந்து
மாயிரும் புவியின் மன்னனாய் வாழ்ந்து
தடமுலைத் திலோத்தமை தனைமணம் புணர்ந்து
மழவிடை போறபல மைந்தரைப் பெற்றுக்
கடைமுறை வெள்ளியங் கயிலையில் உற்றான்
பரிவொடுஇவ் விரதம் பாரகந் தன்னில்
விரைகமழ் நறுந்தார் விக்கிரமா தித்தன்
மறிகடற் புவிபெற வருந்தி நோற்றிடுநாள்
மற்றவன் காதன் மடவரல் ஒருத்தி
இற்றிடும் இடையாள் இலக்கண சுந்தரி
மெத்தஅன் புடன் இவ் விரதம்நோற் போனென
அத்தந் தன்னில் அணியிழை செறித்துச்
சித்தம் மகிழ்ந்து சிலநாள் நோற்றபின்
உற்ற நோன்பின் உறுதி மறந்து
கட்டிய இழையைக் காரிகை அவிழ்த்து
வற்றிய கொவ்வையின் மாடே போட
ஆங்குஅது தழைத்தே அலருந் தளிருமாய்ப்
பாங்குற ஓங்கிப் படர்வது கண்டு
வேப்பஞ் சேரியிற் போய்ச்சிறை இருந்த
பூப்பயில் குழல்சேர் பொற்றொடி ஒருத்தி
அவ்வியம் இல்லாள் அவ்விடந் தன்னிற்
கொவ்வை அடகு கொய்வாள் குறுகி
இழையது கிடப்பக் கண்டுஅவள் எடுத்துக்
குழைதவழ் வரிவிழிக் கோதைகைக் கட்டி
அப்பமோடு அடைக்காய் அவைபல வைத்துச்

செப்பமுடனே திருந்திழை நோற்றிடக்
கரிமுகத்து அண்ணல் கருணை கூர்ந்து
பண்டையில் இரட்டி பதம் அவட்கு அருளக்
கொண்டுபோய் அரசனுங் கோயிலுள் வைத்தான்
விக்கிரமா தித்தன் விழிதுயில் கொள்ள
உக்கிர மானஉடை மணி கட்டித்
தண்டையுஞ் சிலம்புந் தாளினின்று ஒலிப்பக்
கொண்டல் போல்வருங் குஞ்சர முகத்தோன்
மனமிகக் கலங்கும் மன்னவன் தன்னிடங்
கனவினில் வந்து காரணமாக
இலக்கண சுந்தரி இம்மனை இருக்கிற்
கலக்கம் வந்திடுங் கழித்திடு புறத்தெனத்
துண்ணென எழுந்து துணைவியை நோக்கிக்
கண்ணுறக் கண்ட கனவின் காரணம்
அண்ணல் உரைத்திடும் அவ்வழி தன்னில்
ஆனை குதிரை அவைபல மடிவுற
மாநகர் கேடுறும் வகையது கண்டு
இமைப்பொழுது இவள்இங்கு இருக்கலா காதுஎன
அயற்கடை அவனும் அகற்றிய பின்னர்
வணிகன் தனது மனை புகுந்து இருப்ப
மணியும் முத்தும் வலியகல் லாய்விட
அணியிழை தன்னை அவனும் அகற்ற
உழவர்தம் மனையில் உற்றுஅவள் இருப்ப
வளர்பயிர் அழிந்து வளம்பல குன்ற
அயன்மனை அவரும் அகற்றிய பின்னர்த்
குயவன் மனையிற் கோற்றொடி செல்லக்
குயக்கலம் உடைந்து கொள்ளை போக
அயற்கடை அவனும் அகற்றிய பின்னர்த்
தூசுதூய் தாக்குந் தொழிலோர் மனைபுகத்
தூசுகள் எல்லாந் துணிந்துவே றாகத்
தூசரும் அவளைத் தூரஞ் செய்ய
மாலைக் காரன் வளமனை புகலும்
மாலை பாம்பாம் வகையது கண்டு
ஞாலம் எல்லாம் நடுங்கவந்து உதித்தாய்

சாலவும் பாவிநீ தான்யார் என்ன
வெம்மனம் மிகவும் மேவி முனிவுறா
அம்மனை அவனும் அகற்றிய பின்னர்
அவ்வை தன்மனை அவள் புகுந்திருப்ப
அவ்வை செல்லும் அகங்கள் தோறும்
வைதனர் எறிந்தனர்மறியத் தள்ளினர்
கைகொடு குற்றினர் கண்டோர் பழித்தனர்
அவ்வை மீண்டுதன் அகமதிற் சென்று
இவ்வகைக் கன்னிநீ யாரென வினாவக்
காத்தாண்டு உலகு கருணையோடு ஆண்ட
மார்த்தாண்ட ராசன் மாமகள் ஒருத்தி
எல்லார்க்கும் மூத்தாள் இலக்கண சுந்தரி
சொல்லுவிக் கிரம சூரியன் மனையெனச்
சீர்கெட இருந்த தெரிவையை நோக்கி
நீரது கொண்டு நிலம்மெழு கிடுகெனச்
சாணம் எடுக்கத் தையலுஞ் சென்றாள்
சாணியும் உழுத்துத் தண்ணீர் வற்றிப்
பேணிய புழுவாய்ப் பெரிது தோன்ற
மான்நேர் விழியாள் வருந்துதல் கண்டு
தானே சென்று சாணி எடுத்துத்
தண்ணீர் கொணர்ந்து தரைமெழுக் கிட்டு
மன்னிய வீட்டில் மணிவிளக்கு ஏற்றிப்
புத்தகம் எடுத்து வாவென புகலப்
புத்தகம் பாம்பாய்ப் பொருந்திநின்று ஆட
மெத்தஉள் நடுங்கி வீழ்ந்துஅவள் கிடப்பக்
கொவ்வையங் கனிவாய் கோதையை விலக்கி
அவ்வை தானே அகமதிற் சென்று
புத்தகம் எடுத்து பொருந்தப் பார்த்து
வித்தக நம்பி விநாயக மூர்த்தி
கற்பகப் பிள்ளைசெய் காரியம் இதுவென
உத்தமி அவ்வை உணர்ந்துமுன் அறிந்து
தவநெறி பிழைத்த தையலை நோக்கி
நுவலரும் விநாயக நோன்புநோற் றிடுகெனக்
கரத்து மூஏழுஇழைக் காப்புக் கட்டி

அப்பமும் அவலும் மாம்பழ பண்டமுஞ்
செப்பம தாகத் திருமுன் வைத்தே
அவ்வை கதைசொல ஆயிழை கேட்டு
மத்தகக் களிற்றின் மகாவிரத த்தை
வித்தக மாக விளங்குஇழை நோற்றுக்
கற்பக நம்பி கருணைபெற்றதன் பின்
சக்கர வாள சைனியத் தோடு
விக்கிரமா தித்தன் வேட்டையிற் சென்று
தானுஞ் சேனையுந் தண்ணீர் விரும்பி
எவ்வகை செய்வோம் எனஉளம் மெலிந்தே
அவ்வை தன்மனை அங்குஅவர் அணுக
எய்துந் தாகமும் இளைப்புங் கண்டு
செவ்வே அவற்றைத் தீர்க்க எண்ணி
இலக்கண சுந்தரி என்பவள் தன்னை
அப்பமும் நீரும் அரசற்கு அருளெனச்
செப்பிய அன்னை திருமொழிப் படியே
உண்நீர்க் கரகமும் ஒருபணி காரமும்
பண்நேர் மொழியாள் பார்த்திபற்கு உதவ
ஒப்பறு படையும் உயர்படை வேந்தனும்
அப்பசி தீர அருந்திய பின்னர்
ஆனை குதிரை அவைகளும் உண்டுந்
தானது தொலையாத் தன்மையைக் கண்டே
இவ்வகை சமைத்தநீ யாரென வினவ
மவ்வலம்அம் குழலாள் மௌனமாய் நிற்ப
அவ்வை தான்சென்று அரசற்கு உரைப்பாள்
கணபதி நோன்பின் காரணங்கள் காண்இது
குணமுடை இவள்உன் குலமனை யாட்டி
இலக்கண சுந்தரி என்றுஅவ்வை கூற
மங்கையை நோக்கி மனமிக மகிழ்ந்து
திங்கள்நேர் வெள்ளிச் சிவிகையில் ஏற்றிக்
கொண்டுஊர் புகுந்தான் கொற்ற வேந்தனும்
ஒண்தொடி யாரில் உயர்பதம் உதவினன்
சிந்துர நுதலார் சென்றுஅடி பணியச்
சுந்தரியிருந்தாள் சுகத்துடன் மகிழ்ந்தே.

## காப்பு

கரும்பும் இளநீருங் காரெள்ளுந் தேனும்
விரும்பும் அவல் பலவும் மேன் மேல் - அருந்திக்
குணமுடைய னாய்வந்து குற்றங்கள் தீர்க்குங்
கணபதியே இக்கதைக்குக் காப்பு.

திருவிளங்கு மான்மருகா சேவதனில் ஏறி
வரும் அரன்றான் ஈன்றருளும் மைந்தா - முருகனுக்கு
முன்பிறந்த யானை முகவா உனைத் தொழுவேன்
என்கதைக்கு நீஎன்றுங் காப்பு.

## நூற்பயன்

பொன்னுமிகும் கல்விமிகும் புத்திரரோடு எப்பொருளும்
மன்னும் நவமணியும் வந்து அணுகும் - உன்னி
ஒருக்கொம்பின் யானைமுக உத்தமனார் நோன்பின்
திருக்கதையைக் கேட்கச் சிறந்து
பொற்பணைக்கை முக்கண் புகர்முகத்துப் பொன்மவுலிக்
கற்பகத்தின் நோன்பின் கதைதன்னைச் - சொற்பெருக்க
கற்றவரும் நோற்றவருங் காதலித்துக் கேட்டவரும்
பெற்றிடுவர் கற்பகத்தின் பேறு.

வெள்ளை எருதுஏறும் விரிசடையோன் பெற்றுஎடுத்த
பிள்ளையார் நோன்பின் பெருங்கதையை - உள்ளபடி
நோற்றார் மிகவாழ்வார் நோலாது அருகுஇருந்து
கேட்டோர்க்கும் வாராது கேடு.

சூலிலார் நோற்கிற் சுதரை மிகப்பெறுவார்
சாலமிகும் வெங்கலியார் தாம்நோற்கில் - மேலைப்
பிறப்புஎல்லாம் நல்ல பெருஞ்செல்வம் எய்திச்
சிறப்பிலே வாழ்வார் சிறந்து.

பிள்ளையார் கதை முற்றுப் பெற்றது

## பிள்ளையார் கதை
(பொருள்)

வரி 1-8

மந்தர மலையின் வடக்குப் பக்கத்தில் வானோங்கிய சோலை சூழ்ந்த இராசமாநகரில் ஒரு அந்தணனும் மனைவியும் அழகான புதல்வனைப் பெற வேண்டுமென்று கோயிலும், சோலையும், பாடசாலைகளும் அமைத்து அறஞ் செய்து சிவபெருமானை வழி பாடியற்றித் தவம் செய்தார்கள்.

வரி 9-21

தவத்தைக் கண்ட உமாதேவியார் சிவனை நோக்கி அவர்களுக்கு ஒரு பிள்ளை வரம் கொடுக்கும்படி கேட்க, அவர்களுக்கு இப்பிறப்பில் பிள்ளைப் பேறு இல்லை, தேவையானால் நீ போய்ப் பிற என்று கட்டளையிட்டார்.

வரி 22-30

உமாதேவியார் திகைத்து இழிந்ததாகிய மானுடப்பிறப்பு நன்றல்ல என மனம் கவலையடைய நீ போய் பிறந்து சில காலத்தில் நான் வந்து உனை மணமுடித்து அழைத்துவருவேன் என விடை கொடுத்தார்.

வரி 31-42

உமாதேவியார் அவர்களுக்குப் பிள்ளையாகப் பிறந்து வளர்ந்து ஐந்து வயதானதும் அவளுக்கு பெற்றோர் மணம் பேசினர். அதை மறுத்த அவள் நான் பிறப்பு இறப்பு இல்லாத சிவனையே மணம் புரிவேன் என்று உறுதியாய்க் கூறினாள். அது முடியாத செயல் எனப் பெற்றோர் கூறினர்.

வரி 43-48

எனது அருந்தவத்தால் அவரை அடைவேன் எனக் கூறிய உமையவள் தாமரை மலர்கள் நிறைந்த குளக்கரைச் சோலையில் தவச்சாலை அமைத்துத் தோழியர் சூழத் தவம் செய்தாள்.

வரி 49-59

அவருடைய தவத்தை அறிவோம் எனச் சிவன் தன் வடிவை மறைத்து தவவேடம் பூண்ட அந்தணன் போல குடையும், தண்டும், கமண்டலமும் ஏந்தியவாறு அவள் தவம் புரியும் இடத்திற்குப் போய் அவள் மீது கருணை புரிந்து நீ எதற்காகத் தவம் புரிகிறாய் என்று கேட்க, அவள் சிவபெருமானை அடையவே தவம் செய்கிறேன் என்றாள்.

வரி 60-67

அவர் ஏளனமாகச் சிரித்து, மாட்டினில் ஏறி மான் மழு தரித்து காட்டில் சுடலையில் பேய்களுடன் ஆடிப் பாம்பும் எலும்பு மாலையும் சாம்பரும் அணிந்து தலையோட்டில் பிச்சை எடுக்கும் பித்தனையோ விரும்பினாய் என்று அவளது கையைப் பற்றிப் பிடித்துத் தவத்தைக் குலைத்தார்.

வரி 68-78

அவள் வெட்கமடைந்து வீட்டுக்குப் போதலும் தோழிகள் அவளது பெற்றோரிடம் நடந்ததைக் கூறினர்.

வரி 79-90

இதனைக் கேட்ட பெற்றோர் தோழியரைப் போய் அந்த முதியவரை அழைத்து வாருங்கள் என அனுப்ப; அவர்கள் போய்க் கேட்ப, அவர் அந்தக் கன்னி வந்து அழைத்தால்தான் வருவேன் என்றார். தோழிகள் வந்து அவளுக்குக் கூறுதலும் சிவனைப் பழித்த அவரிடம் நான் போகேன் என மறுத்தாள்.

வரி 91-98

பெற்றோர் அவளை ஆறுதல் படுத்தி வீட்டுக்கு வந்த முனிவரைத் தொழுதல் இளையோர் கடன் எனச் சொல்லத் தாய் தந்தை சொல்

தட்டக்கூடாதெனத் துணிந்து அவ்விடம்போய் அவரைச் சுற்றிவந்து தொழுது வீட்டுக்கு அழைத்து வந்தாள்.

வரி 99-113

இவர் ஆதிபகவானாகிய சிவனுக்கு அன்பரேயெனத் துணிந்து அவருக்குப் பாதபூசை செய்து வணங்கி ஆசனத்திருந்தி அமுதுபடைத்துப் பொரிக்கறி, பருப்பு, நெய், பசுவின்பால், மாம்பழம், பலாச்சுளை, தேன்கதலிப்பழம் என்பன படைத்து அவரை அமுது செய்வித்துச் சந்தனம், குங்குமம் சாத்தி தக்கோலம், சாதிக்காய், கற்பூரம், வெற்றிலை, பாக்கு என்பவற்றைப் பொன் தட்டில் அவர் முன்வைத்து அவரைச் சிவனெனப் பாவனை செய்து அவர் தாளில் வீழ்ந்து வணங்கினாள்.

வரி 114-123

அப்போது அந்த முனிவன் அவள் முகம் நோக்கிப் புன்முறுவல் பூத்து சடாமுடியும், நான்குகரமும், நெற்றிக் கண்ணும், நீலகண்டமும், மானும் மழுவும், பிறையும் அணிந்த தன் சிவரூபத்தை அவளுக்குக்குக் காட்ட அவளும் உடனே மகிழ்ந்து சிவனடி வீழ்ந்து வணங்கினாள்.

வரி 124-131

அங்கு பிரமா, விஷ்ணு, இந்திரன் முதலிய தேவர்கள். விஞ்சையர், கின்னரர், முனிவர்கள், இராக்கதர், பூதர், கந்தருவர் முதலான எல்லையில்லாத பதினென் கணத்தினரும் வந்துகூடி இருவர்க்கும் மணநாள் குறித்து கருமங்களை மேற்கொண்டனர்.

வரி 132-143

தென்றல் உலாவும் முற்றத்தில் பொன் விளங்கும் பவளக்கால் நாட்டி மாணிக்கத்தால் வளைபரப்பி, ஆணிப் பொன்தகட்டால் வேய்ந்து, முத்துமாலைகள் தூக்கி, தோரணம் கட்டி, பூரணப் பொற்குடம் வைத்து, எட்டுத்திக்கும் திருவிளக்கேற்றி, பாலிகை பரப்பி (நவதானியம் முளைக்க வைத்து), கரும்பும் வாழையும் கமுகும் நாட்டி பலவித மலர்களால் பந்தல் சோடித்தனர்.

வரி 144-161

நஞ்சணி கண்டனாகிய சிவனுக்கு மணக்கோலம் புனைந்தனர். தேவப் பெண்கள் அக்கன்னிகைக்கு மணக்கோலம் செய்தனர். இருவரையும் மணபீடத்திருத்தி மணப்பறை முழங்க, வேத விதிப்படி பிரமா ஓமச் சடங்குகளைச் செய்ய சிவன் கன்னிகைக்கும் தாலிபூட்டி கைப்பிடித்தான். அதன்பின் அக்கினி வலம் வந்து மணவிழா முடித்து இருவரும் திருஉஞ்சைக்களம் நோக்கிப் புறப்பட்டனர்.

வரி 162-172

வழியிலே எப்பக்கத்தையும் பாராது என்னுடன் வாவெனச் சிவன் கூற உமை அப்படி என்ன இருக்கிறது என்று திரும்பிப் பார்க்க, ஆண்யானையும் பெண்யானையும் விளையாடுவதைக் கண்டு யாமும் அவ்விதம் விளையாடுவோ மெனக் கேட்க, சிவன் ஆண்யானையாகவும் உமை பெண் யானையாகவும் உருவெடுத்து கூடி விளையாடினர்.

வரி 173-187

அப்போது உலகெலாம் நலம்பெற யானை முகமும் துதிக்கையுடன் ஐந்து கரமும் இரு திருவடியும் பவள வாயும் இருகொம்பும், கோடிசூரியப் பிரகாசமான மேனியும், பேழை வயிறும், நெற்றிக் கண்ணும், முப்புரி நூலும், கற்றைச் சடையும், கனக முடியும், முறம்போல் செவியும் உடையவராகிய விநாயகப் பெருமான் வந்து அவதரித்தார்.

வரி 188-199

சிவனும் உமையும் ஐங்கர மூர்த்தியைக் கண்டு மகிழ்ந்து, பிரமவிட்டுணுக்கள் முதலான விண்ணகத் தேவரும் மண்ணக மாந்தரும் வந்து வணங்க, அவர்களுக்கு அருள் புரிந்து பல கனிகளையும் அருந்தி அழகான ஆலின் கீழ் இரு என வரமருளி தாமிருவரும் தம்மிடம் சென்று இருந்தனர்.

வரி 200-212

கஜமுகாசுரன் என்பவன் தேவராலும், மனிதராலும், மிருகங்களாலும், ஆயுதங்களாலும், இயமனாலும் ஒரு விதத்தாலும் அழியாவரம் பெற்று தன் படைகொண்டு தேவலோகத்தை அழித்து, பூலோகத்தையும் கொடுமைப்படுத்துவது கண்டு இந்திரனும், தேவர்களும் கறைக்கண்டனாகிய சிவனிடம் வணங்கி முறையிட்டனர்.

வரி 213-235

சிவன் அவர்களுக்கிரங்கி விநாயகப் பெருமானைப் பார்த்து யானை முகமுடைய கஜமுகாசுரனையும் அவன் படைகளையும் அழிக்கப் பூதப் படையுடன் சென்று வென்று வாவென்று அனுப்பினார். விநாயகர் கஜமுகாசுரனுடன் போர் செய்து தன் ஒரு கொம்பை முறித்து அவன் மார்பில் எறிந்தார். இறந்து வீழ்ந்து கஜமுகாசுரன் உடனே ஒரு பெருச்சாளியாய் மாறிப் போரிட வந்தான். விநாயகர் அந்தப் பெருச்சாளியைத் தனக்கு வாகனமாக்கிக் கொண்டார். அவர் எறிந்த கொம்பு மீண்டும் வந்து அவர் கரத்தில் இருந்தது. வரும் வழியில் விநாயகர் வல்லபையை மணந்து தன் படை சூழ வந்தார்.

வரி 236-245

வரும் வழியில் திருச்செங்கோடு எனும் தலத்தில் கணபதீச்சரம் எனும் சிவாலயம் அமைத்துச் சிவபூசைசெய்து வழிபட்டுக்கொண்டு கணங்களுக்குத் தலைவன் கணபதி என முடிசூடிக்கொண்டு வந்து தேவர், முனிகள், சித்தர், கந்தர்வர் யாவரும் வந்து ஏவல் செய்ய வீற்றிருந்தார்.

வரி 246-273

அப்போது ஆவணி மாத வளர்பிறைச் சதுர்த்தியே விநாயகருக்கு விரதம் என்று தேவர்கள் ஒன்றுகூடி வழிபட்டனர். அதனால் மகிழ்ச்சியடைந்த விநாயகர் விகடக்கூத்து ஆடினார். அதுகண்டு எல்லோரும் வணங்கச் சந்திரன் மட்டும் ஏளனமாகச் சிரித்தான்.

கோபமுற்ற விநாயகர் இந்தத் தினமான சதுர்த்தியில் உன்னைக் கண்டோர் பழியும் பாவமும், துன்பமும் எய்தி அழிவர் எனச்சாபமிட்டார். அப்போது தேவர்கள் மனம் வருந்தி கோபங்கொண்ட விநாயகரின் கோபம் தணிய வேண்டிய மார்கழி மாதம் வளர்பிறைச் சதய நட்சத்திரத்துடன் கூடிய ஆறாம் நாள் விரத நாளாகும் என்று நோற்றனர். இவ்விநாயக சட்டி விரதம் நோற்ற விதம் சொல்வோம்.

வரி 274-284

குருகுலத்துதித்த பாண்டவரில் மூத்த தருமனும் தம்பியரும் கிருஷ்ணனிடம் போய்ப் போரில் எதிர்த்த பகைவரை வெற்றி கொள்வதற்குரிய விரதம் எதுவெனக் கேட்க, அவர் கூறுகின்றார்.

வரி 285-314

சிவகுமாரனாகிய சித்தி விநாயகனை அரசனிடம் போகப் புறப்படும் போதும், போருக்குப் போகும் போதும், ஏடு தொடக்கும் போதும், உத்தியோகத்துக்குப் போகும் போதும், அர்ச்சித்துச் செய்தால் வெற்றி உண்டாகும் விநாயகருக்குரிய விரதம் ஒன்றுளது என்று அவ்விரதம் நோற்கும் முறையைப் பற்றிக் கூறுவேன்.

வரி 315-367

ஆவணி மாத பூர்வபக்கச் சதுர்த்தியில் அதிகாலை நீராடி சத்தியாவந்தனம் செய்து ஐங்கரனை வழிபடவேண்டும். வெள்ளியால் அல்லது பொன்னால் அவர் உருவம் செய்து (மண்ணாலும் செய்யலாம்), பூசை செய்யும் இடத்தைப் புனிதமாக்கிய மாலை தூக்கி நிறைகுடம் வைத்து, அவர் உருவைத் தியானித்து, பஞ்சாமிருதத்தால் அபிஷேகம் செய்து. கணேச மந்திரத்தால் வாசனைத் திரவியம் சாத்தி, உமைசுதன் எனும் மந்திரத்தால் தூபதீபம் கொடுத்து, பச்சறுகு முதலான இருபத்தொரு பத்திர புஷ்பங்களால் விநாயகன் நாமாவளி சொல்லி அர்ச்சனை செய்து மோதகம், அப்பம் முதலான பணிகாரங்களுடன் கனிவகைகளையும் பருப்பு, நெய், பொரிக்கறி, பால், தயிர் படைத்து

உருத்திர மந்திரத்தால் நிவேதனம் பண்ணி, சோடசோபசாரம் எனும் பதினாறு வித உபசாரமும் செய்து அந்தணர்களுக்கு அமுது அளித்து பூசை செய்த அர்ச்சகருக்கு அந்த விநாயகர் உருவத்தை வஸ்திரத்துடன் கொடுத்து நைமித்திகம் எனும் இவ்வித பூசை செய்தால் அவர் எண்ணிய கருமம் வெற்றி பெறும்.

வரி 368-396

சிவபெருமான் விநாயகரை வழிபட்டு முப்புரங்களை எரித்தார். உருத்திரன் இவரை வழிபட்டு விருத்திராசுரனைக் கொன்றான். அகலிகை இவரை வழிபட்டு கணவரை அடைந்தாள். தமயந்தி இவரை வழிபட்டு கணவன் நளனை அடைந்தாள். இராமர் இவரை வழிபட்டு சீதையை அடைந்தார். பகீரதன் இவரை வழிபட்டு கங்கையைப் பூலோகத்துக்கு அழைத்தார். அட்ட தேவதைகளும் இவரை வழிபட்டு அமிர்தம் பெற்றனர். தானும் இவரை வழிபட்டு உருக்குமணியைப் பெற்றேன். எண்ணிறந்தவர்கள் இவரை வணங்கித் தாம் தாம் விரும்பியதைப் பெறலாம் என்று கிருஷ்ணன் கூறினார்.

வரி 397-401

அன்று முதல் தருமரும் தம்பியமும் விநாயகரை வணங்கிப் பாரதப் போரில் கௌரவர்களை வென்று மன்னர்களாகினர்.

வரி 402-417

இது நிற்க, விநாயக விரதம் பற்றிய இன்னொரு கதை சொல்வோம், பிரம தேவரின் மகன் காசிப முனிவன் மாயை என்னும் அசுரப் பெண்ணைப் கூடி சூரன் முதலான பிள்ளைகளையும் பெற்றனர். சூரன் முதலியோர் தேவர்களையும் வருத்தினான். இதனால் துன்புற்ற பிரம்மா, விஷ்ணு, இந்திரன் முதலிய தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட்டனர். சிவனார். வெற்றிவேல் முருகனைத் தருவோம் அவன் உமைக் காப்பான் என வரம் கொடுத்தார்.

வரி 418-437

வரம் கொடுத்துப் பலகாலமாகியும் குமரனைத் தராததால் தேவேந்திரன் அக்கினி பகவானை அழைத்து நீ போய் சிவனிடம்

சூரன் செய்யும் கொடுமையைச் சொல்லு என்று கூற, அக்கினி சிவன் மன்மதனையே எரித்தவர் என அச்சம் கொள்ள "நீ சிவனின் கையில் இருக்கிறாய் அவன் நெற்றிக்கண்ணிலும் உள்ளாய் அஞ்சாதே போ வெனச் சொன்னான். அக்கினி, சிவனும் உமையும் இன்பமாயிருந்த மண்டபத்துள் போக உமை நாணங்கொண்டு ஒதுங்கினாள். சிவன் அக்கினியைக் கண்டு ஆறுமுகப்பிள்ளையை அவனிடம் கொடுத்தார்.

வரி 438-454

அக்கினி கொண்டு வந்து வாயுவிடம் கொடுக்க அவனும் வெப்பம் தாங்காமல் கங்கையிடம் கொடுத்தான், கங்கையும் தாங்காமல் சரவணப் பொய்கையில் வைத்தாள். ஆறு தாமரை முகங்களும், பன்னிரண்டு கண்களும், பன்னிரு கரங்களும், பன்னிரு தோளும், படைக் கலங்களும் உடைய ஆறுமுகப்பெருமான் தோன்றினார். தேவர்கள் கார்த்திகைப் பெண்கள் அறுவரையும் அழைத்து பாலூட்டி வளர்க்கும்படி வேண்ட அவர்கள் வளர்த்தனர்.

வரி 455-463

சிவனும் உமையும் சரவணப் பொய்கைக்குச் சென்று ஆறுமுகனை அணைத்து உமை தன் முலைப்பாலூட்டி அன்புடன் தழுவி தேவர் படைக்குச் சேனாதிபதியாக முடிசூட்டி வெற்றிவேல் முதலான படைக்கலங்களும் தேரும் கொடுத்து பூதப்படையுடன் போய் நீ சூரன் ஆகிய அவுணரை அழிப்பாய் எனப் பணித்தார்.

வரி 464-473

ஆறுமுகன் சூராதி அவுணரை அழித்து இந்திரன் மகளான தெய்வயானையை மணந்து இந்திரனுக்குத் தேவலோகத்தை மீட்டுக் கொடுத்துத் தானும் அமராவதியெனும் தேவலோகத்தில் இருந்தனர்.

வரி 474-484

தேவ மாந்தர்கள் ஆறுமுகன் அழகின் தம்மைப் பறிகொடுத்து தம் கற்பையும் இழத்தலைக் கண்ட தேவர்கள் சிவனிடம் சென்று

முறையிடச் சிவனும் அவனைக் கோபித்தார். உடனே ஆறுமுகன் கோபங் கொண்டு அவ்விடம் விட்டு பரதேசம் போனார்.

வரி 485-514

உமாதேவியார் மனம் வருந்தலும், சிவன் நீ வருந்தாதே நாமிருவரும் மனமகிழ்ந்தவராய்ச் சூதாடுவோம் வாவெனக் கூறித் திருமாலைச் சாட்சியாக வைத்து ஆடினார். உமை வென்ற போதும் திருமால் சிவனுக்காகப் பொய் சொல்லிச் சிவனே வென்றார் என்றார். உமை கோபங் கொண்டு பொய்ச் சாட்சி சொன்ன நீ கடும்பசி கொண்ட குருட்டு மலைப்பாம்பாகி கணபதி இருக்கும் ஆலமர நிழலிற் கிடப்பாய் எனச் சாபமிட்டாள்.

வரி 515-568

அக்கணமே சாபம் பலித்து திருமால் குருட்டுப் பாம்பாய்க் கிடந்து வருந்தினார். அவ்வேளை தேவலோகத்து சப்த கன்னியர் (7 பேர்) விநாயகர் பெருமையை உலகினுக்கு அறிவிக்கவென நூல் ஏணியில் பூமிக்குவந்து விநாயகரை வணங்கி கார்த்திகை மாதக் கார்த்திகை நட்சத்திரம் கழிந்த மறுநாள் இருபத்தொரு இழையுடைய நூலைக் காப்பாகக் கட்டி ஒருபொழுதும் மட்டும் உண்டு. ஒரு மனமாய் விநாயகருக்குரிய ஓம் எனும் (அ.உ.ம்) மந்திரத்தை மனதுட் செபித்து, பதினாறு வித உபசாரமும் செய்து இப்படியே இருபது நாட்கள் வழிபாடியற்றி மறுநாள் ஆனைமுகன் பிறந்த நாளான மார்கழிச் சதய நட்சத்திரமும், சட்டி திதியும் கூடிய தினத்தில் பல விதமான மாலைகள் கொடுத்து, விநாயகருக்கு அபிஷேகம் செய்து பட்டுச் சாத்தி, சந்தனம் முதலிய சுகந்தம் பூசி, செருந்தி, தீபம் காட்டி, இளநீர், பால், தயிர், செய்யுடன் பருப்பும் அமுதும் படைத்து பூசை செய்து வணங்கினர்.

வரி 569-580

இவர்கள் நோற்பதைக் கண்ட பாம்பின் உருவாய்க் கிடந்த விஷ்ணு தானும் நோற்பேனென விரும்பிக் கேட்க, அவனுக்கும் வேண்டியது உதவி நோற்கச் செய்தனர். அதன் பயனாக விநாயகர் அவருக்கு

அருள் புரிந்து பாம்புரு நீக்கி பழைய உருப்பெறச் செய்தார். விஷ்ணு மகிழ்ந்து வணங்கிக் கொண்டு, உஞ்சைப்பதி போய் சிவனையும் உமையையும் வணங்கினார். இதனைக் கண்ட உமாதேவியார் கோபங் கொண்டு நான் இட்ட சாபம் நீக்கியவர் யாரென கோபித்து தன் மாளிகைக் கதவை அடைத்தார்.

வரி 581-604

சிவபெருமான் கேட்க விஷ்ணு நடந்ததெல்லாம் சொல்லக் கேட்டுத் தானும் விநாயகனை வழிபட்டு உமை அடைத்த கதவு திறந்து மகிழ்ந்தனர். உமா தேவியாரும் தன்னைப் பிரிந்த ஆறுமுகன் திரும்பி வரவேண்டுமென்று விநாயகனை வழிபட்டு நோன்பிருந்தார் ஆறுமுகனும் வந்தனன்.

வரி 605-623

இவ்வாறு நடந்ததெல்லாவற்றையும் நாரத முனிவர் கூற வச்சிரமாலி என்னும் மன்னன் நோற்று உடற்பிணி தீர்ந்து, மீண்டும் அரசாட்சி செய்து திலோத்தமையை மணம் புரிந்து பல மைந்தர்களைப் பெற்று இறுதியில் கயிலை சேர்ந்தான்.

வரி 624-647

இப்புவியில் விக்கிரமாதித்தன் என்பான் இவ்விரத மகிமை அறிந்து நோற்றான். அவனுடைய மனைவியருள் ஒருத்தி இலக்கண சுந்தரி என்பவள் காப்பு நூல் அணிந்து சில நாள் நோற்றபின் விரத உறுதி தளர்ந்து அந்த இழையை அவிழ்த்துக் காய்ந்த கொவ்வையில் எறிந்தாள். அது அலரும் தளிருமாய்ப் படர்ந்து செழித்தது. கொவ்வை அடகு பறிக்க வந்த வேப்பஞ் சேரியிலுள்ள ஒரு பெண் அந்த இழையைக் கண்டெடுத்துத் தன் கையில் கட்டி முறைப்படி நோற்றாள். விநாயகன் அருளால் அவளுக்குப் பல சிறப்பும், செல்வமும் சேர அரசனும் அவளைத் தன் மாளிகையில் வைத்து மகிழ்ந்தான்.

வரி 648-662

விக்கிரமாதித்தன் கனவிலே விநாயகர் தோன்றி இலக்கண சுந்தரி இவ்விடம் இருந்தால் கேடு பல வரும். அவளை விலக்கிவிடு என்று

கூறி மறைந்தார். அவன் தான் கண்ட கனவை அவளுக்குக் கூற ஆனை, குதிரை பல இறக்கவும், நகரம் கேடுறவும் கண்டு அவளை வெளியே துரத்தி விட்டான்.

வரி 663-691

அவள் ஒரு வணிகன் வீடு போக; அவனுடைய மணியும் முத்தும் கல்லாகிட அவளை அவனும் அகற்ற, அவள் ஒரு உழவன் வீட்டில் இருக்க உழவன் பயிர்கள் அழிந்தன. அவனும் கலைக்கக் குயவன் வீட்டில் போக அவன் சட்டி, பானைகளெல்லாம் உடைய அவனும் கலைக்க, துணி வெளுப்போர் மனைபுக அவன் துணிகளெல்லாம் கிழிய அவனும் அவளை கலைக்க, மாலைக்காரன் வீடு போக மாலைகள் பாம்பாக அவனும் கலைக்க, ஒரு அவ்வையின் வீட்டில் போயிருந்தாள், அவ்வை போகும் இடங்களெல்லாம் அவளைத் திட்டியும் அடித்தும் பழித்தும் கொடுமைப்படுத்தினர். அவ்வை கலக்கமடைந்து வீட்டுக்கு வந்து இலக்கண சுந்தரியிடம் நீ யார் என வினவ, அவள் தான் விக்கிரமாதித்தன் மனைவி என்று நடந்ததைக் கூறினான்.

வரி 692-717

அவ்வை அவளை நோக்கிச் சாணி எடுத்து நிலம் மெழுகென அவள் சாணி எடுக்க அது புழுவாகியது. அது கண்டு தானே நிலம் மெழுகி விளக்கேற்றிப் புத்தகம் எடுத்து வாவெனப் புத்தகம் பாம்பாய் இருந்திடக் கண்டு அவள் மயங்கி வீழ்ந்து கிடக்க, அவ்வை தானே புத்தகம் எடுத்துப் பார்த்து இது விநாயகர் செய்யும் காரியம் எனத் துணிந்து தவநெறி பிழைத்த இலக்கண சுந்தரியை விநாயகர் நோன்பினை இருபத்தொரு இழையிலான காப்புக் கட்டி முறைப்படி நோற்கச் செய்தனர். விநாயகரருள் பெற்ற அவள் மகிழ்ந்திருந்தாள்.

வரி 718-745

விக்கிரமாதித்தன் பெருஞ் சேனையுடன் வேட்டைக்குச் சென்று களைத்து தாகத்துக்கு நீர் வேண்டி அவ்வையிடம் வந்தான். அவ்வை அவளுக்கு அப்பமும் நீரும் கொடுவென இலக்கண சுந்தரியை விடுப்ப அவள் கொண்டுபோய்க் கொடுக்க மன்னனும் சேனையும் பசிதீர உண்டு யானை, குதிரைகளும் உண்டும் அது குறையாததைக் கண்ட விக்கிரமாதித்தன் இவ்வித பண்டம் சமைத்த நீ யாரெனக் கேட்க அவள் மௌனமாய் நிற்க அவ்வை அவ்விடம் சென்று இவள் உன் மனைவி இலக்கண சுந்தரி, விநாயகர் நோன்பின் பயன் இது என்று கூற மன்னன் மகிழ்ந்து, ஒரு வெள்ளிச் சிவிகையில் ஏற்றிக் கொண்டு மாளிகை சென்று முன் போலப் பட்டத்தரசியாக்கி மகிழ்ந் திருந்தான்.

# போற்றித் திருவகவல்

அருள்புரிந் தருளு மரசே போற்றி
இருவினை துடைக்கு மிறைவா போற்றி
மறைமுனி யொருவன் மாங்கனி கொணர்ந்து
கறைமிடற் றிறைவன் கையிற் கொடுப்ப
வேலனு நீயும் விரும்பி முன்னிற்ப
ஒருநொடி யதனி லுலகெலாம் வலமாய்
வருமவர் தமக்கு வழங்குவோம் யாமென
விரைவுடன் மயின்மிசை வேலோன் வருமுனர்
அரனை வலம்வந் தக்கனி வாங்கிய
விரகுள விக்ன விநாயக போற்றி
முன்னடி தெரியா முதல்வனைப் போற்றி
பின்னடி தெரியாப் பெருங்கவிப் பெருமான்
மண்மிசை வைத்துனை வாவியிற் செல்லக்
கண்ணிலா னிவனெனக் கரந்தவன் போகக்
கரைமிசை யேறிக் காணா திரங்கி
உரைதடு மாறி யுள்ளங் கலங்கிக்
கூகூ கணபதி கூகூ வென்னக்
கூகூ வென்றருள் குன்றே போற்றி
அப்பணி சடையோன் முப்புர மெரிக்க
இப்புவி யதனை யிரத மாக்கித்
தினகரன் மதிசேர் சில்லி யாகப்
பொருவரு மறைகளே புரவி யாகச்
சங்கைசேர் நான்முகன் சாரதி யாகப்
பங்கயக் கண்ணன் பகழி யாக
மலைசிலை யாக வாசுகி நாணா
நிலைபெற நிற்கு நெடுந்தேர் தன்னில்
விக்கினந் தீர்க்கும் விநாயக நமவெனச்
கிக்கென விறைவன் செப்பா தேறலின்
தச்சுறச் தருளு மரசே போற்றி
வேதப் பொருளாம் விமலா போற்றி
பூதப்படை யுடைப் புனிதா போற்றி
கரமைந்துடைய களிறே போற்றி
பரமன் பயந்த பாலா போற்றி

அகில மீன்றருளு எம்மை தனக்குத்
திரும னாகிய செல்வா போற்றி
அற்றவர்க் கருள்புரி யரசே போற்றி
கற்றவர் மனதிற் காண்பாய் போற்றி
பாசாங் குசங்கை பரித்தாய் போற்றி
தேசார் மணிமுடித் தேவே போற்றி
எழுநர கெழுபிறப் பறுப்பாய் போற்றி
எழுமையு மெமக்கங் கிரங்குவாய் போற்றி
துளைசெறி வக்கிர துண்டா போற்றி
வளநிக ரொற்றை மருப்பா போற்றி
வரமிகு மரிதிரு மருகா போற்றி
சுரர்தொழு முருகன் றுணைவா போற்றி
நல்லவர் புகழு நம்பா போற்றி
வல்லபைக் குரிய மணாளா போற்றி
கயமுகத் தவுணனைக் காய்ந்தாய் போற்றி
வயமிகு மூஷிக வாகனா போற்றி
ஓங்காரத் தனி யுருவே போற்றி
நீங்காக் கருணை நிமலா போற்றி
துறவர் தமக்கொரு துணைவா போற்றி
துண்ட மாமதிபோற் றுலங்கிய கோட்டாற்
கண்டக மாகக் கைதனிற் பிடித்துப்
பண்டு பாரதப் பழங்கதை பசும்பொன்
விண்டுவின் வரைந்த விமலா போற்றி
போற்றி போற்றியுன் பொற்பதம் போற்றி.

# விநாயகர் காரிய சித்தி மாலை



பந்தம் அகற்றும் அநந்தகுணப் பரப்பும் எவன்பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில் ஈண்டி இருந்து கரக்குமோ
சந்தமறை ஆகமங் கலைகள் அனைத்தும் எவன்பால் தகவருமோ
அந்த இறையாம் கணபதியை அன்பு கூரத் தொழுகின்றோம்.

உலகமுழுவதும் நீக்கமற ஒன்றாய் நிற்கும்பொருள் எவன்அவ்
உலகிற்பிறக்கும் விவகாரங்கள் உறாதமேலாம் ஒளியாவன்?
உலகம் புரியும் வினைப் பயனை ஊட்டும் களைகண் எவன் அந்த
உலக முதலைக் கணபதியை உவந்து சரணம் அடைகின்றோம்.

இடர்கள் முழுதும் எவனருளால் எரிவீழும் பஞ்சென மாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால் சுரர்வழ் பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க்கு ஊறின்றி கருமம் எவனால் முடிவுறும் அத்
தடவுமருப்புக் கணபதி பொன் சரணம் அடைகின்றோம்.

மூர்த்தியாகித் தலமாகி முந்நீர் கங்கை முதலான
தீர்த்தமாகி அறிந்தறியாத் திறத்தினாலும் உயிர்க்கு நலம்
ஆர்த்திநாளும் அறியாமை அகற்றி அறிவிப்பான் எவன் அப்
போர்த்த கருணைக் கணபதியைப் புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.

செய்யும் வினையின் முதல்யாவன் செய்யப்படும் அப்பொருள் யாவன்
ஐயமின்றி உளதாகும் அந்தக் கருமப் பயன் யாவன்
உய்யும் வினையின் பயன் விளைவில் ஊட்டி விடுப்பான் எவன் அந்தப்
பொய்யி இறையைக் கணபதியைப் புரிந்து சரணம் அடைகின்றோம்.

வேதம் அளந்தும் அறிவரிய விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேத முடிவில் நடம் நவிலும் விமலன் யாவன் விளங்குபர
நாதமுடிவில் வீற்றிருக்கும் நாதன்எவன் எண்குணன் எவன்அப்
போதமுதலைக் கணபதியைப் புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.

மண்ணின் ஓர் ஐங்குணமாகி வதிவான் எவன் நீரிடை நான்காய்
நண்ணி அமர்வான் எவன்தீயின் மூன்றாய் நவில்வான் எவன் வளியின்
எண்ணும் இரண்டு குணமாகி இயைவான் எவன் வானிடை ஒன்றாம்
அண்ணல் எவன் அக்கணபதியை அன்பிற் சரணம் அடை கின்றோம்.
பாச அறிவில் பசுஅறிவில் பற்றற்கரிய பரன்யாவன்
பாச அறிவும் பசுஅறிவும் பயிலப் பணிக்கும் அவன்யாவன்
பாச அறிவும் பசுஅறிவும் பாற்றி மேலாம் அறிவான
தேசன் எவன் அக்கணபதியைத் திகழச் சரணம் அடைகின்றோம்.

**நூற்பயன்**

*இந்த நமது தோத்திரத்தை யாவன் மூன்று தினமும் உம்மைச் சந்தி களில் தோததிரஞ்செயினும் சகல கரும சித்திபெறும் சிந்தை மகிழச் சுகம்பெறும்எண் தினம்உச் சரிக்கின் சதுர்த்தியிடைப் பந்தம் அகல ஓர்எண்கால் படிக்கில் அட்ட சித்தியுறும். திங்கள் இரண்டு தினந்தோறும் திகழ ஒருபான் முறையோதில் தங்கும் அரச வசியமாம் தயங்க இருபத் தொருமுறைமை பொங்கும் உழுவ லால்கிளப்பின் பொருவின் மைந்தர் விழுக்கல்வி துங்க வெறுக்கை முதற்பலவும் தோன்றும் எனச்செப் பினர் மறைந்தார்.*

ஆக்கம்: காசிப முனிவர்
தமிழில்: கச்சியப்பர்

# ஸ்ரீ கணேச "பஞ்சரத்னம்"

முதா கராத்த மோதகம் ஸதா விமுக்தி ஸாதகம்
கலாதராவ தம்ஸகம் விலாஸிலோக ரக்ஷகம்
அநாயகைக நாயகம் விநாசிதேப தைத்யகம்
நதாசபாசு நாசகம் நமாமி தம் விநாயகம்.

நதேதராதி பீகரம் நவோதி தார்க்க பாஸ்வரம்
நமத்ஸுராரி நிர்ஜ்ஜரம் நதாதிகாப துத்தரம்
ஸுரேச்வரம் நிதீச்வரம் கஜேச்வரம் கணேச்வரம்
மஹேச்வரம் தமாச்ரயே பராத்பரம் நிரந்தரம்.

ஸமஸ்தலோக சங்கரம் நிரஸ்த தைத்ய குஞ்ஜரம்
தரேதரோத ரம்வரம் வரேபவக்த்ர மக்ஷரம்
க்ருபாகரம் க்ஷமாகரம் முதாகரம் யசஸ்கரம்
மநஸ்கரம் நமஸ்க்ருதம் நமஸ்கரோமி பாஸ்வரம்.'

அகிஞ்ச நார்த்தி மார்ஜநம் சிரந்தநோக்தி பாஜநம்
புராரி பூர்வ நந்தனம் ஸுராரி கர்வ சர்வணம்
ப்ரபஞ்ச நாச பீஷணம் தனஞ்ஜயாதி பூஷணம்
கபோலதாந வாரணம் பஜே புராண வாரணம்.

நிதாந்தகாந்த தந்த காந்தி மந்த காந்த காத்மஜம்
அசிந்த்யஷரூப மந்தஹீந மந்தராய க்ருந்தநம்
ஹ்ருதந்தரே நிரந்தரம் வஸந்தமேவ யோகிநாம்
தமேகதந்த மேகதம் விசிந்தயாமி ஸந்தகம்.

மஹாகணேச பஞ்சரத்ந மாதரேண யோந்வஹம்
ப்ரஜல்பதி ப்ரபாதகே ஹ்ருதி ஸ்மரந் கணேச்வரம்
அரோகதாம தோஷதாம் ஸுஸாஹிதீம் ஸுபுத்ரதாம்
ஸமாஹிதாயை ரஷ்டபூதி மம்யுபைதி ஸோசிராத்.

# திருமறைக்காடு

திருமறைக் காட்டில் வேதங்களால் அடைக்கப்பட்டிருந்த ஆலயக் கதவை அடியார்களின் தரிசனத்திற்காகத் திறக்கப் பாடிய திருக்குறுந்தொகைப் பதிகம். இதன் காரணமாக ஆலயங்களில் குடமுழுக்கு நிறைவேறிய பின்னர் நடைபெறும் தசதரிசனத்திலும், மகா உற்சவகாலத்தில் நடைபெறும் பக்த முத்திபாவன உற்சவத்திலும் அடியார்களின் தரிசனத்திற்காக திருக்கதவு திறக்க இப் பாடல் பாடப்படுகின்றது.

5ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

பண்ணின் நேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னார்வலஞ் செய்ம்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே 1

ஈண்டு செஞ்சடை யாகத்துளீசரோ
மூண்ட கார்முகி லின்முறிக் கண்டரோ
ஆண்டு கொண்டநீ ரேயருள் செய்திடும்
நீண்ட மாக்கத வின்வலி நீக்குமே 2

அட்ட மூர்த்திய தாகிய அப்பரோ
துட்டர் வான்புரஞ் சுட்ட சுவண்டரோ
பட்டங் கட்டிய சென்னிப் பரமரோ
சட்ட விக்கத வந்திறப் பிம்மினே. 3

அரிய நான்மறை யோதிய நாவரோ
பெரிய வான்புரஞ் சுட்ட சுவண்டரோ
விரிகொள் கோவண ஆடை விருத்தரோ
பெரிய வான்கத வம்பிரி விக்கவே. 4

மலையில் நீடிருக் கும்மறைக் காடரோ
கலைகள் வந்திறைஞ் சுங்கழலே த்தரோ
விலையில் மாமணி வண்ண வுருவரோ
தொலைவி லாக்கத வந்துணை நீக்குமே. 5

பூக்குந் தாழை புறணி யருகெலாம்
ஆக்குந் தண்பொழில் சூழ்மறைக் காடரோ
ஆர்க்குங் காண்பரி யீரடி கேளுமை
நோக்கிக் காணக் கதவைத் திறவுமே. 6

வெந்த வெண்பொடிப் பூசும் விகிர்தரோ
அந்த மில்லி யணிமறைக் காடரோ
எந்தை நீயடி யார்வந் திறைஞ்சிட
இந்த மாக்கத வம்பிணி நீக்குமே. 7

ஆறு சூடும் அணிமறைக் காடரோ
கூறு மாதுமைக் கீந்த குழகரோ
ஏற தேறிய எம்பெரு மானிந்த
மாறி லாக்கத வம்வலி நீக்குமே. 8

சுண்ண வெண்பொடிப் பூசுஞ் சுவண்டரோ
பண்ணி யேறுகந் தேறும் பரமரோ
அண்ண லாதி யணிமறைக் காடரோ
திண்ண மாக்கத வந்திறப் பிம்மினே. 9

விண்ணு ளார்விரும் பியெதிர் கொள்ளவே
மண்ணு ளார்வணங் கும்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே. 10

அரக்க னைவிர லாலடர்த் திட்டநீர்
இரக்க மொன்றிலீ ரெம்பெரு மானிரே
சுரக்கும் புன்னைகள் சூழ்மறைக் காடரோ
சரக்க விக்கத வந்திறப் பிம்மினே. 11

திருச்சிற்றம்பலம்

## திருமுறை ஓதல் – ஏன், எப்படி?

சிவன் வடமொழியும் தென்தமிழும் ஆனவர். அவரைப் புகழ்ந்துபாடி அருளைப் பெறுவதற்குரிய நூல்கள் ஈரிடத்துமுள. தமிழில் அதன் பெருக்கம் அதிகமானதால் தமிழைப் பக்திமொழி என்று பிறரும் போற்றினர்.

இறையைப் புகழும் பக்திப் பாடல்கள் சங்ககாலம் முதலாக இன்றளவும் தோன்றிக்கொண்டேயிருக்கின்றன. ஆயினும் சைவ சமயிகள் பன்னிரு திருமுறை என்று வரையறை செய்து அவற்றை உச்சிமேற்கொண்டு போற்றி வருகின்றனர். கற்கோயிலிற்போன்றே சொற்கோயிலிலும் சிவன் நீங்காமலுறைகின்றார் எனக் கொண்டு திருமுறைச் சுவடிகளுக்குத் தினப் பூசையும் விழாவும் செய் கின்றார்கள்.

திருமுறைகளுள் சிவபிரான் அடியெடுத்துக் கொடுக்கப் பாடியனவும், பாடுமாறு வேண்டிடப் பாடியனவும், கரம் வருந்தி எழுதியனவும், பக்தருக்குப் பொன்னளிக்கச் செய்த சிபார்சும் எனப் பல உள.

பித்தாப்பிறை சூடி, தில்லைவாழ் அந்தணர் எனுந் தொடக்கத்தனவாகிய சுந்தரர் பதிகங்களும் பெரிய புராணமும் சிவபிரான் அடியெடுத்துக் கொடுக்கப் பாடியன; திருக் கோவையார் பாடுமாறு வேண்டிடப் பாடியது; திருவாசகமும் திருக்கோவை யாரும் எழுதியருளப்பட்டவை; திருமுகப் பாசுரம் பாணபத்திரன் எனப் பெயரிய பக்தனுக்குப் பொன்னளிக்குமாறு சிவபிரான் எழுதியது. இவை திருமுறைகளின் தனிச்சிறப்புக்கள்.

திருமுறைகள் இம்மையிலேற்படும் நோய், பிணி, துயர் முதலியவற்றைத் தீர்த்தும் அம்மையாகிய சிவப்பேற்றுக்கு ஆளாக்கியும் அருள வல்லவை. யார் யார் தத்தமக்கு ஏற்படுகின்ற துன்பங்கள் தீருமாறு பொருத்தமான திருமுறைகளை ஓதி வழிபடுகின்றார்களோ அவர்களுக்கு அவற்றினின்றும் விடுதலை கிடைத்து வருவதனை அறிவார் அறிவர்.

மெய்யன்புடன் திருமுறைகளை ஓதிவந்தால் அவற்றிற்கு உரிய பலன்களைப் பெறலாம் என்பதற்கு இரண்டு உண்மைச் சம்பவங்களைக் குறிப்பிடலாம். 1958 ஆம் ஆண்டு சங்கானையைச் சேர்ந்த நாகலிங்கப் பரதேசியார் என்ற பண்ணிசையாசான் தன் கொடிய வறுமைத் துயரைச் சுமந்த நெஞ்சோடு தவத்திரு யோகர் சுவாமிகளிடம் சென்றார். சுவாமிகள் "இடரினும் தளரினும்" எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடப் பணித்தார். இது திருஞான சம்பந்தர் தன் தந்தையார் யாகம் செய்யப் பொருளின்றி வாடிய போது பாடியபதிகம் பாடிய போது சிவபூதம் பொற்கிழியைக் கொண்டுவந்து கொடுத்தமை பெரியபுராண வரலாறு. யோகசுவாமியின் வழிகாட்டலின் படி பரதேசியார் மெய்யுருகிப் பாடினார். எட்டாம் பாடலைப் பாடும்போது காரொன்று வந்து நின்றது, அடியவர்கள் இறங்கினர்; அவர்களது கையிலே பழங்களும் முடிச் சொன்றும் உள்ள தட்டு. அதைக் கொண்டுவந்து யோகருக்கு முன்னே வைத்து வழிபட்டனர். பரதேசியார் பாடி முடிகிறது; சுவாமிகள் முடிச்சை எடுத்து அவிழ்த்தார். முழுவதும் தங்க நாணயங்கள். அங்கு பாடலைக் கேட்டுக் கொண்டிருந்த யாவருக்கும் ஒவ்வொரு காசு கொடுத்தார்; மீதி முழுவதையும் பரதேசியாரிடம் முடிந்து கொடுத்தார்.

இவ்வாறே; 1964 இல் திருக்கேதீச்சரத்துச் சிவபூஜை மடத்திலே தாபிக்க வென்று கீரிமலையிலிருந்து திருநாவுக்கரசர் திருவுருவம் வவுனியா வழியாகச் செட்டிக்குளம் சென்று அவ்வழியே செல்வதாக ஏற்பாடு செய்தனர்; யாத்திரைக் குழு பெரியபுராணங் காட்டும் பக்திபரிமளிப்புக்களோடு சென்றுகொண்டிருந்தது; செட்டிக்குள காட்டுவழியில் மதம் சொரியும் குழுவன் யானை யொன்று நடு வீதியில் நின்று ஆரவாரம் செய்கிறது; யாத்திரையில் வந்தவர்கள் யாவரும் "சுண்ண வெண் சந்தனச் சாந்தும்" என்ற நாவரசர் பதிகத்தைப் பண்ணெழப் பாடினர். யானை வெருண்டு குதித்தோடி விட்டது. யாத்திரை தொடர்ந்தது.

மேற்குறித்த வரலாறுகள் இரண்டும் ஆயிர வருடத்துப் பழங்கதைகள் அன்று. இவற்றைப் பார்த்துப் பலன் பெற்ற சிலர் இன்னும் இருக்கிறார்கள். திருமுறைகளை கால நேர தேவைகளை

அறிந்து முறையாக ஓதி வழிபட்டு வந்தால்அவை தப்பாமலே பலனளிக்கும் என்பதற்கு இவை சான்றாகும்.

**திருமுறை ஓதுவது எப்படி?**

திருமுறைகளை யாரும் தமது வழிபாட்டின் போது ஓதலாம்; எத்தனை தடவை திருப்பித்திருப்பிக் கூறியும் வழிபடலாம். ஆனால்; பூஜையில் ஓதுவதற்குப் பின்வரும் நியதிகள் உள்ளன.

* சமயதீட்ஷையாவது பெற்று சைவ அநுட்டானம் செய்து உருத்திராக்கமும் தரித்திருப்பவரே பூஜையில் திருமுறை ஓதவேண்டும்.

* புலால், மாமிசம், மது ஆகியவற்றை உட்கொள்வோர் திருமுறை ஓதுவதற்கு அருகதை அற்றவர்களாவர்.

* பூஜையில் திருமுறை ஓதுவது இசைக் கச்சேரியிலே பாடுவது போலன்றி விண்ணப்பஞ் செய்வதே ஆகும். ஆதலால் ஒரு பாடலடியைத் திரும்பத் திரும்பப் பாடலாகாது.

* தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப் புராணம் (பெரியபுராணம்) எனும் இவற்றை ஓதிய பின்பே வேறு புராணங்களையோ, திருப்புகழ், அபிராமியந்தாதி முதலிய தோத்திரங்களையோ பாட வேண்டும்.

* தேவாரங்களிலும் திருத்தாண்டகப் பாடல்களையே பூஜையில் விண்ணப்பஞ் செய்வது சிறந்தது என்பர்.

* மகோற்ஷவ காலங்களில் யாகசாலைப் பூஜையில் பஞ்சாக்ஷரப் பதிகங்களிலுள்ள பாடல்களைப் பாடுவது முறையாகும்.

* விழாக்காலங்களிலும் நிகழும் விஷேடங்களுக்குப் பொருத்த மான புராண வரலாறுகள், தத்துவ விளக்கங்கள் அமைந்த பாக் களைத் தெரிவு செய்து பாடுவதும் சிறப்பாகும்.

* திருமுறை முற்றோதல்களை நிகழ்த்தும்போது தினமும் திருமுறைச் சுவடிகளுக்குத் தூபதீப உபகாரங்களைச் செய்து பத்திரமாகப் புத்தகத்தை எடுத்துப் படிக்க வேண்டும்.

ஒவ்வொரு திருமுறைகளும் ஓதி முடியும் நாள்களில் மாகேஸ்வர பூஜை செய்தல் சிறப்பு. முடியாது விடின் நிறைவிலாவது செய்தல் வேண்டும்.

* திருஞான சம்பந்தர் பாடிய பதிகங்கள் அனைத்தினையும் தினமும் பாராயணம் செய்த பலனை அவர் பாடியருளிய திரு வெழுக்கூற்றிருக்கை எனும் பிரபந்தமே அருளும். எனவே இதனைத் தினமும் பாராயணம் செய்தல் சிறப்பு.

* அடங்கன் முறையிலுள்ள தேவாரத் திருப்பதிகங்கள் முழு வதையும் பாராயணம் செய்ய முடியாதவர்கள் அகத்திய முனி வராலே தொகுக்கப்பட்ட இருபத்தைந்து பதிகங்களையாவது பாராயணம் செய்தல் நன்று.

* திருவாசகம் முழுவதையும் ஓதமாட்டாதவர்கள் சிவபுராணத்தை யாவது ஓதுவது நன்று.

திருமுறைகளை ஓதும் போது எத்தனை பாடல்களை ஓதினோம் என்பதிலும் பார்க்க ஒரு பாடலையாவது "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி" ஓதுவதே சிறப்பாகும்.

சிவசிவ

சிவத்திரு. ஏ. அனுசாந்தன்,
ஆதீனப்புலவர், திருவாவடுதுறை ஆதீனம்,
தமிழ்நாடு.

# பஞ்சபுராணப் பாடல்கள்

## ஞாயிற்றுக்கிழமை

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

பண் : சீகாமரம் திருமுறை - 2

பாடியவர் - திருஞானசம்பந்தர்

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினைவு
ஆயினவே வரம்பெறுவர் ஐயுறவேண்டா வொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர்தம்மைத் தோயாவாம் தீவினையே.

## திருவாசகம்

திருமுறை - 8

பாடியவர் - மாணிக்கவாசகர்

பால்நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவது இனியே.

## திருவிசைப்பா

திருமுறை - 9

பண் : காந்தாரம் பாடியவர் - கருவூர்த்தேவர்

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே

# திருப்பல்லாண்டு

திருமுறை - 9

பண் : பஞ்சமம் பாடியவர் - சேந்தனார்

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி
ஈசற்காட் செய்ம்மின் குழாம்புகுந்து
அண்டங் கடந்த பொருள் அள
வில்லாதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் மின்றுமென்று முள்ள
பொருளென்றே பல்லாண்டு கூறுதுமே.

# பெரியபுராணம்

திருமுறை - 12
பாடியவர் - சேக்கிழார்

ஆதியாய் நடுவு மாகி அளவிலா வளவு மாகிச்
சோதியாய் உணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா யேக மாகிப் பெண்ணுமா யாணு மாகிப்
போதியா நிற்கும தில்லைப்பொதுநடம் போற்றிபோற்றி.

திருச்சிற்றம்பலம்

# திங்கட்கிழமை

## தேவாரம்

திருமுறை - 3

பண் : கொல்லி  திருச்சிற்றம்பலம்  பாடியவர் - திருஞானசம்பந்தர்

மண்ணில்நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல் லகதிக்கு யாதுமோர் குறைவில்லை
கண்ணின்நல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

## திருவாசகம்

திருமுறை - 8

பாடியவர் - மாணிக்கவாசகர்

நானேயோர் தவஞ்செய்தேன் சிவாயநம
வெனப்பெற்றேன்
தேனாயின் னமுதமுமாய்த் தித்திக்குஞ்
சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற்
கருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறு த்தன்றே
வெறுத்திடவே.

## திருவிசைப்பா

திருமுறை - 9

பண் : சாரளபாணி  பாடியவர் - பூந்துருத்தி நம்பிகாடநம்பி

எம்பந்த வல்வினைநோய் தீர்த்திட் டெமையாளும்
சம்பந்தன் காழியர்கோன் தன்னையுமாட்கொண்டருளி
அம்புந்து கண்ணாளுந் தானும் அணிதில்லைச்
செம்பொன்செய் அம்பலமே சேர்ந்திருக்கை ஆயிற்றே.

# திருப்பல்லாண்டு

திருமுறை - 9
பாடியவர் - சேந்தனார்
பண் : பஞ்சமம்

சொல்லாண்ட சுருதிப்பொருள்
சோதித்த தூய்மனத் தொண்ட ருள்ளீர்
சில்லாண் டிற்சிதையுஞ்சில
தேவர் சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரள்
மேரு விடங்கன் விடைப் பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

# பெரியபுராணம்

திருமுறை - 12
பாடியவர் - சேக்கிழார்
பண் : கொல்லி

தூய வெண்ணீறு துதைந்தபொன் மேனியுந் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவருஞ் சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும் பதிகச்செஞ்சொல்
மேயசெவ்வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே.

திருச்சிற்றம்பலம்

# செவ்வாய்க்கிழமை

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

திருமுறை - 4

பண் : திருவிருத்தம்

பாடியவர் - திருநாவுக்கரசு நாயனார்

ஈன்றாளு மாயெனக் கெந்தையு மாயுடன் தோன்றினராய்
மூன்றா யுலகம் படைத்துகந்தான் மனத்துள்ளிருக்க
ஏன்றா னிமையவர்க் கன்பன் திருப்பா திரிப்புலியூர்த்
தோன்றாத் துணையா யிருந்தனன் தன்னடியோங்களுக்கே.

## திருவாசகம்

திருமுறை - 8

பண் : கொல்லி

பாடியவர் - மாணிக்கவாசகர்

காலமுண் டாகவே காதல்செய்
துய்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண் டாளங்கள் பாண்டிப்
பிரான்றன் அடியவர்க்கு
மூலபண்டாரம் வழங்குகின்
றான்வந்து முந்துமினே.

## திருவிசைப்பா

திருமுறை - 9

பண் :சாரளபாணி

பாடியவர் - பூந்துருத்தி நம்பிகாடநம்பி

களையா உடலோடு சேரமான் ஆரூரன்
விளையா மதமாறா வெள்ளானை மேற்கொள்ள
முளையா மதிசூடி மூவா யிரவரொடும்
அளையா விளையாடும் அம்பலம்நின் ஆடரங்கே.

# திருப்பல்லாண்டு

திருமுறை - 9

பண் : பஞ்சமம் பாடியவர் - சேந்தனார்

சீருந் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற் றேன் பெற்ற
தார்பெறு வார்உலகில்
ஊரும் உலகும் கழற உளறி
உமைமண வாளனுக்காய்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

# பெரியபுராணம்

திருமுறை - 12

பாடியவர் - சேக்கிழார்

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம்ஒரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

திருச்சிற்றம்பலம்

# புதன்கிழமை

## தேவாரம்

திருமுறை - 6

திருத்தாண்டகம் பாடியவர் - திருநாவுக்கரசர்

திருச்சிற்றம்பலம்

திருநாமம் அஞ்செழுத்துஞ் செப்பா ராகில்
தீவண்ணர் திறமொருகால் பேசா ராகில்
ஒருநாளும் திருக்கோயில் சூழா ராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட்டுண்ணா ராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகில்
அளியற்றார் பிறந்தவா றேதோ வென்னில்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்தும் செத்தும்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின் றாரே.

## திருவாசகம்

திருமுறை - 8

பாடியவர் - மாணிக்கவாசகர்

வேண்டத் தக்க தறிவோய் நீ
வேண்ட முழுதுந் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற் கரியோய்நீ
வேண்டி யென்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா யருள்செய்தாய்
யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே.

## திருவிசைப்பா

திருமுறை - 9

பண் : பஞ்சமம் பாடியவர் - சேந்தனார்

ஏக நாயகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போக நாயகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேக நாயகனை மிகுதிரு வீழிமிழலை
விண்ணழி செழுங் கோயில்
யோக நாயகனை அன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

## திருப்பல்லாண்டு

திருமுறை - 9

பண்- பஞ்சமம் பாடியவர் - சேந்தனார்

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப்
பாற்கட லீந்தபிரான்
மாலுக்குச் சக்கரமன் றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## பெரியபுராணம்

திருமுறை - 12

பாடியவர் - சேக்கிழார்

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினிலோங் கியஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமு தல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்.

திருச்சிற்றம்பலம்

## வியாழக்கிழமை

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

திருமுறை - 7

பண் : கொல்லி

பாடியவர் - சுந்தரர்

தம்மையேபுகழ்ந் திச்சைபேசினும்
சார்வினும் தொண்டர் தருகிலாய்
பொய்ம்மையாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மையே தரும் சோறும் கூறையும்
ஏத்தலாம் இடர்கெடலுமாம்
அம்மையே சிவ லோகமாள்வதற்(கு)
யாது மையுற வில்லையே.

## திருவாசகம்

திருமுறை - 8

பாடியவர் - மாணிக்கவாசகர்

அன்றே யென்றன் ஆவியும்
உடலும் உடைமை யெல்லாமும்
குன்றே யனையாய் என்னையாட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோ ரிடையூ றெனக் குண்டோ
எண்டோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே.

## திருவிசைப்பா

பண் : பஞ்சமம்

திருமுறை - 9

பாடியவர் - கருவூர்த்தேவர்

தத்தையங் கனையார் தங்கள்மேல் வைத்த
தயாவைநூ றாயிரங் கூறிட்(டு)
அத்திலங் கொருகூ(று) உன் கண்வைத் தவருக்(கு)
அமருல களிக்கும்நின் பெருமை
பித்தனென் றொருகால் பேசுவ ரேனும்
பிழைத்தவை பொறுத்தருள் செய்யும்
கைத்தலம் அடியேன் சென்னிவைத்த கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே.

## திருப்பல்லாண்டு

திருமுறை - 9
பாடியவர் - சேந்தனார்

பண் : பஞ்சமம்

தாதையைத் தாளற வீசிய
சண்டிக்கிவ் அண்டத்தொடு முடனே
பூதலத் தோரும் வணங்கப்பொற்
கோயிலும் போனகமும் அருளிச்
சோதி மணிமுடித் தாமமும்
நாமமும் தொண்டர்க்கு நாயகமுமாய்ப்
பாதகத் துக்குப் பரிசுவைத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## பெரியபுராணம்

திருமுறை - 12
பாடியவர் - சேக்கிழார்

ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித் துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக் கண் களிப்பக் கண்டார்கள்.

திருச்சிற்றம்பலம்

# வெள்ளிக்கிழமை

## தேவாரம்

திருமுறை - 7

பண் : தக்கேசி திருச்சிற்றம்பலம் பாடியவர் - சுந்தரர்

பொன்னும் மெய்ப்பொரு ளுந்தரு வானைப்
போக மும்திரு வும்புணர்ப் பானைப்
பின்னை யென்பிழை யைப்பொறுப் பானைப்
பிழையெ லாந்தவி ரப்பணிப் பானை
இன்ன தன்மைய னென்றறிய வொண்ணா
எம்மா னையெளி வந்த பிரானை
அன்னம் வைகும் வயற்பழ னத்தணி
யாரூ ரானை மறக்கலு மாமே.

## திருவாசகம்

திருமுறை - 8

பாடியவர் - மாணிக்கவாசகர்

மெய்தா னரும்பி விதிர் விதித் (து)
துன்விரை யார் கழற்கென்
கைதான் தலை வைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பி யுள்ளம்
பொய்தான் தவிர்ந்து உன்னைப் போற்றி
சயசய போற்றி யென்னுங்
கைதான் நெகிழ விடேனுடையாய்
யென்னைக் கண்டு கொள்ளே.

## திருவிசைப்பா

திருமுறை - 9

பண் : இந்தளம் பாடியவர் - திருவாலியமுதனார்

அன்ன நடையார் அமுத
மொழியார் அவர்கள் பயில்தில்லைத்
தென்னன் தமிழும் இசையும்
கலந்த சிற்றம் பலந்தன்னுள்
பொன்னும் மணியும் நிரந்த
தலத்துப் புலித்தோல் பியற்கிட்டு
மின்னின் இடையாள் உமையாள்
காண விகிர்தன் ஆடுமே.

திருக்கோவிற் பாமாலை – 75

## திருப்பல்லாண்டு

திருமுறை - 9
பாடியவர் - சேந்தனார்

பண் : பஞ்சமம்

குழலொலி யாழொலி கூத்தொலி
ஏத்தொலி எங்கும் குழாம்பெருகி
விழவொலி விண்ணள வும்சென்று
விம்மி மிகுதிரு வாரூரின்
மழவிடை யாற்கு வழிவழி
யாளாய் மணஞ்செய் குடிப்பிறந்த
பழஅடி யாரொடும் கூடிஎம்
மானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## பெரியபுராணம்

திருமுறை - 12
பாடியவர் - சேக்கிழார்

மண்ணி னிற்பிறத் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லார்அடி யார்தமை யமுதுசெய் வித்தல்
கண்ணி னால் அவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மை யாமெனின் உலகர்முன் வருக வென்றுரைப்பார்.

திருச்சிற்றம்பலம்

# சனிக்கிழமை

## தேவாரம்

திருமுறை - 4
பாடியவர் - திருநாவுக்கரசர்

திருச்சிற்றம்பலம்

கருவுற்ற நாள்முத லாகஉன் பாதமே காண்பதற்கு
உருகிற்றென்னுள்ளமும் நானும் கிடந்தலந்தெய்தொழிந்தேன்
திருவொற்றி யூரா திருவாலவாயா திருவாரூரா
ஒருபற் றிலாமையும் கண்டிரங் காய்கச்சி யேகம்பனே.

## திருவாசகம்

திருமுறை - 8
பாடியவர் - மாணிக்கவாசகர்

இன்றெனக் கருளி யிருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலாற் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாந்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றுநீ யல்லை யன்றியொன் றில்லை
யாருன்னை யறியகிற் பாரே.

## திருவிசைப்பா

திருமுறை - 9
பண் : பஞ்சமம் பாடியவர் - கண்டராதித்தர்

முத்தீயாளர் நான்மறையர் மூவா யிரவர் நின்னோடு
ஒத்தே வாழும்தன்மை யாளர் ஓதிய நான்மறையைத்
தெத்தேயென்றுவண்டு பாடும் தென்தில்லை அம்பலத்துள்
அத்தாவுன்றன் ஆடல்காண அணைவதும் என்றுகொலோ.

# திருப்பல்லாண்டு

திருமுறை - 9
பண் : பஞ்சமம்
பாடியவர் - சேந்தனார்

நிட்டை யிலாவுடல் நீத்தென்னை ஆண்ட
நிகரிலா வண்ணங்களும்
சிட்டன் சிவனடி யாரைச்சீராட்டுந்
திறங்களு மேசிந்தித்(து)
அட்ட மூர்த்திக்கென் அகம்நெகஊறும்
அமிர்தினுக் காலநிழல்
பட்டனுக் கென்னைத்தன் பாற்படுத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

# பெரியபுராணம்

திருமுறை - 12
பாடியவர் - சேக்கிழார்

இறவாத இன்ப அன்பு
வேண்டிப் பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டு நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுஉன்
அடியின்கீழ் இருக்க என்றார்.

திருச்சிற்றம்பலம்

# கொடியேற்றத்தின்போது-ஸ்தம்பத்தடியில் ஓதவேண்டிய திருமுறைகள்

திருச்சிற்றம்பலம்

கணபதி தாளம்: பண்: தக்கராகம்

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீள்
உடையுங் கொண்ட வுருவ மென்கொலோ.

துணிவளர்திங்கள் துளங்கிவிளங்கச் சுடர்ச்சடை சுற்றிமுடித்துப்
பணிவளர்கொள்கையர் பாரிடஞ்சூழ வாரிடமும் பலிதேர்வர்
அணிவளர்கோல மெலாஞ்செய்துபாச்சி லாச்சிரா மத்துறைகின்ற
மணிவளர்கண்டரோ மங்கையைவாட மயல்செய்வதோ விவர்மாண்பே

விநாயகர், சிவபெருமான்

மூஷிக தாளம் / ரிஷப தாளம் பண்: காந்தார பஞ்சமம்

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரன்அஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலம் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கலம் நமச்சி வாயவே.

இடரினும் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடுதுறை அரனே.

ஆடி னாய்நறு நெய்யொடு பால்தயிர் அந்த ணர்பிரி யாதசிற் றம்பலம்
நாடி னாய்இட மாநறுங் கொன்றை நயந்தவனே
பாடி னாய்மறை யோடுபல் கீதமும் பல்ச டைப்பனி கால்கதிர் வெண்டிங்கள்
சூடி னாய்அரு ளாய்சுருங்கஎம தொல்வினையே.

## அம்மன்

*சிம்ம தாளம்:* பண்: நட்டபாடை

நத்தார்படை ஞானன்பசு
வேறிந்நனை கவுள்வாய்
மத்தம்மத யானையுரி
போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு
பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்திருக்
கேதீச்சரத் தானே.

அங்கமும் வேதமும் ஓதும்நாவர் அந்தணர் நாளும் அடிபரவ
மங்குன் மதிதவழ் மாடவீதி மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
செங்கய லார்புனற் செல்வமல்கு சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி யேந்தியாடுங் கணபதி யீச்சரங் காமுறவே

## முருகன்

மயூர தாளம் பண்: இந்தளம்

சடையா யெனுமால் சரண்நீ யெனுமால்
விடையா யெனுமால்வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள்உண் மெலிவே.

பித்தாபிறை சூடிபெரு
மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக்
கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூரருட் டுறையுள்
அத்தாஉனக் காளாய்இனி
அல்லேனென லாமே

## நவசந்தியில் ஓத வேண்டிய தேவாரப் பண்கள்

பிரம சந்தி (மத்தி) பண்: மேகராகக் குறிஞ்சி

நீறுசேர்வதொர் மேனியர்நேரிழை
கூறுசேர்வதொர் கோலமாய்ப்
பாறுசேர்தலைக் கையர்பராய்த்துறை
ஆறுசேர்சடை யண்ணலே.

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி யறிவழிந்திட் டைம்மேலுந்தி
அலமந்த போதாக வஞ்சேலென் றருள்செய்வா னமருங்கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர மழையென்றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி முகில்பார்க்குந் திருவையாறே.

இந்திரசந்தி (கிழக்கு) பண்: காந்தாரம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே.

சுண்ணவெண் சந்தனச் சாந்துஞ் சுடர்த்திங்கட் சூளா மணியும்
வண்ண உரிவை யுடையும் வளரும் பவள நிறமும்
அண்ண லரண்முர ணேறும் அகலம் வளாய அரவும்
திண்ணன் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்

அஞ்சுவதி யாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை

அக்கினி சந்தி (தென்கிழக்கு) பண்: கொல்லி

மண்ணின்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணின்நல் லகதிக்கி யாதுமோர் குறைவிலை
கண்ணினல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

கூற்றாயின வாறு விலக்ககிலீர் கொடுமைபல செய்தன நான்அறியேன்
ஏற்றாய்அடிக் கேஇர வும்பகலும் பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன்அடி யேன்அதி கைக்கெடில வீரட்டா னத்துறை அம்மானே.

யமசந்தி (தெற்கு) பண்: கௌசிகம்

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்பொரு ளாவது
நாதன் நாம நமச்சி வாயவே.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

நிருதி சந்தி (தென்மேற்கு) பண்: நட்டபாடை

உண்ணாமுலை யுமையாளொடும் உடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன வருவித்திரண் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ண மறுமே.

மூவரென இருவரென
முக்கண்ணுடை மூர்த்தி
மாவின்கனி தூங்கும்பொழில்
மாதோட்டநன் னகரில்
பாவம்வினை யறுப்பார்பயில்
பாலாவியின் கரைமேல்
தேவன்எனை ஆள்வான்திருக்
கேதீச்சரத் தானே

வருணசந்தி (மேற்கு) பண்: சீகாமரம்

கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தங் கதிர்மதியம்
உள்ளார்ந்த சடைமுடியெம் பெருமானா ருறையுமிடந்
தள்ளாய சம்பாதி சடாயென்பார் தாமிருவர்
புள்ளானார்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளுரே.

பிழையுளன பொறுத்திடுவர்
என்றடியேன் பிழைத்தக்கால்
பழியதனைப் பாராதே
படலம்என்கண் மறைப்பித்தாய்
குழைவிரவு வடிகாதா
கோயிலுளா யேஎன்ன
உழையுடையான் உள்ளிருந்
துளோம்போகீர் என்றானே

வாயுசந்தி (வடமேற்கு) பண்: தக்கேசி

பூவார்மலர்கொண் டடியார்தொழுவார் புகழ்வார் வானோர்கள்
மூவார்புரங்க ளெரித்தவன்று மூவர்க் கருள்செய்தார்
தூமாமழைநின் றதிரவெருவித் தொறுவின் னிரையோடும்
ஆமாம்பிணைவந் தணையுஞ்சாரல் அண்ணா மலையாரே.

அந்த ணாளனுன் னடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரண மாக
வந்த காலன்றன் ஆருயி ரதனை
வவ்வி னாய்க்குன்றன் வன்மைகண் டடியேன்
எந்தை நீயெனை நமன்தமர் நலியில்
இவன்மற் றென்னடி யானென விலக்கும்
சிந்தையால் வந்துன் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூரு ளானே

குபேரசந்தி (வடக்கு) பண்: தக்கராகம்

பொடியுடைமார்பினர் போர்விடையேறிப் பூதகணம் புடைசூழக்
கொடியுடையூர்திரிந் தையங் கொண்டு பலபலகூறி
வடிவுடைவாணெடுங் கண்ணுமைபாக மாயவன்வாழ்கொளி புத்தூர்க்
கடிகமழ் மாமலரிட்டுக் கறைமிடற்றானடி காண்போம்.

ஈசான சந்தி (வடகிழக்கு) பண்: சாலாபாணி

தலையே நீவணங்காய் - தலைமாலை
தலைக்கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத்
தலையே நீவணங்காய்

எந்தமது சிந்தைபிரி யாதபெரு மானென விறைஞ்சியிமையோர்
வந்துதுதி செய்யவளர் தூபமொடு தீபமலி வாய்மையதனால்
அந்தியமர் சந்திபல வர்ச்சனைகள் செய்யவமர் கின்றவழகன்
சந்தமலி குந்தளநன் மாதினொடு மேவுபதி சண்பைநகரே.

திருச்சிற்றம்பலம்

உ
சிவமயம்

# திருவெம்பாவை



மார்கழித் திருவாதிரையை ஈறாக் கொண்ட பத்து திருவெம்பாவை நாட்களிலும் ஆலயங்களில் ஓதப்படுகின்றது.
மாணிக்கவாசக சுவாமிகள் அருளியது
(திருவண்ணாமலையில் அருளியது -சக்தியை வியந்தது)
(கொச்சகக்கலிப்பா)

திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள் தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின் மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனு மாகாள் கிடந்தாள் என்னே யென்னே
ஈதே எந்தோழி பரிசேலோ ரெம்பாவாய். 1

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல் நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசுமலர்ப் பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாவாய். 2

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தனா னந்தன் அமுதன் என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய். 3

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லோரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய். 4

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனே என்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய். 5

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை

நானே யெழுப்புவன் என்றலும் நாணாமே

போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ

வானே நிலனே பிறவே அறிவரியான்

தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்

வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்

ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்

ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய். 6

அன்னே இவையுஞ் சிலவோ பல அமரர்

உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்

சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்

தென்னாவென் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்

என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்

சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ

வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்

என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். 7

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்

ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்

கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை

கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ

வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்

ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ

ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை

ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய். 8

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோ ரெம்பாவாய். 9

பாதாளம் ஏழினும்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்தன் கோயிற்பிணாப் பிள்ளைகாள்
ஏதவன் ஊர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். 10

மொய்யார் தடம் பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயா நீஆட் கொண்டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோ ரெம்பாவாய். 11

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்

தீர்த்தனற் றில்லைச் சிற் றம்பலத்தே தீயாடும்

கூத்தனிவ் வானுங் குவலயமும் எல்லோமும்

காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி

வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்

ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்

பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்

ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய். 12

பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதால்

அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்

தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்

எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த

பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்

சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்

கொங்கைகள் பொங்கக் குடையும் புனல் பொங்கப்

பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 13

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்

கோதை குழலாட வண்டின் குழாமாடச்

சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி

வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்

சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி

ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்

பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்

பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய். 14

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால்ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத்தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 15

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா வெங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய். 16

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல் பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 17

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 18

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய். 19

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி யெல்லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய். 20

திருச்சிற்றம்பலம்

# திருப்பொற்சுண்ணம்



ஆலய மகோற்சவ காலத்தில், வசந்தோற்சவம், தீர்த்தம் போன்ற திருநாட்களில்
திருப்பொன்சுண்ணம் இடிக்கும் பொழுது பாடப்படும்
மாணிக்கவாசக சுவாமிகள் அருளியது
(தில்லையில் அருளியது - ஆனந்தமனோலயம்)
எண்சீர்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

முத்துநல் தாமம்பூ மாலை தூக்கி
முளைக்குடம் தூபம்நல் தீபம் வைம்மின்
சத்தியும் சோமியும் பார்மகளும்
நாமகளோடு பல்லாண்டி சைமின்
சித்தியும் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரி கொண்மின்
அத்தன் ஐயாறன் அம்மானைப் பாடி
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே. 01

பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற் திருச்சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடு வகிர் அன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்(து) உடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம் நிலாமே
குனிமின் தொழுமின் எம்கோன் எம்கூத்தன்
தேவியும் தானும் வந்து எம்மை ஆளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்தும் நாமே. 02

சுந்தர நீறணிந் தும் மெழுகித்
        தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டி எங்கும்
        எழிற்சுடர் வைத்துக் கொடி எடுமின்
அந்தரர்கோன் அயன் தன்பெருமான்
        ஆழியான்நாதன் நல்வேலன் தாதை
எந்தரம்ஆள் உமையாள் கொழுநற்(கு)
        ஏய்ந்த பொற்சுண்ணம் இடித்தும் நாமே. 03

காச ணிமின்கள் உலக்கை எல்லாம்
        காம்ப ணிமின்கள் கறை உரலை
நேசம் உடைய அடியவர்கள்
        நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசமெல்லாம் புகழ்ந்து ஆடும் கச்சித்
        திருவேகம்பன் செம்பொற் கோயில் பாடிப்
பாச வினையைப் பறித்து நின்று
        பாடிப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே. 04

அறுகெ டுப்பார் அயனும் அரியும்
        அன்றி மற்று இந்திரனோ டமரர்
நறுமுறு தேவர் கணங்கள் எல்லாம்
        நம்மிற் பின்ப ல்லதெடுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்த வில்லி
        திருவேகம்பன் செம்பொற் கோயில் பாடி
முறுவற் செவ்வாயினீர் முக்கண் அப்பற்
        காடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே. 05

உலக்கை பல ஓச்சுவார் பெரியார்
        உலகமெலாம் உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்து நின்றார்
        காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டு கொண்டு
        நாண்மலர்ப் பாதங்கள் சூடத் தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
        மகிழ்ந்து பொற்சுண்ணம் இடித்தும் நாமே. 06

சூடகம் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்பத்
தொண்டர் குழாம் எழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர் தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
பாடகம் மெல்லடி ஆர்க்கும் மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்ன கோவுக்கு
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே. 07

வாள் தடங்கண் மட மங்கை நல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கை பொங்கத்
தோள் திருமுண்டம் துதைந்தி லங்கச்
சோத்தெம்பிரான் என்று சொல்லிச்சொல்லி
நாள்கொண்ட நாண்மலர்ப் பாதம் காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மை இம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே. 08

வையகம் எல்லாம் உரல தாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய் யெனும் மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கை பற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே. 09

முத்தணி கொங்கைகள் ஆட ஆட
மொய்குழல் வண்டினம் ஆட ஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆட ஆடச்
செங்கயற் கண்பனி ஆட ஆடப்
பித்தெம் பிரனொடும் ஆட ஆடப்
பிறவி பிறரொடும் ஆட ஆட
அத்தன் கருணையொ டாட ஆட
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே. 10

மாடு நகைவாள் நிலாவெ றிப்ப
வாய்திறந் தம்பவ ளந்து டிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்ட வாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப் பாடித்
தேடுமின் எம்பெரு மானைத் தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத் தாடி னானுக்
காடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 11

மையமர் கண்டனை வான நாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் றன்னை
ஐயனை ஐயர்பி ரானை நம்மை
அகப்படுத் தாட்கொண் டருமை காட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொ டித்தோள்
பையர வல்குல் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 12

மின்னிடைச் செந்துவர் வாய்க்க ருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை யாரமு தெங்க ளப்பன்
எம்பெரு மானிம வான்ம கட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்ற கப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே. 13

சங்கம் அரற்றச் சிலம்பொ லிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலை யாடச்
செங்கனி வாயித ழுந்து டிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம் பாடிக்
கங்கை இரைப்ப அராவிரைக்கும்
கற்றைச் சடைமுடி யான்க ழற்கே
பொங்கிய காதலிற் கொங்கைபொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே. 14

ஞானக் கரும்பின் தெளிவைப் பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயி னானைச்
சித்தம் புகுந்துதித் திக்க வல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட
கூத்தனை நாத்தழும் பேற வாழ்த்திப்
பானற் றடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 15

ஆவகை நாமும்வந் தன்பர் தம்மோ
டாட்செயும் வண்ணங்கள் பாடி விண்மேல்
தேவர் கனாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவகம் ஏந்தியவெல் கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்ற கொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப் பாடிச்
செம்பொன் செய்சுண்ணம் இடித்து நாமே. 16

தேனக மாமலர்க் கொன்றை பாடிச்
சிவபுரம் பாடித் திருச்ச டைமேல்
வானக மாமதிப் பிள்ளை பாடி
மால்விடை பாடி வலக்கை யேந்தும்
ஊனக மாமழுச் சூலம் பாடி
உம்பரும் இம்பரும் உய்ய வன்று
போனக மாகநஞ் சுண்டல் பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே. 17

அயன்தலை கொண்டுசெண் டாடல் பாடி
அருக்கண் எயிறு பறித்தல் பாடி
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடி
காலனைக் காலால் உதைத்தல் பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டு கொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடி யாடி
நாதற்குச் சுண்ணம் இடித்தும் நாமே. 18

வட்ட மலர்க்கொன்றை மாலை பாடி
மத்தமும் பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் றில்லை பாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம் பாடிக்
கட்டிய மாசுணக் கச்சை பாடிக்
கங்கணம் பாடிக் கவித்த கைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம் பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்தும் நாமே. 19

வேதமும் வேள்வும் ஆயி னார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயி னார்க்குச்
சோதியு மாயிருள் ஆயி னார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயி னாகுப்
பாதியு மாய்முற்றும் ஆயி னார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயி னாருக்
காதியும் அந்தமும் ஆயி னாருக்
காடற்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 20

திருச்சிற்றம்பலம்

# திருப்பொன்னூஞ்சல்



மார்கழித் திருவாதிரை ஆருத்திரா தரிசனத்தின்போது
எம்பெருமான் ஊஞ்சலாடுகையில் இசைக்கப்படும்
(தில்லையில் அருளியது - அருட்சுத்தி)
தரவுகொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

சீரார் பவளங்கால் முத்தங் கயிறாக
ஏராரும் பொற்பலகை ஏறி இனிதமர்ந்து
நாரா யணன் அறியா நாண்மலர்த்தான் நாயடியேற்கு
ஊராகத் தந்தருளும் உத்தர கோசமங்கை
ஆரா அமுதின் அருள்தா ளிணைப்பாடிப்
போரார் வேற்கண்மடவீர் பொன்னூசல் ஆடாமோ. 1

மூன்றங் கிலங்கு நயனத்தன் மூவாத
வான்தங்கு தேவர்களுங் காணா மலரடிகள்
தேனதங்கித் தித்தித் தமுதூறித் தான்தெளிந்தங்கு
ஊன்தங்கி நின்றுருக்கும் உத்தர கோசமங்கைக்
கோன்தங் கிடைமருது பாடிக் குலமஞ்ஞை
போன்றங் கனநடையீர் பொன்னூசல் ஆடாமோ. 2

முன்னீறும் ஆதியு மில்லான் முனிவர்குழாம்
பன்னூறு கோடி யிமையோர்கள் தாம் நிற்பத்
தன்னீ றெனக்கருளித் தன்கருணை வெள்ளத்து
மன்னூற மன்னுமணி யுத்தர கோசமங்கை
மின்னேறு மாட வியன்மா ளிகைபாடிப்
பொனனேறு பூண்முலையீர் பொன்னூசல் ஆடாமோ. 3

நஞ்சமர் கண்டத்தன் அண்டத் தவர்நாதன்
மஞ்சுதோய் மாடமணி உத்தரகோசமங்கை
அஞ்சொலாள் தன்னோடுங் கூடி அடியவர்கள்
நெஞ்சுளே நின்றமு தூறிக் கருணைசெய்து
துஞ்சல் பிறப்பறுப்பான் தூய புகழ்பாடிப்
புஞ்சமார் வெள்வளையீர் பொன்னூசல் ஆடாமோ. 4

ஆணோ அலியோ அரிவையோ என்றிருவர்
காணாக் கடவுள் கருணையினால் தேவர்குழாம்
நாணாமே உய்யஆட் கொண்டருளி நஞ்சுதனை
ஊணாக உண்டருளும் உத்தர கோசமங்கைக்
கோணார் பிறைச்சென்னிக் கூத்தன் குணம்பரவிப்
பூணார் வனமுலையீர் பொன்னூசல் ஆடாமோ. 5

மாதாடு பாகத்தன் உத்தர கோசமங்கைத்
தாதாடு கொன்றைச் சடையான் அடியாருள்
கோதாட்டி நாயேனை ஆட்கொண்டென்
தொல்பிறவித் தீதோடா வண்ணந் திகழப் பிறப்பறுப்பான்
காதாடு குண்டலங்கள் பாடிக் கசிந்தன்பால்
போதாடு பூண்முலையீர் பொன்னூசல் ஆடாமோ. 6

உன்னற் கரியதிரு வுத்தர கோசமங்கை
மன்னிப் பொலிந்திருந்த மாமறையோன் தன்புகழே
பன்னிப் பணிந்திறைஞ்சப் பாவங்கள் பற்றறுப்பான்
அன்னத்தின் மேலேறி ஆடுமணி மயில்போல்
என்னத்தன் என்னையும் ஆட்கொண்டான் எழில்பாடிப்
பொன்னொத்த பூண்முலையீர் பொன்னூசல் ஆடாமோ. 7

கோலவரைக்குடுமி வந்து குவலயத்துச்
சால அமுதுண்டு தாழ்கடலின் மீதெழுந்து
ஞால மிகப்பரிமேற் கொண்டு நமையாண்டான்
சீலந் திகழுந் திருவுத்தர கோசமங்கை
மாலுக் கரியானை வாயார நாம்பாடிப்
பூலித் தகங்குழைந்து பொன்னூசல் ஆடாமோ. 8

தெங்குலவு சோலைத் திருஉத்தர கோசமங்கை
தங்குலவு சோதித் தனியுருவம் வந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமும் ஆட்கொள்வான்
பங்குலவு கோதையுந் தானும் பணிகொண்ட
கொங்குலவு கொன்றைச் சடையான் குணம்பரவிப்
பொங்குலவு பூண்முலையீர் பொன்னூசல் ஆடாமோ. 9

திருச்சிற்றம்பலம்

# திருப்பள்ளியெழுச்சி



அதிகாலையில் எம்பெருமானைப் பள்ளியறையில் இருந்த
துயிலெழுப்பும் பாவனையில் பாடப்படும்
(மாணிக்கவாசக சுவாமிகள் அருளியது - திரோதானசுத்தி)
எண்சீர்கழிநெழிலடி ஆசிரியவிருத்தம்
திருச்சிற்றம்பலம்

போற்றி என் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டு நின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாய் எனை யுடையாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே. 1

அருணன் இந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயநின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணல் அங் கண்ணாம்
திரள்நிரை யறுபதம் முரல்வன இமையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகடலே பள்ளி எழுந்தருளாயே. 2

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளியொளி உதயத்து
ஒருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
யாவரும் அறிவரி யாய்எமக் கெளியாய்
எம்பெரு மான் பள்ளி எழுந்தருளாயே. 3

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே. 4

பூதங்கள் தோறும்நின் றாயெனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறியோம் உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்அரி யாய்எங்கள் முன்வந்து
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான் பள்ளி எழுந்தருளாயே. 5

பப்பற வீட்டிருந் துணரும்நின் அடியார்
பந்தணை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றார்அணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான் பள்ளி எழுந்தருளாயே. 6

அதுபழச் சுவையென அமுதென அறிதற்கு
அரிதென எளிதென அமரரும் அறியார்
இது அவன் திருவுரு இவ னவன் எனவே
எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு வுத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எது எமைப் பணிகொளு மாறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி எழுந்தருளாயே. 7

முந்திய முதல்நடு இறுதியு மானாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயுநின் னடியார்
பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி
அந்தண னாவதுங் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி எழுந்தருளாயே. 8

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டார்
விழுப்பொரு ளேஉன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாய் உல குக்குயி ரானாய்
எம்பெருமான்பள்ளி எழுந்தருளாயே. 9

புவனியிற் போய்ப்பிற வாமையின் நாள் நாம்
போக்குகின் றோம் அவ மே இந்தப்பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கி
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும் நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி எழுந்தருளாயே. 10

திருச்சிற்றம்பலம்

# திருப்பல்லாண்டு



தில்லையில் ஓடாதிருந்த தேரை வடம் தொடாமல் சேந்தனார் திருப்பல்லாண்டு பாடி வீதி வலமாக வரச் செய்தார். இதனால் ஆலயங்களில் தேர்த்திருவிழா அன்று இறைவன் தேரில் எழுந்தருளியதும் தேர் இருப்பு குலைப்பதன் முன்னர் இத் திருப்பல்லாண்டு ஓதப்படுகின்றது.

(சேந்தனார் தில்லையில் அருளியது)

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள்
வஞ்சகர் போய கல
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன் அடி
யோ முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே. 1

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்தும் குடிகுடி ஈசற்(கு)ஆட்
செய்மின் குழாம்புகுந்து
அண்டங் கடந்த பொருள்அள வில்லதோர்
ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருள் என்றே
பல்லாண்டு கூறுதுமே. 2

நிட்டையி லாவுடல் நீத்தென்னை ஆண்ட
நிகரிலா வண்ணங்களும்
சிட்டன் சிவனடி யாரைச் சீராட்டும்
திறங்களுமே சிந்தித்(து)
அட்ட மூர்த்திக்கென் அகம்நெக ஊறும்
அமிர்தினுக்(கு) ஆலநீழற்
பட்டனுக்(கு) என்னைத்தன் பாற்படுத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 3

சொல்லாண் டசுரு திருப்பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண் டிற்சிதை யும்சில தேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண் டகன கத்திரள் மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 4

புரந்தரன் மாலயன் பூசலிட்(டு) ஓலமிட்(டு)
இன்னம் புகலரிதாய்
இரந்திரந்(து) அழைப்பஎன் னுயிராண்ட கோவினுக்(கு)
என்செய வல்லமென்றும்
கரந்துங் கரவாத கற்பக னாகிக்
கரையில் கருணைக்கடல்
பரந்தும் நிரந்தும் வரம்பிலாப் பாங்கற்கே
பல்லாண்டு கூறுதுமே. 5

சேவிக்க வந்தயன் இந்திரன் செங்கண்மால்
எங்கும்திசை திசையன
கூவிக் கவர்ந்து நெருங்கிக் குழாம்குழா
மாய்நின்று கூத்தாடும்
ஆவிக்(கு) அமுதைஎன் ஆர்வத் தனத்தினை
அப்பனை ஒப்பமரர்
பாவிக்கும் பாவகத்(து) அப்புறத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 6

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார்
பெறுவார் உலகில்?
ஊரும் உலகும் கழற உளறி
உமைமண வாளனுக்(கு)ஆட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே. 7

சேலுங் கயலும் திளைக்கும் கண்ணார்இளங்
கொங்கையில் செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங் குமென்று
புண்ணியர் போற்றிசைப்ப
மாலும் அயனும் அறியா நெறி தந்து
வந்தென் மனத்தகத்தே
பாலும் அமுதமு ஒத்துநின் றானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 8

பாலுக்கு பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 9

தாதையைத் தாளற வீசிய சண்டிக்(கு)இவ்
அண்டத்தொடும் உடனே
பூதலத் தோரும் வணங்கப்பொற் கோயிலும்
போனகமும் அருளிச்
சோதி மணிமுடித் தாமமும் நாமமும்
தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 10

குழலொலி யாழொலி கூத்தொலி ஏத்தொலி
எங்கும் குழாம்பெருகி
விழவொலி விண்ணளவும் சென்று விம்மி
மிகுதிரு ஆரூரின்
மழவிடை யாற்கு வழிவழி யாளாய்
மணஞ்செய் குடிப்பிறந்த
பழஅடி யாரொடுங் கூடி எம்மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 11

ஆரார் வந்தார்? அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரைநாள்
நாராயணனொடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே. 12

எந்தை எந்தாய் சுற்றும் முற்றும் எமக்கு அமுதாம்
எம்பிரான் என்றென்று
சிந்தை செய்யும் சிவன்சீர் அடியார்
அடிநாய் செப்புறை
அந்தமில் ஆனந்தச் சேந்தன் எனைப்புகுந்
தாண்டுகொண் டாருயிர்மேல்
பந்தம் பிரியப் பரிந்தவனே என்று
பல்லாண்டு கூறுதுமே. 13

திருச்சிற்றம்பலம்

# கொடிக்கவி

தில்லையில் ஏறாது இருந்த கொடியை ஏறும் வண்ணம் உமாபதி சிவாச்சாரியாரால் பாடப்பட்டது. இதன் காரணமாக ஆலயங்களில் மகா உற்சவத்தின் போது கொடியேற்றத் திருவிழாவில் கொடிச் சீலையின் வழிபாடுகள் முடிந்த பின்னர் கொடி ஏற்றுவதற்கு முன்னர் இக் கொடிக்கவி பாடப்படுகின்றது.

ஒளிக்குமிருளுக்கு மொன்றேயிட மொன்று மேலிடிலொன்
றொளிக்கு மெனினுமிருளடராதுள்ளுயிர்க்குயிராய்த்
தெளிக்குமறிவு திகழ்ந்துள தேனுந்திரிமலத்தே
குளிக்கு முயிரருள் கூடும்படி கொடிகட்டினனே. 1

பொருளாம் பொருளேது போதேதுகண்ணே(து)
இருளாம் வெளியேதிரவே(து) - அருளாளா
நீபுரவாவையமெலாம் நீ அறியக்கட்டினேன்
கோபுரவாசற்கொடி. 2

வாக்காலும் மிக்கமனத்தாலும் எக்காலும்
தாக்காதுணர்வரியதன் மையனை - நோக்கிப்
பிறித்தறிவுதம்மிற்பிரியாமைதானே
குறிக்கும் அருள்நல்கக் கொடி. 3

அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும்
பிஞ்செழுத்தும் மேலைப் பெருவெழுத்தும் - நெஞ்சழுத்திப்
பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்
கூசாமற் காட்டக் கொடி. 4


சுன்னாகம் ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் தேவஸ்தானம்

உ
சிவமயம்

# சுன்னாகம் சந்திரசேகரப்பிள்ளையார் ஊஞ்சல்

காப்பு

திருமேவு கனகமலைச் சிகர மாகித்
திகழிலங்கைக் கொருமுகமாய்த் திகழ்யாழ்ப் பாணத்(து)
உருமேவு திலகமென உலகம் எல்லாம்
ஓங்குபுகழ்ச் சுன்னைநகர் உவந்து வாழும்
அருள்மேவு சந்திரசே கரப்பேர் பெற்ற
அத்திமுகத் துத்தமனுக்(கு) ஐயிரண்டு
பொருள்மேவு கவிஊஞ்சல் இசையாற் பாடப்
போற்றுகவென்(று) அவனடியைப் போற்று வாமே.

**நூல்**

மதியேறும் ஒலிதருமெய்ச் சைவ நூலும்
மறைநூலும் என இருதூண் வயங்க நாட்டி.
விதியேறு மவற்றுணர்முப் பொருளே என்ன
விட்டவளை யொடுபலகை கயிறு மாட்டிக்,
கதியேறு மும்மையுமற் றவைவயி லாய்ந்து,
கண்டவர்நெஞ் செனக்கண்ட பீடம் ஏறித்,
துதியேறு விநாயகரே! ஆடீர் ஊஞ்சல்,
சுன்னைநகர்க் கணேசரே! ஆடீர்! ஊஞ்சல் 1

தும்பைமுடித் துளதாதை திருக்கண் சாத்தத்,
துரகமயில் வருகுமரன் துதிகள் சாற்ற,
அம்புவிஉண் டருள்மாயன் அடிகள் போற்ற,
அயனுமா சாத்தனும் வந்(து) அன்பின் ஏத்தச்,
சிம்புள்வடி வாய்வருவோன் கரங்கள் கூப்பச்
செகமுழுது மானக்கஞ் சிறந்து தேங்கத்
தும்பிமுகம் படைத்தவரே! ஆடீர் ஊஞ்சல்
சுன்னைநகர்க் கணேசரே! ஆடீர் ஊஞ்சல் 2

கங்கைஉமைத் தாயர்மகிழ்ந்(து) அன்பு கூர.
        கமலவனி தையரும்அருள் கண்டு சாரப்,
பங்கயவே தாவேத கீதம் பாடப்,
        பழுதில்நா ரதமுனியாழ் பண்பின் நாடப்,
புங்கவர்கள் எங்குமலர் மழையே தூவப்,
        பூரணா னந்தமுடன் அடியேன் வாழத்,
துங்ககண நாயகரே! ஆடீர் ஊஞ்சல்,
        சுன்னைநகர்க் கணேசரே! ஆடீர் ஊஞ்சல். 3

வெள்ளைவா ரணமகவான் கவரி புல்ல,
        விரிகனலோன் விரியும்ஒளி விளக்கங் கொள்ளத்,
துள்ளிபடு பனிமழைநல் வருணன தெள்ளச்.
        சுரர்களா தியபதினென் கணங்கள் துள்ள,
விள்ளரிய வேதமறை யோர்கள் விள்ள,
        வெறுத்தடியேன் உலகாரை முழுதுந் தள்ளத்,
துள்ளுநதிச் சடையாரே! ஆடீர்! ஊஞ்சல்.
        சுன்னை நகரக் கணேசரே ஆடீர் ஊஞ்சல் 4

கந்தருவர் பாடவர மகளிர் ஆடக்,
        கவிதைகவித்(து) இரவிமதி யோர்கள் நீட,
முந்துசதா கதிஆல வட்டம் போட,
        முதியநான் மறைமுழக்கம் விண்மண் மூட,
வந்துகண நாதர்புடை மகிழ்ந்து கூட,
        வறுமையெனும் பாவிளனை மருவா(து) ஓடச்,
சுந்தரமா முகத்தவரே! ஆடீர் ஊஞ்சல்
        சுன்னைநகர்க் கணேசரே! ஆடீர்! ஊஞ்சல். 5

வல்லவையாம் வல்லவையும் சித்தி புத்தி
        வல்லியர்க ளுங்கூட மகிழ்ந்து கூடும்
வல்லவனே! துப்புமலை வண்ணத் தானே!
        வரதனே! வரனே!என்(று) அழுது நெஞ்சம்
சொல்லிஅடி பரவுமடித் தொண்டனாகிச்
        சுகம்பெறீஇ வறுமைஎலாம் தொலைந்து வாழச்
சொல்லரிய பூரணரே! ஆடீர் ஊஞ்சல்
        சுன்னைநகர்க கணேசரே! ஆடீர்! ஊஞ்சல். 6

சக்கரவார் கலிஉலகிற் தலைமை ஆகத்
தலைநாணின் றதுவென்னத் தரணி எங்கும்
புக்கபுக ழிந்நாடே நந்நா டாகிப்
பொலியஉமடு) அடிமலரின் பொற்பி னாலே
பக்கமெலா முற்றவய னாவ லாறு
பாயுநிலம் போல்விளையும் பண்பின் ஓங்கத்
துக்கவடி வற்றவரே! ஆடீர் ஊஞ்சல்
சுன்னைநகர்க் கணேசரே! ஆடீர் ஊஞ்சல். 7

சக்கரவார் கலிஉலகிற் தலைமை ஆகத்
தலைநாணின் றதுவென்னத் தரணி எங்கும்
புக்கபுக ழிந்நாடே நந்தா டாகிப்
பொலியஉமடு) அடிமலரின் பொற்பின் னாலே
பக்கமெலா முற்றவய னாவ லாறு
பாயுநிலம் போல்விளையும் பண்பின் ஓங்கத்
துக்கவடி வற்றவரே! ஆடீர் ஊஞ்சல்
சுன்னைநனர்க கணேசரே! ஆடீர் ஊஞ்சல். 8

எப்பொழுதும் அடிபணியும் அடியார் வாழ
இலங்குதிரு விழாச்செய்யும் எழிலோர் வாழத்
தப்பில்திருக் கோயின்மதில் தந்தோர் வாழத்
தடாகமொடு நந்தவனஞ் சமைத்தோர் வாழத்,
செப்பியஉன் தளிபுதுக்கிப் பிரதிட்டை செய்த
செல்வர்களும் அல்லலெலாந் தீர்ந்து வாழத்,
துப்புமணி வண்ணத்தீர்! ஆடீர் ஊஞ்சல்
சுன்னைநகர்க் கணேசரே! ஆடீர் ஊஞ்சல். 9

சடைமதியும் முக்கண்ணுந் தனிநூன் மார்புந்,
தவளமதிக் குழவியெனத் தயங்கு கோடும்,
இடைஅரவக் கச்சுமங்கை எழிலுஞ் சென்னி
இலங்குமுடி யுங்கவரி இசைத்த காதும்
புடைபெயர ஒளிவீசு நுதலின் ஓடைப்
பொற்பும்அடி யேன்காண்ப புரிந்து கொன்றைத்
தொடைபுனையுஞ் சடையாரே! ஆடீர் ஊஞ்சல்
சுன்னைநகர்க் கணேசரே! ஆடீர் ஊஞ்சல். 10

திருப்பெறும் ஓர்கோடுடையீர்! ஆடீர், ஊஞ்சல்:
சேரார்தங் கோடுடையீர்! ஆடீர், ஊஞ்சல்:
அருப்புவனத் தாற்கரியீர்! ஆடீர் ஊஞ்சல்:
அரியவனத் தாற்கரியீர்! ஆடீர் ஊஞ்சல்:
விருப்பொடு கைப்படையீரே! ஆடீர் ஊஞ்சல்
வில்லொடு கைப்படையீரே! ஆடீர் ஊஞ்சல்
சுருப்புமுன் மதலையரே! ஆடீர் ஊஞ்சல்
சுன்னைநகர்க் கணேசரே! ஆடீர் ஊஞ்சல். 11

**வாழி**

தரைவாழி, வாழிதவ மறையோர் வாழி,
தனவசியர் பூவசியர் தழைத்து வாழி,
நிரைவாழி, மகளிர்ப்பதி விரதம் வாழி,
நிலமன்னர் வாழி, அருட்பொலிவிளோடும்
புரைதீர்மூ ஷிகம்வாழி, சித்தி புத்தி
புனிதைகளும் வாழி, அருட்பொலிவிளோடும்
மறைநேர்சே அடிவாழி, கணேசன் ஊஞ்சல்
வாழி, சுன னாகநகர் வாழி, வாழி

**எச்சரிக்கை**

சுன்னாகநன் னகர்மேவிய தூயா! எச்சரிக்கை
துணையாய்இருந் தருள்வாழ்வருள் துரியா! எச்சரிக்கை
பொன்னாகவிற் பிடித்தான் அருள் புதல்வா! எச்சரிக்கை
புவிமீதில்என் இடர்தீர்த்தருள் புனிதா! எச்சரிக்கை

திறலார்கய முகவீரனைச் செகுத்தாய்! எச்சரிக்கை
தினந்தோறும்மெய் அடியார்க்(கு) அருள் செய்வாய்!
எச்சரிக்கை
விறலார்வினை தீர்த்தாண்டருள் விமலா! எச்சரிக்கை
வேண்டும்வரம் தந்தாளுமை பாலா! எச்சரிக்கை

கல்லார்மனம் நில்லாஅருட் கடலே! எச்சரிக்கை
கண்டார்தினம் கொண்டாடுசெங் கதிரே! எச்சரிக்கை
சொல்லார்பிர ணவமாயொளிர் தூயா! எச்சரிக்கை
சுரராதியர் தினமேதுதி சுடரே! எச்சரிக்கை

## பராக்கு

எண்திசையு மண்டுபுகழ் இறையே! பராக்கு:
என்னுயிருக்(கு) உயிரான இனியாய்! பராக்கு:
தொண்டுசெயும் அடியருளச் சோதீ! பராக்கு:
சுகநிதியை அருளமுதச் சுவையே! பராக்கு:

சித்திபுத்தி மகிழின்பச் சீலா! பராக்கு:
சிறியேன்தன் பிழைபொறுக்குந் தேவா! பராக்கு:
பத்திசெயும் அன்பருளப் பதியே! பராக்கு:
பங்கயனுங் காணரிய பரனே! பராக்கு:

குலவுமருள் உமையீன்ற குமரா! பராக்கு:
குஞ்சர முகத்தரிய கோலா! பராக்கு:
நிலவுவிரி சடையாளர் தேயா! பராக்கு:
தேடரிய பதமருளும நீதா பராக்கு:

இயற்றியவர் - சுன்னாகம். முருகேசபண்டிதர்
பிற்சேர்க்கை

## ஜெயமங்களம்

சுன்னைநகர் ஐங்கரற்கு ஜெய மங்களம்
தும்பிமுகக் கடவுளுக்கு ஜெய மங்களம்
இன்னல் இடர் தீர்ப்பவற்கு ஜெயமங்களம்
ஏகதந்தன் ஆனவற்கு ஜெயமங்களம்
அன்னை சக்தி மைந்தனுக்கு ஜெயமங்களம்
அழகு வயல் அமர்ந்தவற்கு ஜெயமங்களம்
முன்னைவினை தீர்ப்பவற்கு ஜெயமங்களம்
முக்தி தரும் முதல்வனுக்கு ஜெயமங்களம்


ஆதி மயிலிட்டி காசி சிவபூதராயர் கோயில்

உ
சிவமயம்

# ஆதிமயிலிட்டி காசிப்பூதராயர் ஊஞ்சல்

## காப்பு

பூமேவும் செங்கமலர் பொகிட்டின் மேவும்
புங்கவன் அங்கிஷப் பூதராசர் தன்மேல்
மாமேவும் புகழ் பெறச் செய் யன்னவூஞ்சல்
மதுரமிகும் தமிழடியேன் மகிழ்ந்து பாட
கோமேவும் செல்வமல்கும் மயிலை நல்லூர்க்
கோவிலெனும் பெரும்பரப்பில் குடிகொண்டன்பர்
நாமேவும் புகழ்துதிக்க வாழும் ஐங்கை
நாதனம் பொற்றுணைப்பாதம் நம்பினோமே.

## நூல்

அம்பரமே கோவிலதாய் மேருத்தூணாய்
அதன்மேற் சந்திரனை வளையதாகப் பூட்டி
செம் பொன்னினால் வட்டமிட்டு ஆதபன் துணாய்ச்
செய்யவடங்கோத்து வையப் பலகை சேர்த்து
உம்பர் நகர்க் கன்னியர் வந்தெம்பிரானின்
உபயபதந் துணையென ஊஞ்சல் மீதேறி
வம்பவிழ் தாமரைப் புஜத்தீர் ஆடீரூஞ்சல்
மயிலை நல்லூர்ப்பூதரே ஆடீரூஞ்சல். 1

பூந்திகிரிப், படை நெடுமால், படியளக்கப்
போதன் முகூர்த் தம்பார்க்கப், புரமுன்றட்ட
ஏந்தல் கரத்தேந்தியம் பொன் மவுலிசூட்டி
இம்பரிற் காசிப்பதியால் இலங்கை நாட்டில்
அந்தரங்க நிற்சிங்க அமலன் கோவில்
அடைந்து நடந்து இராமர் அகமுண்டாக்கி
வாய்ந்த புகழுடனுறைந்தீர் ஆடீரூஞ்சல்
மயிலை நல்லூர்ப் பூதரே ஆடீரூஞ்சல். 2

சிரத்தினில் கோடசைந் தாடச் சவரியாடச்

செங்கைவளை குண்டலங் காற்சிலம்புமாட

கரத்தின் வடிவாளாடத் தோழின் மேல்

அங்கதமாட கண்டசரங் கலிரென்றாட

உரத்திலிட்ட முப்புரிநூற் பதக்கமாட

உத்தரீக மிந்ர வன்னி, யுடையு மாட

வரத்தின் மானதம் பெற்றீர் ஆடீரூஞ்சல்

மயிலை நல்லூர்ப்பூதரே ஆடீரூஞ்சல். 3

ஆதியரான னுருடன் வா, தாடுந், தெய்வம்

அம்பிகையைப் பெற்றுவளர்த்தருள் செய்தெய்வம்

நீதியுடன் மானதம் பார்தவஞ் செய்தெய்வம்

நிறைவளம் பெற்றருள் தெய்வம் நீரேஜயா

சோதிமணி பதியூஞ்சற் றவிசினேறி

துதிசெய் தென்றும் தொழுமடியார் சுகம் பெற்றுய்ய

மாதவனைப் போலரசே யாடீரூஞ்சல்

மயிலை நல்லூர்ப் பூதரே ஆடீரூஞ்சல். 4

சந்திர சூரியரிருவர் கவிதை தாங்க

சாமரை தண்கால் வீசத் தாரைபூத

செந்திருவும் நாமகளும் கீதம்பாட

தேவர்கள் பூமாரிபெய்து தெளிதந் தார்க்க

இந்திரன் பூசனைபுரிய பிரமா வாழ்த்த

இன்புடனம் பொன்னூஞ்சல் தவிசினேறி

மந்திர ரூபம் படைத்தீர் ஆடீரூஞ்சல்

மயிலை நல்லூர்ப் பூதரே ஆடீரூஞ்சல். 5

ஓங்குமறை வெயிலுள்வட்டம் தூணுண்டாக்கி
உயர்விசிறி வளையதன்பின் சுளித்துவாங்கி
ஆங்கதன்கீழ் வகிர்காரே வடமாய்ப்பூட்டி
அதன்நடுவே உபநிடதப் பலகைமாட்டி
பாங்காக் கன்னியர் ஆசிகூறவேறிப்
பத்தர் நாமோநாமோவென்று பாடியாட
வாங்கப் பொன் ஓங்கலினீர் ஆடீரூஞ்சல்
மயிலை நல்லூர்ப்பூதரே ஆடீரூஞ்சல். 6

நற்கருணை மாரிதூற்கை புவனை யென்னும்
நாமியர்கள் ஏவல் முறைநடத்து முண்மைச்
சொற்குறியர் ஆடர் துட்டர் கறுப்பராதீ
தோமில் பெரும் படைஞர் செய்யும் துன்பம்மாற
அற்புதமாந் தேவி மனோன் மணியம்மன்பால்
அன்புபெற்றெங்களைத் தற்காத் தருளவேண்டும்
மற்பொரு சொற்புஜ முதல்வா ஆடீரூஞ்சல்
மயிலை நல்லூர்ப்பூதரே ஆடீரூஞ்சல். 7

பொரு மலர்கை முகனையன் மனைதானை
புரவலர் செய்திடுங் கடினம் பொறுக்கொணாமை
இருதலைக் கொள்ளி எறும்பானார் மானோர்கள்
இமைய வல்லிபாலருந்தப் பெற்றிரங்கேனயா
நிருமலர்க்கன்பான பாதந்தலை மையாமே
நிமலா நின்பாதம் மாறவோம் நாமே
மருமலர் தாழ்கமழ் புயத் தாயா டீரூஞ்சல்
மயிலை நல்லூர்ப்பூதரே ஆடீரூஞ்சல். 8

திங்கள் தொறுங்கந்தரமும் மாரி வாழி
செங்கோன் மன்னவர் நீதிசிறந்து வாழி
சங்கநிரைத்தமி ழோங்கக் கல்வி வாழி
சகமெல்லாம் நீதி பெருகிதழைத்து வாழி
புங்கவரும் பரும் நன்மை புரிந்தோர்கள் வாழி
புலவர்தலம் பூசனை செய்வித்தோர்கள் வாழி
மங்களமாய் மயிலிட்டி நகரும் வாழி
மயிலை நல்லூர்ப்பூதரே ஆடீரூஞ்சல். 9

## கும்மி

பொன்மயில் வாரிக செப்பு மடிக் குமிழ்
பொருந்தும் போது கைப் பாதனடி
மின்பயில் குண்டலக் காதனடி தெய்வ
விரதனென்றே கும்மியடி - பூத
வரனென்றே கும்மியடி
கன்னிப் மின்னிப் பெண்கள் முதல்வனை
கன்னிப் பெண்கள் தாமடி செய்விழங்கப்பாடி
நின்வளமும் கற்பாகவே விரும்பிக் கும்மியடி
நகை யரும்பிக் கும்மியடியுமடி.

சப்தவிருதுகள் மோதிவரக் - கொம்பு
தாரை சின்னங்கள் ஊதிவர
சித்தமகிழ்வுடன் வீதிவரும் - பிரம்ம
தேவனென்றே கும்மியடி பூத நாதனென்றே கும்மியடி
பாதச்சிலம்பு மாடக் கிண் கிண்ணென்று
பொற்சலங்கை யாட
மாயிடவனைச் சிதைத்த நாயகி பாதத்தை
நேசித்துச் சிறந்து கும்மியடியுமடி

நல்லாய்ப் பறந்து கும்மியடியுமடி.

கற்றவருக் கருள் உற்றதெய்வம் புவி
காக்கவே வரம் பெற்ற தெய்வம்
குற்ற மொன்றும் வந்திடாது தற்காத் தன்பர்
கூட்டமுய்யப் புதுமைகள் காட்டுமையன்
கயிலாய கோவிற்கு அன்பான காவற்பூதர்கள்
கோமா னென்றே கும்மியடி பூத
வரதனென்றே கும்மியடி.

பூரண கும்பங்களை வையுமடி சிவன்
புதின பூசைகள் செய்யுமடி
காரணஞ்சேர் பூதராச சுவாமியை
கண்டு கும்மியடியுமடி எதிர்
கொண்டு கும்மியடியுமடி
இரு கரங்கள் காட்டி
சரணங்கள் சிரங்கள் சூட்டி
மலர் பெய்த கவின் செய் அன்பர்கள்
சுகம் சுகமென்று கன்னிமாரே கும்மியடி
வன்னப் பொன்னி மாரே கும்மியடி.

முன்புவனம் தொழும் நேசனடி தேவர்
முழுதும் போற்றுமுக் காசனடி
அற்புதனாம் பூத தேவனடி நெஞ்சம்
அருந்தும் பெண்கள்
இடி சயமருந்தும் பெண்கள்
இருவர் தாயத்தை மாரென்ற நேர்த்தியாய்
நின்று ஆச்சிமாரே கும்மியடி
புது நாச்சியாரே கும்மியடி.

## எச்சரீக்கை

பாரோர் புகழ்ந்தேற்றித் தொழும்
பகவா எச்சரீக்கை
படிமீதினில் அரசாண்ட என்
பரனே எச்சரீக்கை
அருள் பரனே எச்சரீக்கை

சிறிராமர் நன்நாதர் வளவுறை
நாதா எச்சரீக்கை
சிவபூதகடக் கரசராகிய தேவே
எச்சரீக்கை
அருள்தேவே எச்சரீக்கை

## வாழி

திங்கள் மும்மாரியும் வாழி
திறள் வேந்தன் முறை வாழி
புங்கவனம் பூத தெய்வம்
புகழ் புனை தொண்டரும் வாழி
அங்கவன் பொற் திருக்கோவில்
அன்னை ரோடுன் னறிய
மங்கலக் கன்னியர் வாழி
மயில் நகர் வாழியவே.



சுன்னாகம் மயிலணி திருக்குடவாயில் ஸ்ரீ விஸ்வநாத சுவாமி கோயில்

உ
சிவமயம்

# சுன்னாகம் மயிலணி திருக்குடவாயில் ஸ்ரீ விஸ்வநாதசுவாமி திருவூஞ்சல்

காப்பு

சீர்பூத்த சோலைசெறிந்து ஓங்கி வைகித்
திருமகள்சேர் சுன்னாகத்து இலங்கி வைகும்
சார்பூத்த மயிலணியாம் பதியின் மேய
தகுவிசா லாட்சிவிஸ்வ நாதன் தன்மேல்
பார்பூத்த பைந்தமிழால் படியில் ஓங்கப்
பாவினத்தால் ஊஞ்சல்இசை பாடி ஏத்தக்
கார்பூத்த கருணைமதம் பொழியும் முக்கண்
கரிமுகவன் கமலபதம் காப்ப தாமே.

**ஊஞ்சல்**

செய்யதிரு மேவும்மறைத் தூண்கள் நாட்டிச்
சிறப்பமரும் ஆறங்க விட்டம் நீட்டித்
துய்யபல ஆகமமாம் கயிறு பூட்டித்
துதியமரும் உபநிடதப் பலகை கூட்டிச்
செய்யும்உயர் ஊஞ்சலிடை இனிது வைகித்
திகழ்அருள்சேர் விசாலாட்சி அம்மை யோடும்
கொய்யுமலர்க் கொன்றைமதிச் சடையோ னாகிக்
குலவுவிசு வேசுரரே ஆடீர் ஊஞ்சல் 1

கந்தருவர் நாரதர்சீர் இசைகள் பாடக்
காரிகையார் இடைதுவள நடனம் ஆடச்
சந்தமொடு தும்புருநற் சதிகள் போடத்
தாபதர்கள் நாற்புறமும் சார்ந்து நாடச்
சிந்தைமகிழ் கணநாதர் இயங்கள் கூட்டத்
தெய்வவிசா லாட்சிஇடப் பாலின் ஆடக்
கொந்தலரும் மந்தார மலர்கள் சூடிக்
குலவுவிசு வேசுரரே ஆடீர் ஊஞ்சல் 2

சந்திரனும் சூரியனும் கவிகை தாங்க
தனதனொடு மாருதனும் கவரி வாங்க
இந்திரனும் மால்அயனும் இடரில் நீங்க
இயமனது வான்கரத்தில் அடைப்பை தூங்க
சிந்துநதி இறைபுகழ்ந்து படிகம் தாங்க
தெய்வவிசா லாட்சிஇடப் பாலின் ஓங்க
கொந்தவிழும் கூவிளமோடு அனலும் தாங்கி
குலவுவிசு வேசுரரே ஆடீர் ஊஞ்சல் 3

அந்தணர்கள் நின்ஒளிர்கொள் தீபம் காட்ட
அகத்தொண்டர் இடையிடையே தலைகள் நீட்ட
சந்திரனும் சொல்லரசும் மாலை சூட்ட
தகும்உலகத்து அடியார்கள் துதிகள் கட்ட
சந்ததமும் மேற்றிசையாம் வாயில் காட்டி
சாரும்விசா லாட்சிஇடப் பாலில் கூட்டி
கொந்தவிழும் மயிலணியாம் கோவில் மேவி
குலவுவிசு வேசுரரே ஆடீர் ஊஞ்சல் 4

சுந்தரம்சேர் கயிலைமலைக் கோயில் போல
சுன்னாகத்து அணிதிகழும் கோவில் மேவி
சந்ததமும் கவுணியர்தம் குலத்தோர் போற்ற
சாரினிலே விநாயகனும் கந்த வேளும்
புந்தியிலே மகிழ்வுடனே புகழ்ந்து நிற்ப
பரசிவையாம் விசாலாட்சி பாலின் ஓங்க
நந்திமுழவு ஒலித்திடவே நடன மாடும்
நாதவிசு வேசுரரே ஆடீர் ஊஞ்சல் 5

பார்புகழும் சுன்னாகப் பதியில் மேவும்
பைந்தமிழ்சேர் மயிலணியாம் கோவில் தன்னில்
சீர்திகழும் கார்த்திகேயக் குருவின் பின்னோர்
சிறப்புடனே வழிவழியாய் அருச்சித் தேத்த
கார்மருவும் கூவிழநல் நிழலில் மேவி
கருதும்அடி யார்இடர்கள் களைத்து நாளும்
தாரணிசூழ் குடவாயிற் கோட்டம் தன்னில்
தவம் அருள் விசுவேசுரரே ஆடீர் ஊஞ்சல் 6

தாரணியில் எமதிடர்கள் எல்லாம் மாய
சந்ததமூர் திருஉளத்தில் அன்பு பாய
காரணியும் வயல்களொடு சோலை சூழும்
கற்பகத்தை ஒத்தபல கதலி மேவி
சீரணியும் பல்லுயிர்கள் இன்பம் மேவ
தெய்வவிசா லாட்சிஇடப் பாலின் மேவ
கூரணியும் முக்கருவார் சூலம் ஏந்தி
குலவுவிசு வேசுரரே ஆடீர் ஊஞ்சல்
செந்திடுவாழ் மணிமார்பன் ஆதிதேவத் 7

செந்திடுவாழ் மணிமார்பன் ஆதி தேவத்
திருக்குழாம் மந்தார மலர்கள் தூவ
இந்திரியவழி இலங்காதி தேய மேவ
இயற்புலவர் மதுரகவி கூறி மேவ
அந்திரைபோல் வெள்ஒலியல் அசைய எங்கும்
அன்பர்திரு நாமம்எடுத்து அன்பிற் கூற
சுந்தரம்சேர் விசாலாட்சிஇடப் பாலின் மேவ
சுகம்அருள் விசுவேசுரரே ஆடீர் ஊஞ்சல் 8

மேவுசடைப் பிறைமிளிரப் பாம்பு மின்ன
மென்முறுவல் இளநிலவு விரிந்து மின்ன
தூவியலும் மழுமின்னத் தோடு மின்ன
துதியமரும் மான்கன்று துளங்கி மின்ன
மாவியலும் புயத்துமணி வலயம் மின்ன
மார்பில்உப வீதமுடன் வரதம் மின்ன
ஆவியலும் விசாலாட்சி அமர்ந்து மின்ன
அருள்புரி விசுவேசுரரே ஆடீர் ஊஞ்சல் 9

மிண்டிவரும் கருநஞ்சை உண்டு முன்னாள்
விண்ணவரைக் காத்தவரே ஆடீர் ஊஞ்சல்
குண்டிகைகொள் குடமுனியைத் தென்பாற் போக்கி
கோலமருள் சற்குருவே ஆடீர் ஊஞ்சல்
செண்டணைய தெய்வவிசா லாட்சி அம்மை
சேர்மரும நாயகரே ஆடீர் ஊஞ்சல்
கொண்டல்துயில் மயிலணியாம் கோவில் மேவி
குலவுவிசு வேசுரரே ஆடீர் ஊஞ்சல் 10

## வாழி

வான்முகில்கள் மும்மாரி பெய்து வாழி
மறையோடு தவம்வேள்வி தாமும் வாழி
கோன்கோலும் அதனோடு குடியும் வாழி
கோதகலும் அந்தணரும் மன்னி வாழி
தேன்மொழியார் தம்கற்பு நெறியும் வாழி
தினந்தோறும் விசாலாட்சி சிறந்து வாழி
கூன்மதியார் மயிலணியாம் கோவில் வாழி
குலவுவிசு வேசுரரும் வாழி வாழி.

சுபம்



சுன்னாகம் மயிலணி கந்தசுவாமி கோயில்

உ
சிவமயம்

# சுன்னாகம் மயிலணிச் சுப்பிரமணியர் ஊஞ்சல்

## காப்பு

திருவேறு மணிமார்பன் முதலோர் போற்றுஞ்
செய்யமயி லணிவாழு முருகன் மீது
பொருளே றும் ஊஞ்சலிசை இனிது பாடப்
புகழேறும் அடியவர்கள் தழைக்க நாளும்
அருளேறு மும்மதமா மாரி பெய்யும்
அத்திமுகத் துத்தமனென் றரனார் தந்த
திருவேறு விநாயகமுக் கண்ணன் பாதஞ்
சென்னிமிசை கொண்டுபவந் தீர்த்து வாழ்வாம்.

## நூல்

திரைவளர்செம் பவளமணித் தூண்கள் நாட்டி
செங்கனகப் பைம்பொன்வளை விட்டம் ஒட்டி
நிரைவளருந் தரளமணிக் கயிறு மூட்டி
நிறைகிரணம் வீசுரத்னப் பலகை மாட்டி
புரைவளரா வகையமைத்த பீடமீதிற்
புவிவளரும் உயிர்வளர இனிது வைகி
வரைநடஞ்செய் காலவரே! ஆடீர் ஊஞ்சல்,
மயிலணிவாழ் வேலவரே! ஆடீர் ஊஞ்சல். 1

கண்ண னும்எண் கண்ணனும்கண் களித்துப்பாட,
கனலிமதி ஓர்கரத்திற் கவிகை நீட,
அண்ணன்மக வானெழிற்பூங் கவரிபோட,
அமரர்துந் துபிமுழக்கம் விண்மண் மூட,
திண்ணமுறு கூற்றடப்பை கொண்டுள் நாடத்,
திகழால வட்டமொடு பவனன் கூட
வண்ணமணிக் கடம்பினரே! ஆடீர் ஊஞ்சல்,
மயிலணி வாழ் வேலவரே! ஆடீர் ஊஞ்சல். 2

கங்கைமுடித் துளதாதைத் திருக்கண் சாத்தக்,
கணபதியா கியமுன்னோன் களித்து நோக்க,
செங்கையிற்சித் திரபானு தீபந் தூக்கத்,
திகழ்வருணன் பனிமழையே எங்கும் ஆக்க,
அங்கைமலர் தூவிமுனி வோர்கள் வாழ்த்த,
அரகரஎன்று அமரர்மறை யோர்கள் போற்ற,
மங்கைஉமை பாலகரே! ஆடீர் ஊஞ்சல்,
மயிலணிவாழ் வேலவரே! ஆடீர் ஊஞ்சல். (3)

அந்தரிஅம் பிகைத்தாயுள் அன்பிற் பார்க்க,
அமரரா தியபதினெண் கணங்கள் ஆர்க்க,
கந்தருவர் இசைநறவஞ் செவியில் வார்க்க,
ககனநட மகளிரடி சதியிற் பேர்க்க,
முந்தியவாச் சியங்கள்கடல் ஒலியைத் தூர்க்க,
முருக!சர வணபவ!என்று அடியர் போற்ற,
வந்தவினை தீர்ப்பவரே! ஆடீர் ஊஞ்சல்,
மயிலணிவாழ் வேலவரே! ஆடீர் ஊஞ்சல். (4)

பன்னிருசெங் கதிர் ஆறாய் வந்த தென்னப்,
பலமணிகள் மிளிருமுடி சிரமேல் துன்ன,
மின்னுகுலி சாதிமலர்க் கரமேல் மன்ன,
விரிகடகக் கரங்கள் ஈராறும் துன்ன,
துன்னுமணித் தண்டைசதங் கைஎன்று இன்ன
சுடர்க்காலிற் கலின் கலினென்று ஒலித்து மின்ன
வன்னமயில் வாகனரே! ஆடீர் ஊஞ்சல்,
மயிலணிவாழ் வேலவரே! ஆடீர் ஊஞ்சல். (6)

தன்னனைய பின்னவர்கள் எண்ம ரோடு
தாழ்விலடல் வாகுவெனுந் தகையோர் போற்ற
மன்னும் எழிற் சேவல்கொடி மேல்நின்று ஆட,
மரகதஒள் நிறத்தூவி மயூரம் ஆட,
இந்நிலத்தின் மிசைஎங்கும் மகிழ்வே ஆட,
இருமருங்கில் நின்றுஇருசத் திகளும் ஆட,
வன்னமணிக் கடம்பினரே! ஆடீர் ஊஞ்சல்,
மயிலணிவாழ் வேலவரே! ஆடீர், ஊஞ்சல். (7)

அந்திசந்தி வந்துநின்சந் நிதியில் நின்றே
அடிவணங்கி அடிமைசெயும் அடியார் வாழ,
நந்தலிலா வகைபூசை நடக்கு மாறு
நற்பொருள்ஈட்(டு) உத்தமரும் நயந்து வாழ,
சிந்தைமகிழ் வுறக்கேணி மதில்நின் கோயில்
திருப்பணிசெய் தொண்டர்களும் சிறந்து வாழ,
மந்திரதந் திரப்பொருளே! ஆடீர் ஊஞ்சல்,
மயிலணிவாழ் வேலவரே! ஆடீர், ஊஞ்சல். (8)

சொலஅரிதாங் கருணைபொழி முகம்ஈ ராறும்,
துய்யமலர்க் கடம்புபுனை புயம்ஈ ராறும்,
குலஅயிலுங் குலிசாதி படையுந் தோன்றக்,
குறமகள்தெய் வதயானை அம்மை யோடு
கலபமர கதமயில்மேல் காட்சி ஆடுங்
காலம்எது வோஅறியாக் கடையேன் வாழ,
மலரகித பூரணரே! ஆடீர் ஊஞ்சல்,
மயிலணிவாழ் வேலவரே! ஆடீர் ஊஞ்சல் (9)

அந்தமுதல் இல்லவரே! ஆடீர் ஊஞ்சல்,
ஆரணநல் லில்லவரே! ஆடீர் ஊஞ்சல்,
செந்தியில்வாழ்(வு) உகந்தவரே! ஆடீர் ஊஞ்சல்,
சிவபரனார்க்(கு) உகந்தவரே! ஆடீர் ஊஞ்சல்,
தந்திமுகர்க்(கு) இளையவரே! ஆடீர் ஊஞ்சல்,
தகுவரமர்க்(கு) இளையாரே! ஆடீர் ஊஞ்சல்,
வந்தெனையாள் கொள்பவரே! ஆடீர் ஊஞ்சல்,
மயிலணிவாழ் வேலவரே! ஆடீர் ஊஞ்சல். (10)

### வாழி

மறைவாழி, வாழிமறை யோரும், வாழி,
வணிகர், வே ளாளர்குலந் தழைத்து வாழி,
சிறைவீசு மயிலயில்செஞ் சேவல் வாழி,
திருப்புயத்தின் விருப்பமர் சக்திகளும் வாழி,
நிறைவாழி மகளிரிடை, முகில்கள் வாழி,
நெடுஞ்சுரபி இனம்வாழி, நீலமீ தென்றும்
நறைவீசுஞ் சோலைமயி லணிவாழ் கந்தர்
நல்லருள்பெற்(று) அத்தலம்எந் நாளும் வாழி.

### எச்சரீக்கை

திருவார்மயி லணிவாழருட் செல்வா ! எச்சரீக்கை:
சிறியேனிடர் தீர்த்தாண்டருள் தேவே ! எச்சரீக்கை:
அருவாயரு உருவாய் வரும் அரசே ! எச்சரீக்கை:
அடியாருளம் அகலா துறை அமுதே ! எச்சரீக்கை:

வானோர் மீட்டாண்டஎன் வாழ்வே ! எச்சரீக்கை:
மதியார்புரம் எரித்தானருள் வரதா ! எச்சரீக்கை:
தேனார்மொழி உமையாள்தரு சிறுவா! எச்சரீக்கை:
தினந்தோறும்என் உளம்மேவிய தேனே ! எச்சரீக்கை:

நினைவாருளம் பிரியாவரு நிமலா ! எச்சரீக்கை:
நெடியோன்மரு மகனாகிய நேயா ! எச்சரீக்கை:
முனையார்வடி வேலேந்திய முதல்வா ! எச்சரீக்கை:
முதல்வார்க்கரு மறைபேசிய முருகா ! எச்சரீக்கை:

### பராக்கு

நீலமயில் ஏறியருள் நித்தா ! பராக்கு:
நேடுமடி யாரிடர்தீர் நிமலா ! பராக்கு:
சீலமுறு வள்ளிமகிழ் தேவா ! பராக்கு:
சிவனருளும் ஆறுமுகச் செல்வா ! பராக்கு:

துய்யமயி லணியில்வளர் துணைவா ! பராக்கு:
சூரனைவதைத் தருள்செய் துரியா ! பராக்கு:
வையமிசை எனையாள வருவாய் ! பராக்கு:
வானுலகர் வாழ்வுபெற வைத்தாய்! பராக்கு:

பந்தவினை தீர்க்கும்உமை பாலா ! பராக்கு:
பகரரிய மெய்ஞ்ஞான பதியே! பராக்கு:
கந்தனென வந்தஅருட் கடலே ! பராக்கு:
கருணைமழை பொழிபனிரு கண்ணா ! பராக்கு:

**லாலி**

ஈசலாலிசெக தீச ! லாலி:
பூசுரர் துதிக்குமுரு கேச ! லாலி:
மங்கைதெய்வ யானைவள்ளி மதன ! லாலி:
மன தினொடு உரைதொடர அரியை ! லாலி:
துங்கமயில் ஏறிவரு சோதி ! லாலி:
சூரனை வதைத்தசுப் பிரமண்ய ! லாலி:
சாற்றுபெரு வாழ்வருளும் சாமி ! லாலி:
சதுர்மறைப் பொருளுரைத்த சதுர ! லாலி:
போற்றுநவ வீரர்புகழ் புனித ! லாலி:
புங்கவற்கு வாழ்வளித்த புண்ய ! லாலி:

இயற்றிவர் - முருகேசபண்டிதர்

உ
சிவமயம்

# சுன்னாகம்
# மயிலணி மகாவிஷ்ணு ஊஞ்சல்

காப்பு

சீர்கொண்ட ஈழவள நாட்டின் ஓர்பால்
சிறப்பமரும் யாழ்ப்பாண தேசந் தன்னில்
பேர்கொண்ட சுன்னாக நகர மீது
பிறங்குமயி லணிப்பதியில் வாசஞ் செய்யும்
மார்கொண்ட சீதரனாய் உலகங் காத்து
மன்னுமகா விட்டுணுமேல் ஊஞ்சல் பாட
கார்கொண்ட யானைமுக முடைய தேவன்
கமலமலர் அடியிணைகள் காப்ப தாமே.

**நூல்**

பேசரிய மேருவெனத் தூண்கள் நாட்டி,
பிறங்குமர கதப்பெரிய விட்டம் மூட்டி,
தேசுலவும் தரளமணிக் கயிறு பூட்டி,
செங்கனகத் தாலியலும் பலகை மாட்டி,
நேசமுடன் அமைத்தருளும் ஊஞ்சல் ஏறி,
நிலஉலக உயிர்களெல்லாம் தழைத்து வாழ,
வாசமுறுந் துளவினரே ! ஆடீர் ஊஞ்சல்,
மயிலணிவாழ் திருமாலே ! ஆடீர் ஊஞ்சல். 1

சந்திரனுஞ் சூரியனுங் கவிகை தாங்க,
சசிபதிசெங் கரதலத்திற் கவரி ஓங்க,
அந்தணர்கள் இருமலரின் மாரி தேங்க,
அன்புமிகும் அடியர் குழாம் இடரின் நீங்க,
நந்தவலிலா வாச்சியங்கள் பலவும் ஆர்ப்ப,
நமநாரா யணஒலியே விண்மண் தூர்ப்ப,
வந்தனைசெய் வார்நிதியே ! ஆடீர் ஊஞ்சல்,
மயிலணிவாழ் திருமாலே ! ஆடீர் ஊஞ்சல்.
மருவமருந் துளவமணி மாலை ஆட,
மன்னுதிருக் கரத்துளசக் கரமும் ஆட, 2

உருவமரும் முழக்கமுறு சங்கும் ஆட,
உயர்வுபெறு வில்லொடுவாள் தண்டம் ஆட,
பொருவரிய கனகமணித் துகிலும் ஆட,
பொன்னினியல் மணிமவுலி தானும் ஆட,
வரைகவித்த குடையினரே ! ஆடீர் ஊஞ்சல்.
மயிலணிவாழ் திருமாலே ! ஆடீர் ஊஞ்சல். 3

கிளர்பவள நிறத்தினரே ! ஆடீர் ஊஞ்சல்;
கிரியின்மழை காத்தவரே ! ஆடீர் ஊஞ்சல்:
துளைஅமைவே இசையினரே ! ஆடீர் ஊஞ்சல்:
தொல்லுலகம் உண்டவரே ! ஆடீர் ஊஞ்சல்:
வனைஅமரும் கரத்தினரே ! ஆடீர் ஊஞ்சல்:
வராகவடி வத்தினரே ! ஆடீர் ஊஞ்சல்:
வளர்கருட வாகனரே ! ஆடீர் ஊஞ்சல்:
மயிலணிவாழ் திருமாலே ! ஆடீர் ஊஞ்சல். 4

மீக்குலவு மறைவாழி, மறையோர் வாழி,
வேந்தரொடு வணிகர்வே ளாளர் வாழி,
ஆக்களினம் வாழி, முகில் நிரைகள் வாழி,
அன்புமிகும் மகளிர்பதி விரதம் வாழி,
வாக்குலவும் துதிபேசும் அடியர் வாழி,
மன்னுதிருப் பணிசெய்வோர் நாளும் வாழி,
மாக்கமல நங்கைதிரு நோக்கம் வாழி,
மயிலணிவாழ் திருமாலின் அருளும் வாழி. 5

இயற்றியவர் - முருகேச பண்டிதர்


சுன்னாகம் அருள்மிகு தாழையம்பதி அரிகர புத்திர ஐயனார் தேவஸ்தானம்

உ
சிவமயம்

# சுன்னாகத்தில் கோயில் கொண்டு வீற்றிருக்கும் ஐயனார் மீது திருவூஞ்சல்

சுன்னாகம், அ. முத்துக்குமார கவிராசர் அவர்கள் இயற்றியது

காப்பு

பொன்னாக வில்வளைத்துச் சுன்னா கத்திற்
புராரியுறைந் ததினாலும் பொறிச்செஞ் சூட்டு
நன்னாக வணையினின்மா லுறைத லாலும்
நானுமவர் பாலகனாம் நியாயத் தாலும்
சுன்னாகந் தனிலுறைவோ மென்று வந்த
சுத்தமகா சாத்தன்மிசை யூஞ்சல் பாட
முன்னாக வெவ்வினைக்கும் நிற்கு ஞான
மும்மதக்கை முகக்களிறு முதற்காப் பாமே.

**ஊஞ்சல்**

வித்துருமத் துத்திரங்க ணாட்டி மூட்டி
விட்டமர கதவயிரச் சட்ட மோட்டி
பத்தரைமாற் றுப்பொன்னின் வடங்கள் பூட்டி
பதுமரா கப்புதிய பலகை மாட்டி
முத்துமணிப் பந்தரிட்டுத் தெய்வத் தச்சன்
முறைமையினூற் படிசமைத்த வூஞ்சல் மீதே
அத்திமுகன் சகோதரனே யாடீ ரூஞ்சல்
அரியரனார் திருக்குமரா வாடீ ரூஞ்சல். 1

உதயமன மத்தனங் கால்க ளாக
வோங்குமண்ட முகடுநாடு வளைய தாகச்
சிதைவிலட்ட மாநாகங் கயிற தாகச்
செழும்புவியே யதிலமைத்த பலகை யாகப்
புதையிருள்சீத் தொளிர் பரிதி மதியு டுக்கள்
பொறியாக மாகமுற்றும் பந்த ராக
அதிககிரு பாகரனே யாடீ ரூஞ்சல்
அரியரானார் திருக்குமரா வாடீ ரூஞ்சல். 2

தாரணியுஞ் சுரிகுழலின் வரிவண் டாடச்
சந்திரோ தயவதன நுதற்பூ ணாட
வாரணியுங் களபதன மாலை யாட
மணிப்பணியின் குழையாட மருங்கு லாட
பூரணைபுட் கலையென்னுந் தேவி மார்கள்
புனைமணிமே கலையாடக் கூடி யாட
ஆரணத்தி னுட்பொருளே யாடீ ரூஞ்சல்
அரியரனார் திருக்குமாரா யாடீ ரூஞ்சல். 3

செய்யசடா முடியினதி ததும்பி யாடத்
திருமருத் தொடையின் முகந்த தும்பி யாட
கையினணி செண்டுடன் மான் கலையு மாடக்
கலாநிதியின் வகிர்மறுமான் கலையு மாட
சையமுலைக் கணிபணிமுத் தார மாடத்
தையலா ரிருவரும் தார மாட
ஐயனே மாசாத்தா வாடீ ரூஞ்சல்
அரியரனார் திருக்குமாரா வாடீ ரூஞ்சல். 4

விண்டலமெ லாந்துதிக்க மதிக்க வல்ல
வீரமகா காளனபயன் மேவ வெள்ளைக்
கொண்டன்மிசை நீலரவி யுதித்த தென்னக்
கோட்மத வாரணமேற் பவனி போந்து
மண்டலஞ்சேர் சுன்னாகத் துறையுந் தொண்ட
வறுமைபிணி துயரமெலாம் மாற்றி யாளும்
அண்டரண்ட நாயகனே யாடீ ரூஞ்சல்
அரியரனார் திருக்குமரா வாடீ ரூஞ்சல். 5

செஞ்சொல்மது ரத்தமிழ்ப்பா மாலை சாத்திச்
சிந்தனைவந் தனையவர்க்குந் திருநா மத்தால்
கஞ்சமல ரடிபரவு மவர்க்கு முள்ளங்
கசிந்துதுதிப் பவர்க்குமுச்சி காலை மாலை
வஞ்சனைநோய் பசாசுகொடு வறுமை யின்மை
மறுமைக்கும் நரகினுக்கும் பிறவி நோய்க்கும்
அஞ்சலஞ்ச லெனுந்தேவே யாடீ ரூஞ்சல்
அரியரனார் திருக்குமரா வாடீ ரூஞ்சல். 6

புங்கவர்க ணால்வேத கீதம் பாட
புனையிழையார் பரதவித நடன மாட
மங்கலநா லிரண்டுமிரு மருங்குங் கூட
மாதவர்கள் சொரியுமலர் மாரி மூட
செங்கரங்கொண் டரம்பையர்சா மரங்கள் போட
திங்கள்படி மணிமாடத் தென்பால் மேவும்
ஐங்கரன்கண் டுளமகிழ வாடீ ரூஞ்சல்
அரியரனார் திருக்குமரா வாடீ ரூஞ்சல். 7

இந்திரனோ டெண்டிசைமன் னவரும் போற்றி
யிருமருங்கு நின்றுமணி வடந்தொட் டாட்ட
சந்திரசூ ரியர்குளிர்வெண் குடைக ளேந்த
தம்புருதும் புருமுதலோர் சதியிற் பாட
புந்திமகிழ்ந் தரம்பையருஞ் சசியும் பாங்யாய்ப்
பூரணைபுட் கலைக்கணிகள் புனைந்து போற்ற
அந்துரதுந் துபியதிர வாடீ ரூஞ்சல்
அரியரனார் திருக்குமரா வாடீ ரூஞ்சல். 8

தீரணதி வீரமகா காய னென்னுஞ்
சேனைமுதற் றலைவனட்ட திசையுஞ் சுற்றி
சாரதவெள் ளத்துடனே நின்று காப்பத்
தன்னாக மிகமகிழ்ந்து சுன்னா கத்தில்
சீரடியா ரெனும்பயிருக் கருளின் மாரி
தினந்தினமும் பொழிந்துதவி செய்து காக்கும்
ஆரருளின் கடல்வண்ணா வாடீ ரூஞ்சல்
அரியரனார் திருக்குமரா வாடீ ரூஞ்சல். 9

காரயே கடல்வண்ணா வாடீ ரூஞ்சல்
காளகண்ட வுருத்திரனே யாடீ ரூஞ்சல்
மாரியா யருள்பொழிவா யாடீ ரூஞ்சல்
மதகளிறுார்ந் திடுமுதல்வா ஆடீ ரூஞ்சல்
சீரியா சிவயோகி யாடீ ரூஞ்சல்
செண்டமர்ந்த திருக்கரனெ யாடீ ரூஞ்சல்
ஆரியனே ஐயனே யாடீ ரூஞ்சல்
அரியரனார் திருக்குமரா வாடீ ரூஞ்சல். 10

சுந்தரமை முகில்மாரி பொழிந்து வாழ்க
சுரபிநிரை வாழ்கமன்ன செங்கோல் வாழ்க
மைந்தர்மனை நிதிபெருகி யில்லறத்தின்
மனைவாழ்க மகாசைவ சமயம் வாழ்க
சிந்தனையிற் கவலைமிடி வறுமை துன்பம்
தீர்த்தடியார் வாழ்க சுன்னைப் பதியும் வாழ்க
அந்தணர்தம் கிளைவாழ்க வாடீ ரூஞ்சல்
அரியரனார் திருக்குமரா வாடீ ரூஞ்சல். 11

**லாலி**

சீரோங்கு பரமேச கேசவர்தம் புதல்வா
திருவோங்கு பூரணைபுட் கலையிருவர் முதல்வா - லாலி
நேரோங்கு மழகுதிகழ் பூஞ்செண்டுப் படையாய்
நிலையோங்கு நலம்பூத்த பெருங்கருணை யுடையாய் - லாலி
ஏரோங்கு மொழிமலியுங் கழல்சிறந்த பாதா
இசையோங்கு தேவர்கண மினிதிறைஞ்சு நாதா - லாலி
வாரோங்கு கழனிபொலி திருச்சுன்னை வாழ்வாய்
வளமோங்கு மாசாத்த மூர்த்திநினைப் பணிவாம் - லாலி

**பராக்கு**

பூரணைபுட் கலைமகிழும் புனிதா -பராக்கு
புண்ணியர்கள் உள்ளநிறை போதா -பராக்கு
ஆராணங்கள் அறிவரிய ஐயா -பராக்கு
அடியாரை ஆண்டருளு மரசே -பராக்கு

சுன்னைநகர் மணிவளர் தூயா -பராக்கு
சொல்லரிய மெய்ஞ்ஞானச் சுடரே -பராக்கு
அன்னையினுந் தயைபுரியம் அமுதே -பராக்கு
அரிகரபுத் திருநாதத் தரசே பராக்கு

எண்ணரிய கருணைபொழி யிறையே -பராக்கு
இருவுபக லெனையாளு மெந்தாய் -பராக்கு
விண்ணவர்கள் போற்றுமருள் விமலா -பராக்கு
வேதாந்த சித்தாந்த விளைவே -பராக்கு

## எச்சரீக்கை

திருவார் சுன்னை நகர் பெருந் தேவே -எச்சரீக்கை
திருவார் மகிழ்வான்வரு செல்வா -எச்சரீக்கை
மருவார்செண்டும் படைநேர்ந்தகை வாழ்வே -எச்சரீக்கை
வடிவேறுபுட் கலைபுருணை மனத்தா -எச்சரீக்கை

அடியாருளத் தர்மசேகர வரசே -எச்சரீக்கை
அன்பேகுடி கொண்டார்துதி அந்தா -எச்சரீக்கை
மிடியானவை தீர்த்தாண்டருள் விகிர்தா -எச்சரீக்கை
வேதாமுத லானோர்துதி நாதா -எச்சரீக்கை

பவமானவை தீர்த்தாண்டருள் பதியே -எச்சரீக்கை
பாரும் நுன் நகமேவள பரனே -எச்சரீக்கை
செய்மேவமெய் யடியார்க்கருள் சீலா -எச்சரீக்கை
செல்வம்பல தந்தருள்சிவ பாலா -எச்சரீக்கை

ஆதிபுரம் சோதிவஸ் திந்தத் தையா
முக்கண் ஐயன் வெள்ளைவிடை யூர்திக்கு
மாதவத் தோன் பணி பாத மம்பல
வாணன் மகன் கப்பலிது இந்தத்தையா
மங்கையர்க் கானவொரு மஞ்சட் சிவப்பு
மைக்கூடு கண்ணாடி வண்ணவளை சீப்பு
கொங்கைக் கிசைந்தவொரு குத்தா றவுக்கை
குங்குமஞ் செம்பவளக் கஸ்தூரி மஞ்சள்
திங்கள்நுத லுக்கான திலகசெந் தூரம்
செம்பஞ்சு திருநாமத் தாசிலாப் பொடியும்
கொங்குவங் காளத்தில் விலைநலம் பேசி
குமரவேள் கப்பல்கொண்டு வருகுது அப்பா - ஏலெலோ.


சுன்னாகம் ஸ்ரீ கதிரமலை சிவன் தேவஸ்தானம்

உ
சிவமயம்

# ஸ்ரீ சுவர்ணாம்பிகை பாகர் ஸ்ரீ பொன்னம்பலவாணப் பெருமானின் திருவூஞ்சற் பாமாலை

சீரார் பவளக்கால் முத்தங் கயிறாக
ஏராரும் பொற்பலகை ஏறி இனிதமர்ந்து
நாராயணன் அறியா நாண்மலர்த்தாள் நாயடியேற்
கூராகத் தந்தருளும் உத்தர கோசமங்கை
ஆரா அமுதின் அருட்டா ளிணைபாடிப்
போரார்வேற் கண்மடவீர் பொன்னூச லாடாமோ.

பொன்மருவு வேதங்கள் கால்களாகப்
பொலியு சிவா கமம்னுயிர விட்டமாக
மன் மருவி கலை ஞானம் கயிறதாக
மாதவத்து ஓங்காரம் பலகையாக
சின் மருவு பிரணவத்தின் பகுமம் வைகி
சுவர்ணாம்பி கையாளும் சேர்ந்தே ஆட
அன்னை வளர் ஸ்ரீ வத்ஸன் மளிர்ந்தே
பாடச் சீர் பொன்னம் பலவாணா ஆடீர் ஊஞ்சல். 1

நற்றூண்கள் நால் மார்க்கப் பக்தியாக
நனிவிட்டம் சேர் பஞ்ச புலன்களாக
வற்றாத நாற்கரணம் வடங்களாக ஈயும்
வளர்பகுமம் முத்தியெனும் பீடம்
நற்றாயாம் சுவர்ணாம்பிகை யாளோடு
நகர் அன்னைப் பதி மேவித் தமிழினார்
சொற்றாள இன்னிசை ஸ்ரீ வத்ஸன்
பாடச் சேர் பொன்னம் பலவாணா ஆடீர் ஊஞ்சல். 2

விரிசடையும் கங்கைமதி அரவும் ஆட
விளங்கு திருக்கரங்களின் மான் மழுவும் ஆட
எரியனலும் டமருகத்தின் எழிற்கை ஆட
இதழ்களிலே அருள் தவழும் முறுவல் ஆட
அரியயனும் காணாக் கால் முடியும் ஆட
அபிராம னுமை சுவர்ணாம் பிகையு மாட
புரியகுவாம் அன்னையின் ஸ்ரீ வத்ஸன்
பாடப் புகழ் பொன்னம் பலவாணா ஆடீர் ஊஞ்சல். 3

தோடாடக் குழையாடத் துடிக்கை ஆடத்
துலங்கிகுருத் திரிர்க்கு மொரு கபாட மாட
மாடாட மலாட நூலும் ஆட
மகிழ்ந்து மனம் அடியார் பக்தியினால் ஆட
வீடாளும் அருள் சுவர்ணாம் பிகையு மாட
விளங்கிரு சுன்னைப் பதியும் வியந்தே ஆட
ஏடாளும் வேதியன் ஸ்ரீ வத்ஸன்
பாட எழில் பொன்னம் பலவாணா ஆடீர் ஊஞ்சல். 4

செந்திருவும் இசைவாணி வீணை மீட்ட
செங்கணரி வேயங்குழல் இசைந்தே
காட்ட நந்திமிரு தங்கவொலி நயமாய்க்
கூட்ட நாரதரும் துன்புருகும் புராலைச் சேர்க்க
அத்தருணரும் ஸ்ரீ வத்ஸன் ஊஞ்சல் பாட
அமலியுமை சுவர்ணாம்பியா ளோடு
செந்தமிழின் அன்னை வளர் பக்தரேத்த
சீர் பொன்னம் பலவாணா ஆடீர் ஊஞ்சல். 5

தேவர்கள் கற்பகப் பூ மாரி பெய்ய
தேவ அரம் பையர் பரதக் கலையை ஆடப்
பூவுலகில் சுன்னையம் பதியோர் நாடப்
பூரிப்பால் பக்தருளம் புளகமெய்த
கூவு குயில் ஆவினமும் குழைந்தே ஆட
குலை மருவு கதலிவளம் குலுங்கி ஆட
நாமவரும் இன்னிசை ஸ்ரீ வத்ஸன் பாட
நற் பொன்னம் பலவாணா ஆடீர் ஊஞ்சல். 6

மண்சுமந்து பிட்டுண்ட களைப்பும் தீர
மன்னவன் பிரம்படித்த தோஷம் ஆற
பண் சுமந்த சுந்தரர் சொற் பித்தம் நீங்க
பக்தன் கண்ணப்பன் கால் தழும்பும் ஆறப்
புண் சுமந்த கருவூலக் கண்டம் மாறப்
புனித மறை வேதியன் ஸ்ரீ வத்ஸன் பாட
ஏழில் பொன்னம் பலவாணா ஆடீர் ஊஞ்சல். 7

பாந்தமுடன் பகலவனும் ரதத்திலேறி
பரியேழும் பூட்டி ரதப் பவனி ஊர
மாந்த ரெல்லாம் அனுக்கிரகம் பெற்றுவாழ
மன்னுநவக் கிரகங்கள் நின்னைப் போற்ற
சாந்தமுடன் ஸ்ரீ சக்ரந் தன்னில் வைகும்
சாருமதி சுவர்ணாம்பிகை யாளோடு
காந்த மெழும் ஏழிசை ஸ்ரீ வத்ஸன் பாடக்
கவின் பொன்னம் பலவாணா ஆடீர் ஊஞ்சல். 8

ஓராது முகத்தானும் ஆட. ஆட
ஓங்கார வாரணனும் ஆட, ஆட
பேராது சடைமதியும் ஆட, ஆட
புலித்தோலும் அரவணியும் இசைந்தே ஆட
ஆருனு தத்துவங் கட் கப்பரான
ஆனந்தி சுவர்ணாம் பிகையா ளாட
பேருன இன்னிசை ஸ்ரீ வத்ஸன் பாட
பெரும் பொன்னம் பலவாணா ஆடீர் ஊஞ்சல். 9

கதிரை மலைச் சிவனாரே ஆடீர் ஊஞ்சல்
கவின் சுன்னைப் பதியோரே ஆடீர் ஊஞ்சல்
சதுரமறைப் பொருளாரே ஆடீர் ஊஞ்சல்
சச்சிதானந்த மாயா ஆடீர் ஊஞ்சல்
நதி தவழும் சடைமுடியோய் ஆடீர் ஊஞ்சல்
நாரி சுவர்ணாம்பிகை யோய் ஆடீர் ஊஞ்சல்
கதியெனவே இசைத்திரு ஸ்ரீ வத்ஸன் பாடக்
கதிர்ப் பொன்னம் பலவாணா ஆடீர் ஊஞ்சல். 10

வேதகங்கள் வாழிசிவா கமகங்கள் வாழி
விளங்கிடு பண் திருமுறைகள் வாழி வாழி
சீதங்கொள் சைவமதம் செழித்து வாழி
சீர் நிறைந்து என்னையம் பதியும் வாழி
மாதங்கி உமை சுவர்ணம்பிகையும் வாழி
மார்க்கண்ட னான ஸ்ரீ வத்ஸன் வாழி
கீதங்கொள் திருவூஞ்சல் தமிழும் வாழி
கிளர் பொன்னம் பலவாணா ஆடீர் ஊஞ்சல். 11

தெங்குலவு சோலைத் திருஉத்தர கோசமங்கை
தங்குலவு சோதித் தனியுருவம் வந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமும் ஆட்கொள்வான்
பங்குலவு கோதையுந் தானும் பணிகொண்ட
கொங்குலவு கொன்றைச் சடையான் குணம்பரவிப்
பொங்குலவு பூண்முலையீர் பொன்னூற் லாடாமோ 12


புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்தி விநாயகர் கோயில்

உ
சிவமயம்

# புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை ஐங்கரனூஞ்சல்

(வித்துவசிரோமணி பிரம்மஸ்ரீ சி. கணேசையரவர்கள் பாடியது)

காப்பு

வெண்பா

சித்தி யுறுவார் தெளியுங் கலையுறுவார்
பக்தி யுறுவார் பயனுறுவார் - அத்திமுக
முன்னவனை யைங்கரனை முத்தி தரும் புன்னைநகர்
மன்னவனை முன்போற்று வார்.

## நூல்

சீர்பூத்த பூசுரர்வம் மிசமு மேலாஞ்
செல்வமிகும் வேளாளர் குலமுமோங்கும்
பேர்பூத்த புன்னைமா நகரந் தன்னிற்
பெருமைகொளா யாக்கடவைப் பதியின் மேவும்
நீர்பூத்த செஞ்சடையுடைய மூன்று கண்ணும்
நிலவுமொரு கோடுமிரு செவியுங் கொண்ட
கார்பூத்த கரிமுகவன் பாதம் போற்றிக்
கருணையுட னவற்கூஞ்ச லோது வாமே. 1

மாமேவு பவளத்தாற் கால்க ளாக்கி
மதிவயிர ரத்தினத்தால் விட்டம் போக்கித்
தூமேவு தங்கமணிப் பலகை தேக்கிச்
சுடர்மலியுந் தரளத்தாற் கயிறு வீக்கிப்
பூமேவு சித்திரங்கள் பொலியச் செய்த
புட்பகநேர் தருமூஞ்ச லினிது மேவிக்
காமேவு புன்னைமா நகரி லாயாக்
கடவையுறு மைங்கரரே யாட ரூஞ்சல். 2

சந்திரனுஞ் சூரியனுங் குடைக டாங்கச்
        சதாகதிவெண் கவரிமிளிர் கரத்தில் வாங்க
முந்துசல பதிகொண்ட வட்டந் தூங்க
        முன்னுதிறன் மறலிகொளும் வாளு மோங்க
அந்தரர்கள் சொரிதருபூ மாரி தேங்க
        அணிமுரச மாதியவாச் சியங்கே ளேங்க
கந்திகள் சூழ் புன்னை மா நகரி லாயாக்
        கடவையுறு மைங்கரரே யாடீ ரூஞ்சல். 3

மண் ணுலகு முதலான வுலகம் யாவு
        மற்றுனையே முதற்பூசை செய்து போற்ற
எண் ணுமவர் கருமமெலா மினிதி னாங்கே
        இடரின்றி முற்றுமா றியற்றுந் தேவே
உண் ணிலவு மொருபொருளே யுலக மூர்த்தீ
        ஓங்கார வடிவாகி யுற்ற சோதீ
கண்ணியஞ்சேர் புன்னைமா நகரி லாயாக்
        கடவையுறு மைங்கரரே யாடீ ரூஞ்சல். 4

குலையோங்கு தெங்கினுயர் காலாற் சூழ்ந்து
        கொடியேறு செங்காந்தண் மலர்க்கை கூப்பி
இலையோங்கு பூங்கொம்பாற் றலைவ ணங்கி
        இசைமருவுஞ் சுரும்பினின நாவாற் பாடி
நிலையோங்கு கருவிளையி னலர்க்க ணோக்கி
        நிதஞ்சோலை வழிபடுவ போல மேவுங்
கலையோங்கு புன்னை மா நகரி லாயாக்
        கடவையுறு மைங்கரரே யாடீ ரூஞ்சல். 5

பெருமைதிகழ் நாதமு லான வாடப்
        பேசலுறுங் காலமுத லாக மாயை
வருவனவாந் தத்துவத்தின் வகையு மாட
        வளமருவும் பிரகிருதி தானு மாட
உருவுபெறும் பிரணவமாம் பீட மேறி
        யுகந்தினிதங் காடுகின்ற வொருமைத் தேவே
கருதலுறும் புன்னை மா நகரி லாயாக்
        கடவையுறு மைங்கரரே யாடீ ரூஞ்சல். 6

நிதிமருவு குழையினொடு செவியு மாட
நிலவுதரும் பிறையினொடு சடையு மாட
மதிபுயமும் வலையமொடு மருவி யாட
மணிபொலியும் மதணியுடன் மார்பு மாட
நதிபெருகும் மதாமுடைய கரமு மாட
நறைமருவுங் கமலநிக ரடியு மாட
கதலிமிகும் புன்னை மா நகரி லாயாக்
கடவையுறு மைங்கரரே யாட லூஞ்சல். 7

கொற்றவயி லத்தனுக்கு மன்வந் தோனே
குஞ்சிதபா தத்தனுக்கு முன்வந் தோனே
உற்றவறக் கண்ணாருக் கருள்செய் வோனே
ஓதியுனைக் கண்ணாருக் கிருள்செய் வோனே
பற்றலானாங் கயமுகனைச் செற்ற மைந்தா
பண்ணமையும் மொழியுமையாள் பெற்ற மைந்தா
கற்றவர்சேர் புன்னை மா நகரி லாயாக்
கடவையுறு மைங்கரரே யாட லூஞ்சல். 8

அருளுறுமைங் கரத்தாரே யாட லூஞ்சல்
அறையுமொரக் கரத்தாரே யாட லூஞ்சல்
தெருளினர்நம் பிறையவரே யாட லூஞ்சல்
திகழ்சடையிற் பிறையவரே யாட லூஞ்சல்
மருளினருக் கண்ணாரே யாட லூஞ்சல்
மருவியமுக் கண்ணாரே யாட லூஞ்சல்
கருளிலர்சேர் புன்னைமா நகரி லாயாக்
கடவையுறு மைங்கரரே யாட லூஞ்சல். 9

## வாழி

நவிலுமிசை மறையவர்தம் மிசமும் வாழி
நண்ணுமுடி மன்னர்கள்பின் னோர்கள் வாழி
தவமுமுயர் வேள்வியுநல் லறமும் வாழி
தகைமைபெறு மானினமும் முகிலும் வாழி
சிவசமய நெறியினொடு நீறும் வாழி
செழுமறையா றங்கமொடு பிறவும் வாழி
கவிஞருறை புன்னைமா நகரி லாயாக்
கடவையுறு மைங்கரரும் வாழி வாழி.

## எச்சரீக்கை

சிவனார்தரு கயமாமுகத் தேவே யெச்சரீக்கை
தேனார்மொழி யுமையாடருஞ் செல்வா வெச்சரிக்கை.

தவமேவிய முனிவோர்பெறுந தவமே யெச்சரீக்கை
சாராரிடர் தீராததொர் தகையா யெச்சரீக்கை.

கயமாமுக வவுணற்கொரு காலா வெச்சரீக்கை
கடிமாமலர் நிகர்மேவிய காலா வெச்சரீக்கை.

அயமேறிய வறுமாமுகற் கண்ணா வெச்சரீக்கை
அவிருஞ்சுடர் வடிவாயமுக் கண்ணா வெச்சரீக்கை.

நலமேவிய வலவைக்கொரு நாதா வெச்சரீக்கை
நாராயணன் பூசித்திடு நம்பா வெச்சரீக்கை.

அலையார்நதி புனையுஞ்சடை யமலா வெச்சரீக்கை
அணிமேவிய புன்னைப்பதி யரசே யெச்சரீக்கை.

## பராக்கு

தும்பிமுகங் கொண்டருளுஞ் சோதீ பராக்கு
சுடர்சடையி னதிகொண்ட தூயா பராக்கு
அம்பிகைமு னீன்றருளு மன்பா பராக்கு
அரவினொடு மதிபுனைந்த வாதீ பராக்கு.

நாதநிலை கடந்துநின்ற நாதா பராக்கு
ஞானமகல் மூடரக நண்ணாய் பராக்கு
போதநிலை யோர்களுளம் புகுவாய் பராக்கு
புலவோர்கள் பாடலுறும் பொருளே பராக்கு.

வேதமுடி வாகிநின்ற விமலா பராக்கு
விண்ணோர்கள் தொழநின்ற மேலோய் பராக்கு
ஆதிநடு முடிவாய வமலா பராக்கு
அணிகொள்புன் னைப்பதியி லரசே பராக்கு.

## மங்களம்

அத்திமுக முன்னவற்கு மங்களம் - மிக்க
அருள்வடிவ மாயவற்கு மங்களம்
முத்திதரு மேலவற்கு மங்களம் - தேவ
முதல்வர்பணி தேவனுக்கு மங்களம்.

சுத்தபரி பூரணற்கு மங்களம் - தூய
சோதிவடி வானவற்கு மங்களம்
சித்திதரு செல்வனுக்கு மங்களம் - செம்பொன்
சிமயமயி லீன்றவற்கு மங்களம்.

ஆதிபர மானவற்கு மங்களம் - செங்கை
அங்குசபா சத்தனுக்கு மங்களம்
பூதகண நாதனுக்கு மங்களம் - எங்கள்
புன்னைநக ரீசனுக்கு மங்களம்.



தெல்லிப்பழை காசிவிநாயகர் தேவஸ்தானம்

உ
கணபதி துணை

# தெல்லிப்பழை, வீணாக்கடவைக் காசிநாயகர் திருவூஞ்சல்

## காப்பு

நாரணனு நான்முகனு நாடிக் காணா
நாயகனும் நாயகியு ஞால முய்ய
ஆரணவா கமமூல மணுவாய்க் கூடி
அரியதிரு விளையாடல் புரியு நாளில்
வாரணமா முகமுமைந்து கரமுங் கொண்டே
வந்தருளுந் தொந்திவயிற் றெந்தா யுன்மேல்
ஏரணவு மூஞ்சலிசை தமிழாற் பாட
இருசரண வரணமல ரிணைகாப் பாமே.

## நூல்

சீர்பூத்த மாமாயை யருளிற் பூத்த
சிவம்பூத்த நாதவிந்து தூணா நாட்டி
ஏர்பூத்த வக்கரங்கள் விட்டம் பூட்டி
இசைபூத்த கலையாதி வடங்கள் மாட்டிப்
பார்பூத்த வோங்கார பீடங் கூட்டிப்
பயன்பூக்க வாக்கியபொன் னூஞ்சன் மீதே
கார்பூத்த தெல்லிநகர் வீணாக் கடவைக்
காசிவிக்ன விநாயகரே யாடீ ரூஞ்சல். 1

ஒளியோங்கு மிருசுடரும் கவிகை தாங்க
உரமோங்கு மனிலனெழிற் கவரி வாங்க
நளியோங்கு மடல்வருணன் பனிநீர் தூவ
நயமோங்கு தருமனுய ருடைவாள் காவத்
தெளியோங்கு தவமுனிவ ராசி பேசச்
சீரோங்கு மமரர்தரு மலர்கள் வீசக்
களியோங்கு தெல்லிநகர் வீணாக் கடவைக்
காசிவிக்ன விநாயகரே யாடீ ரூஞ்சல். 2

பண்ணமரும் சித்திர யாழ் முனிவன் மீட்டப்
பாலமரும் மாலவனார் முழவு கூட்ட
விண்ணமரு மரம்பையர்கள் நடன மாட
விரையமரு மலரவனார் தாளம் போட
எண்ணமரும் விஞ்சையர்கள் கானம் பாட
இருளமரும் மலத்தொடர்ச்சி யிரிந்தே யோடக்
கண்ணமருந் தெல்லிநகர் வீணாக் கடவைக்
காசிவிக்ன விநாயகரே யாடீ ரூஞ்சல். 3

ஆவணியு மைந்திளநீர் பனிநீர் கூட்டி
அருளணியு மந்திரநீர் நறுநீ ராட்டித்
தூவணியுந் துகிலணிந்து கலன்கள் மாட்டித்
தூபமணி தீபநிரை தோன்றக் காட்டிப்
பாவணிசொன் மாலைமலர் மாலை சூட்டிப்
பழமையணி யடியவர்கள் பரவி யேத்தக்
காவணியுந் தெல்லிநகர் வீணாக் கடவைக்
காசிவிக்ன விநாயகரே யாடீ ரூஞ்சல். 4

நீர்மலிந்த செய்யசடை நிமல னோர்பால்
நிறைமலிந்த சிமயமலை யமலை யோர்பால்
கூர்மலிந்த முத்தலைவேற் குமர னோர்பால்
குணமலிந்த அறுமுகத்துக் குழுக னோர்பால்
தார்மலிந்த நெடுமாலும் அயனு மோர்பால்
தமிழ்மலிந்த மறையோது மடிய ரோர்பால்
கார்மலிந்த பொழிற்றெல்லி வீணாக் கடவைக்
காசிவிக்ன விநாயகரே யாடீ ரூஞ்சல். 5

வந்தவினை விக்கினங்கள் தீர்ப்பாய் என்றும்
மந்திரவோங் காரமுதல் ஆனாய் என்றும்
சந்திரசா பந்தவிர்த்த தலைவா என்றும்
தக்கனுக்கு மிக்கவரம் தந்தாய் என்றும்
சிந்துரமா முகனைவதை செய்தாய் என்றும்
தேவாதி தேவவென்றும் சேவித் தேத்தக்
கந்தமலி பொழிற்றெல்லி வீணாக் கடவைக்
காசிவிக்ன விநாயகரே யாடீ ரூஞ்சல். 6

ஆனைமுகன் வலிமைகெடுத் தருளல் பாடி
அவ்வைதமிழ்க் கருள்புரிந்த அன்பு பாடி
ஞானமுனி குண்டிகைநீர் கவிழ்த்தல் பாடி
நம்பிக்குக் கலையளித்த நயமும் பாடி
மானமிகு சனகனையாட் செய்தல் பாடி
வல்லபையாள் தோள்புணரும் வளமும் பாடிக்
கானமலி தெல்லிநகர் அடியர் போற்றக்
காசிவிக்ன விநாயகரே யாடீ ரூஞ்சல். 7

அற்புதகுஞ் சரமுகவ பால நேத்திர
ஆரம்ப தேவகண நாத ஞான
சிற்பரமுப் புரதகனர் பரவு மோன
சித்திபுத்தி யிருபாக தேவ தேவ
மற்புயலம் போதரமா தங்க ரூப
வக்கிர தந்தமா யூரவங் குசபாச
கற்புமலி தெல்லிநகர் வீணாக் கடவைக்
காசிவிக்ன விநாயகரே யாடீ ரூஞ்சல். 8

மங்கலவா ரணமுகத்தீ ராடீ ரூஞ்சல்
மந்திரவா ரணமுகத்தீ ராடீ ரூஞ்சல்
தங்கவரைப் புத்தகத்தீ ராடீ ரூஞ்சல்
சார்ந்தவரைப் புத்தகத்தீ ராடீ ரூஞ்சல்
அங்கணருங் குளத்துடையீ ராடீ ரூஞ்சல்
ஆசையருங் குளத்துடையீ ராடீ ரூஞ்சல்
கங்கணஞ்சூழ் பொழிற்றெல்லி வீணாக் கடவைக்
காசிவிக்ன விநாயகரே யாடீ ரூஞ்சல். 9

பூவாழி பொன்னின்மழை பொலிந்து வாழி
பூசுரரும் ஆனிரையும் பொலிந்து வாழி
தேவாழி ஐந்தெழுத்தும் நீறும் வாழி
செந்தமிழ்மந் திரம்வாழி தேவி வாழி
பாவாரும் மயில்வாழி அடியார் வாழி
பரவுதமிழ் ஊஞ்சலிசை பத்தும் வாழி
காவாரும் தெல்லிநகர் வீணாக் கடவைக்
காசிவிக்ன விநாயகரே வாழி வாழி: 10

இயற்றியவர் - திருமதி. க. சிவானந்தவல்லி


தெல்லிப்பழை குருநாதசுவாமி கோயில்

உ
சிவமயம்

# திருவூஞ்சல்

## தெல்லிநகர்க் குருநாதசுவாமி பேரிற்

## காப்பு

திருமேவு சைவருறை தெல்லிநகர் வாழும்
குருநாத னுக்கூசல் கூற - வருணாட்டுக்
கந்தியா னத்தா மரையாத னன்முதலோர்
தந்தியா னத்தான் சரண்

நூல்

திருவாரும் வருணனார் பவளக் கால்கள்
செவ்விகொடு நாட்டமேல் வைரவிட்டம்
உருவாருந் தேவர்கோ னுவந்து பூட்ட
வுற்றநான் முகன்முத்து வடங்கள் வீக்க
மருவாரு மால்ரத்நப் பலகை தூக்கி
மருகனே யாடுதென வாழ்த்தா நின்றான்
குருநாத சாமிதெல்லி யூர்வாழ் தெய்வங்
குகப்பெருமா னாமடியரு ளூசலின்னே. 1

உலகெலா மொருசெங்கோ லோச்சிக்காக்கு
மொண்டமிழர் முடிமீதி லுன்பாதத்தே
யலகிலாப் பத்திவித்து மந்நெஞ்சத்தே
யருண்மேவு கவிஞர்நா வகத்தே கொண்டோர்
இலகுதாமரை நெஞ்சிற் கற்புநாட்டு
மியல்பானோர் வதனத்தே யின்பமூட்டக்
குலமெலாம் விளையாடித் தெல்லியூர் வாழ்
குருநாத னாடியரு ளூசலின்னே. 2

தணியாத காதலொடு வாயூறற்றேன்
றவழ்மார்புச் சிறாரொன்று சேர்ந்து தூய
மணலானே சோறாக்கித் தெய்வஞ்செய்து
வந்தனையோ டடுர்ச்சித்து வாழ்த்து வார்போல்
அணிமேவு மழலைப்பாப் பாடியாடற்
கணிபூத்தம் பாலிகை கூத்தாடிக் காக்குங்
குணமாருந் தெல்லைநகர்க் கோயில்கொண்ட
குருநாத னாடியரு ளூசலின்னே. 3

கலைமாதி யாழ்வருடிப் பாடுகின்றாள்
கமலத்தாள் புனைந்து கூத்தாடுகின்றாள்
அலைமாது மலைமாது மாங்குன் னூச
லாட்டுக்கண் டகங்களித்தற் கீங்குள்ளார்கள்
கலையோடியுட் கொண்டும் புறம்பொன் றில்லார்
களுக்குப் பொற்கலை கொடுக்கும் வண்மைச் செல்வர்
குலமேவு தெல்லிநகர்க் கோயில் கொண்டான்
குருநாத னாடியரு ளூசலின்னே. 4

வாடாத தவவாய்மை யோங்கிக் கற்றா
மனசென்னத் தமிழ்மாட்டு வேட்கைபொங்கி
ஓடாத நெறிநின்று முன்ன ருற்ற
வூனமெலா நீத்துரிமை யொன்ற வென்று
நாடாண்டு தமிழ்மக்க ணன்று சால
நாவலவர் பாவலவர் தம்மைப் பேணிக்
கோடாத செல்வமெலாங் கொடுத்துக் காக்குங்
குருநாத னாடியரு ளூசலின்னே. 5

தண்டமிழைச் சைவத்தை தக்கசீர்த்தித்
தமிழ்நாட்டை நான்மறையை யாகமத்தைக்
கொண்டலெனச் சுவையூற்றும் பாவல்லோரைக்
கூடுகண் மணியென்னப் பேணாநீசர்
அண்டிவாழ் திசையுங்கண் பாரா வாண்மை
யமைந்தார்க்கே யிடமீயுந் தெல்லியூரன்
குண்டலமுந் தாரமசைந் தாடவப்பன்
குருநாத னாடியரு ளூசலின்னே. 6

ஆங்காரச் சூர்குலவே ரன்றறுத்தா
னகப்பொருட்குச் சுவைப் பொருளையார்ந்து கேட்டான்
நீங்காத செழுந்தமிழ்க்கு நேயங்கூட்டி
நிகருமொழி வேறின்றா நேர்மைகாட்டி
பாங்கான மணிமௌலி சூட்டிவென்றி
படுதம்ப முலர் தடலஞ்சூழ் தெல்லியூர்வாழ்
குருநாத னாடியரு ளுசலின்னே. 7

மண்ணுலகும் விண்ணுலகும் வாழமும்மை
மாரிமதி தொறும் பொழிய மன்னர்செங்கோல்
எண்ணுமொரு குறைவின்றி யினிதினீட
யிறைவனருண் மறையுட னாகமங்களோங்க
தண்ணளிசேர் சைவநெறி வீறவின்பந்
தழைக்கவரு மைந்தெழுத்து நீறும்வெல்ல
கொண்டறவழ் மணிமாடஞ் சூழுந்தெல்லிக்
குருநாத னாடியரு ளுசலின்னே. 8

போற்றுவரு ணாச்சிரம நான்கும் வெல்ல
புலவர்புக ழறமுதலா நான்கும் புல்ல
நோற்றமறை யாந்தணர்கள் வேள்வியொல்ல
நுவறரும நெறிமறவேர் தன்னைக் கொல்ல
சேற்றிதழ்த்தா மரைமுகையிற் கைகள் கூப்பித்
தீரவே லெனவடியார் நீண்டு செல்ல
கோற்றொடியார் நிறைவிளக்குந் தெல்லிலயூர்வாழ்
குருநாத னாடியரு ளுசலின்னே. 9

ஆரியமுஞ் செந்தமிழும் வாழிவேதம்
ஆகம புராணாதி நூல்கள் வாழி
சீரிய சித்தாந்த சைவஞ் சிறந்து வாழி
திருநீறுங் கண்டிகையுந் திகழ்ந்து வாழி
மாரிதரு வான்முகில்கள் வழங்கி வாழி
வளம்பலவும் வாய்ந்து சைவரூழி வாழி
கூரியநன் மதிப்புலவர் பாடல்சான்ற
குருநாதன் றிருக்கருணை வாழி வாழி. 10

உ
சிவமயம்

# திருவூஞ்சல்

யாழ்ப்பாணம் - தெல்லியூர்
குருநாத சுவாமி பேரிற்

காப்பு

சீர்த்திபெறு பூஞ்சினைகள் பந்த ராக
செய்ய தோரணாங் கமுகின் பாளையாக
ஆர்த்திபெறு மணியோசை பண்ணதாக
அங்குயிலின் கூக்குரலின் இசையதாக
பூர்த்தி பெறு மணங்கமழுஞ் சோலை நாப்பண்
புண்ணியருக் கருள்புரிய விருப்பினோடும்
கீர்த்தி பெறு தெல்லிநக ரத்தே மேவும்
கிருபை தருங் கணபதியே காப்ப தாமே.

நூல்

சீர்மேவு நான்மறைகள் கால்க ளாகத்
திறமேவு மங்கமவை விட்ட மாக
ஏர்மேவு பிரணவம்பொற் பலகையாக
எழின்மேவு முபாங்கமவை கயிற தாக
ஆர்மேவு பல்கலைசித் திரமதாக
ஆற்றியொளி செயுமூசற் பீட மேவி
பேர்மேவு தெல்லிநக ரத்தே வாழும்
பெருமானே குருநாதா வாடீ ரூஞ்சல். 1

பத்திசெயு மன்பர்நிலை கால்களாகப்
பயிலுமவர் சடலமவை பலகை யாகச்
சித்தியுறு மண்பதுவே கயிறதாக
சிறந்தோங்கு தியானமவை விட்டமாகச்
சுத்தியுறு மலர்மனம் பொற் பீட மாகத்
தொழுமடியா ருளத்துள்ளே குலவி வாழும்
சத்தியொடும் தெல்லிநக ரத்தே மேவும்
சண்முகனே குருநாதா வாடீ ரூஞ்சல். 2

சங்கரனு மைங்கரனு மகிழ்ச்சி கூரச்
சதுர்முகனும் நாராணனூந் தாழ்ந்து போற்றத்
துங்கமுறு கணத்தலைவர் துதிகள் கூறச்
சுந்தரமா ராம்பையர்கள் கீதம் பாட
பங்கமிலா வடியார்கள் மகிழ்வோ டாடப்
பாவையர்க ளிருமருங்கும் கவரி வீசப்
பொங்குமெழிற் றெல்லிநக ரத்தே வாழும்
பூரணனே குருநாதா வாடீ ரூஞ்சல். 3

காலையிலு மாலையிலு மணைந்து போற்றிக்
கண்களினீர் மார்பதனில் வீழ்ந்து சோர
வேலைநிகர் தம்மிடர்கள் சொல்லிச் சொல்லி
விழுந்து நமஸ்காரமது செய்துபோற்றப்
பாலைநகர் குளத்தடியார்க் கருளை யீந்து
பகர்வினைக ளெஞ்ஞான்றும் நீக்கி நீக்கி
சோலைநகர் தெல்லிநக ரத்தே மேவும்
சுந்தரமார் குருநாதா வாடீ ரூஞ்சல். 4

பொற்பாடு மணிகுடந் துலங்கி யாடப்
புகழாரு மணிவதனந் தானுமாடக்
கற்பாருங் கனியிதழ்வாய் வள்ளி யாடக்
களிப்பாருந் தெய்வமகள் மகிழ்கொண்டாட
வெற்பாருந் தோகையோடு கொடியு மாட
விளங்குதிருக் கரத்துறையும் வேலு மாட
அற்பாரு மடியவர்கள் போற்றுந் தெல்லி
யகமேவும் குருநாதா வாடீ ரூஞ்சல். 5

பொன்புனையு நவமணிமா மாலை யாட
புரமதனிற் காந்தளம்பூ மாலை யாட
மின்பொலியுங் குழைசுடரிற் குலவி யாட
விரை செறியுங் கடம்புயங் கிடந்தே யாட
மன்னுமணி முடியாடப் பதக்கமாட
மாமணியார் கண்டிகையும் மார்பி னாட
அன்பர்கள் வாழ் தெல்லிநக ரத்தே மேவும்
அருள் முருகா குருநாதா வாடீ ரூஞ்சல். 6

பங்கமறுஞ் சம்பாவி னமுதுந் நெய்யும்
பாறயிரும் முக்கனியும் பழமும் தேனும்
தெங்கிளநீர் வெற்றிலை பாக் காதி யான
செய்யநிவே தனங்களோடு பிறவுங் கொண்டு
தங்கள்மன மாரமிகு வழிபாடாற்றிச்
சந்ததமும் தொண்டுபுரி வோரை யாளுஞ்
செங்கடம்பந் தாருடையோய் தெல்லி மேவுந்
திருமுருகா குருநாதா வாடீ ரூஞ்சல். 7

அடியவனர்தம் மின்னலெலா மகன்றே நீங்க
ஆருயிர்கள்பிணிநீங்கி மகிழ்ச்சி கூர
மிமடிமையெனும் பாவிநனி நில்லா தேக
வேந்தர்பயஞ் சாராமல் விலகிப் போகக்
கடினமுறும் பகைவர்துயர் கலங்கி யோடக்
ககனமழை பெய்துமிகு வாரி தேங்கக்
கொடிபுடைசூழ் தெல்லிநக ரத்தே மேவும்
குருநாதா பரநாதா வாடீ ரூஞ்சல். 8

அன்பர் தமக் கினியாரே யாடீ ரூஞ்சல்
அகங்குழையார்க் கினியாரே யாடீ ரூஞ்சல்
மின்பொலியு முடியாரே யாடீ ரூஞ்சல்
மேவலர்போர் முடிப்பாரே யாடீ ரூஞ்சல்
இன்படியார்க் களிப்பாரே யாடீ ரூஞ்சல்
எண்ணலர்கட் களியாரே யாடீ ரூஞ்சல்
துன்பமெலா மகன்றோடத் தெல்லி வாழும்
சுடர்வடிவேற் குருநாதா வாடீ ரூஞ்சல். 9

**வாழி**

பூமருவு மந்தணரும் பசுவும் வாழி
புரவலர்கள் செங்கோலும் புயலும் வாழி
நாமருவு மறையினொடா கமங்கள் வாழி
நலமருவு மடியார்க்க டாமும் வாழி
மாமகளும் மகிழ் தெல்லி நகரின் மேவும்
மான்மருகன் குருநாத னருளும் வாழி
ஏமமுறு பூசைவிழாச் செய்வோர் வாழி
எவ்வுயிரு மென்றென்றும் வாழி வாழி.

### எச்சரீக்கை

கூறுதுதி யமரர்க்கொரு கோவேயெச்ச ரீக்கை
குறிஞ்சிக்கொடி வள்ளிக்கருள் குமராவெச்ச ரீக்கை
தேறும்வடி வேலாவெங்க டேவேயெச்ச ரீக்கை
தெல்லிப்பதி மேவுங்குரு நாதாவெச்ச ரீக்கை.

### பராக்கு


நாதமுத லாயகுரு நாதா பராக்கு
நவ்விதரு மகளினொரு நாதா பராக்கு
தீதகலுமறை புகலுந் தெளிவே பராக்கு
தெல்லிநக ரத்துறையும் தேவே பராக்கு.

### மங்களம்

வல்லியுமை மைந்தனுக்கு மங்களம் - மாவின்
வடிவுசிதை வேலனுக்கு மங்களம்
தெல்லிநக ரீசனுக்கு மங்களம் - தேசு
சேர்ந்தகுரு நாதனுக்கு மங்களம்.

முற்றிற்று


சுன்னாகம் - மயிலணி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயம் (வடலி அம்பாள்)



உ
ஸ்ரீ முத்துமாரி அம்மன் துணை
சுன்னாகம் - மயிலணி

# ஸ்ரீ முத்துமாரி அம்பாள் [ஸ்ரீ வடலி அம்மன்] திருவூஞ்சல்

ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஸ்துதி

காப்பு

செந்தமிழ்ப் புலவர்சூழ் சுன்னா கத்தில்
செறிந்திலங்கு திருத்தலமாம் வடலிப் பதி
வந்தமர்ந்து அருள்புரியும் அன்னை யான
வடலியம் மைத்தாயாம் முத்து மாரி
பைந்தமிழ்த் திருவூஞ்சல் தனிலே வைகிப்
பக்தருக் கருள்புரியும் ஊஞ்சல் பாடச்
சந்திரசே கரப்பிள்ளை யாரின் பாதச்
செஞ்சரணம் என்றென்றும் காப்ப தாமே.

நூல்

பொன்மருவும் நால்வேதம் கால்க ளாகப்
பொலிந்தசிவா கமம்வயிர விட்ட மாக
மன்மருவும் கலைஞானம் கயிற தாக
மாட்சிநிறை ஸ்ரீசக்கரம் பீட மாகப்
பன்மலரின் தீந்தமிழின் ஊஞ்சல் வைகிப்
பாலித்து அருள்பொழியும் அன்னை நீயே!
சுன்னைநகர் மயிலணியூர் வடலிப் பதி
சுமதிமுத்து மாரியம்மா ஆடீர் ஊஞ்சல். 1

பக்தியெனும் நால்மார்க்கக் கால்நி றுத்திப்
பஞ்சபுலன் விட்டமதை ஒருங்கே கூட்டி
சித்தமுதல் நாற்கரணக் கயிறு மாட்டிச்
சிறந்ததிரு வருளென்ற பீடம் தேக்கி
முத்தியெனும் ஊஞ்சலிலே ஜீவன் ஆட
மேலான அருள்புரியும் முத்து மாரீ!
வித்தகர்வாழ் மயிலணியூர் வடலிப்பதி
முத்துமா ரித்தாயே ஆடீர் ஊஞ்சல் 2

விரித்தவனற் சடையாட க்ரிட மாட
　　விளங்குதிரு முடிப்பஞ்ச நாக மாடத்
தரித்ததிரு நீறாடத் திலக மாடத்
　　தமருகமும் திரிசூலம் கரத்தி லாட
உரித்த படைக் கபாலமொடு கத்தி ஆட
　　உமையவளின் கருணையருள் வதன மாடப்
புரித்தலமாம் மயிலணியூர் வடலிப்பதி
　　பூவைமுத்து மாரியம்மா ஆடீர் ஊஞ்சல். 3

படவரவின் ஆபரண அணிக ளாடப்
　　பசும்மார்பில் மாங்கலியம் ஜொலித்தே ஆட
வடலியம்மன் விழிகளிலே கருணை ஆட
　　வணங்கிடும் பக்தர்விழி நீருமாட
கடகமொடு வளைபுனைந்த கரங்க ளாடக்
　　கரங்களிலே அப்பமொடு வரத மாட
அடர்தால மயிலணியூர் வட லிப்பதி
　　அன்னைமுத்து மாரியம்மா ஆடீர் ஊஞ்சல். 4

அரியாட அயன்ஆட அரனும் ஆட
　　அண்டசரா சரமனைத்தும் அருளால் ஆடக்
கரியானைக் கன்றாடக் கந்தன் ஆடக்
　　கலைமகளும் அலைமகளும் சேர்ந்தே ஆட
அரிமாவா கனமாட அகில மாட
　　அம்புலியும் ஆதித்தன் உடுக்க ளாடப்
புரியான மயிலணியூர் வட லிப்பதி
　　புனிதமுத்து மாரியம்மா ஆடீர் ஊஞ்சல். 5

மன்னிடுதே வருக்கின்னல் தந்த கொடும்
　　மகிடாசு ரனைவதைத்த மாதா நீயே!
கன்னலென அபிராமிப் பட்டர் வாயில்
　　கரும்பெனவே அந்தாதி பொழிய வைத்தாய்
நின்னருளை வேண்டிநின்ற காளி தாஸன்
　　நெடுமாரி யெனக்கவிதை சொரிய வைத்தாய்
நன்னகராம் மயிலணியூர் வடலிப்பதி
　　நளினமுத்து மாரியம்மா ஆடீர் ஊஞ்சல். 6

திங்கள்முகத் தாமரையில் செவ்வாய் பூக்கத்
திகழுசிவ சம்புதன்னை மருவும் தேவீ!
பங்கஜத்துக் கலைச் செல்வி யாழன் போடு
பாடியிசை மீட்டிடவே அரிமா வெள்ளித்
துங்கவா கனமேறி ஆச னிக்கும்
துரியஞா யிறுகோடித் தேசு ரூபி!
மங்களஞ்சேர் மயிலணியூர் வட லிப்பதி
மாயிமுத்து மாரியம்மா அடீர் ஊஞ்சல். 7

கரதலத்தில் அருள்வீர கத்தி ஆடக்
கபாலமொடு தமருகமும் சூல மாட
உரகபடம் திருமுடியில் உயர்ந்தே ஆட
உடுத்தசெம் பட்டுமடிச் சேலை ஆட
மரகதத்தின் பச்சைவண மேனி ஆட
மாமேருச் ஸ்ரீசக்ரம் மருவி ஆடப்
புரமெழில்சேர் மயிலணியூர் வட லிப்பதிப்
புவனமுத்து மாரியம்மா ஆடீர் ஊஞ்சல். 8

அத்துவிதங் கடந்திட்ட அன்னை மாரீ!
அடியவருக் கெளிதான அம்மா நீயே!
சத்துவொடு சித்துநிறை ஆனந் தத்தின்
சக்தியெனும் ஸௌந்தர்ய லஹரி நீயே!
தத்துவங்கள் ஆறாறுக் கப்பா லாகித்
தாண்டவனின் லாஸ்ஸியமாய் நின்ற தேவீ
இத்தரையில் மயிலணியூர் வட லிப்பதி
இறைவிமுத்து மாரியம்மா ஆடீர் ஊஞ்சல். 9

குங்குமம்மஞ் சள் தருவோய் ஆடீர் ஊஞ்சல்
குதலைவரம் கொடுப்பவளே ஆடீர் ஊஞ்சல்
மங்கலநாண் அருள்பவளே ஆடீர் ஊஞ்சல்
மாட்சிநிறை வாழ்வருள்வோய் ஆடீர் ஊஞ்சல்
பொங்குகலை யுளம் தருவோய் ஆடீர் ஊஞ்சல்
புகழ்கல்வி பொருள்தருவோய் ஆடீர் ஊஞ்சல்
மங்களஞ்சேர் மயிலணியூர் வட லிப்பதி
மாரிமுத்து மாரியம்மா ஆடீர் ஊஞ்சல். 10

## வாழி

வேதியரும் தேவர் ஆ வினமும் வாழி!
வியனரசும் விண்மாரி தருமம் வாழி!
மேதினியில் தமிழ்சைவ நெறியும் வாழி!
மேவிடு கலைகல்வி ஞானம் வாழி!
மாதரவர் கற்புநெறி நீடு வாழி!
மாநிலமும் இன்புற்றே இனிதே வாழி!
பூதலத்தில் மயிலணி யூரும் வாழி!
பூரணி முத்துமாரி வாழி! வாழி!

சுபம்

## எச்சரீக்கை

வடலிப்பதி வாழும்முத்து மாரிஎச்ச ரீக்கை
வளமார் இளந் தாலம்வளர் தலத்தோய்எச்ச ரீக்கை
இடபாரூடர் சிவனார்மகிழ் உமையே எச்ச ரீக்கை
இனிதாம்மயி லணியூர்முத்து மாரிஎச்ச ரீக்கை 1

நாராயணன் போற்றும்சகோ தரியேஎச்ச ரீக்கை
நவசக்தியே வடலித்தல மாரிஎச்ச ரீக்கை
கூராயுத வீரகத்திப் படையோய்எச்ச ரீக்கை
காமாக்ஷிவி சாலாக்ஷிமீ னாக்ஷீஎச்ச ரீக்கை 2

அரிமாதனில் இவரும்முத்து மாரீ எச்ச ரீக்கை
அணிகட்கமும் திரிசூலத்தின் படையோய்எச்ச ரீக்கை
கரிமாமுகன் தாயேசிவ காமீ எச்ச ரீக்கை
கலைகல்வியும் கனகம் தரும் தேவீஎச்ச ரீக்கை 3

## பராக்கு

சீர்உலவு மயிலணிவாழ் மாரீ பராக்கு
சிற்பரையே தற்பரையே சூலீ பராக்கு
கார்சூழலீ கல்யாணி கமலீ பராக்கு
காளியம்மா வடலியம்மா தாயே பராக்கு
பார்கவியே பராபரையே மாயே பராக்கு
பவப்பிணியைத் தீர்ப்பவளே மாரீ பராக்கு
பார்வதியே பகவதியே தேவீ பராக்கு
பரைமுத்து மாரியம்மா தாயே பராக்கு.

துதிப்போரின் துயர்தீர்க்கும் தேவீ பராக்கு
துரந்தரியே வடலியம்மா தாயே பராக்கு
கதிப்பாதம் அருள்பவளே காளீ பராக்கு
காசினியில் மயிலணிவாழ் தேவீ பராக்கு
மதிசூடும் மஹாதேவன் தேவீ பராக்கு
மயிலணிச் சுன்னாகத்து பதியோய் பராக்கு
அதியருளைப் பொழிபவளே ஆதீ பராக்கு
அகிலாண்ட நாயகியே மாரி பராக்கு.

### லாலி

தேவிமுத்து மாரீத்தாய்க்கு லாலி சுப லாலி
தெய்வீகச் சுபகரிக்கு லாலி சுப லாலி
மேவும்வட லியம்மைக்கு லாலி சுப லாலி
மேலான பகவதிக்கு லாலி சுப லாலி 1

முத்துமாரி அம்மைக்கு லாலி சுப லாலி
முண்டகக் கண்ணியர்க்கு லாலி சுப லாலி
அத்துவிதங் கடந்தவர்க்கு, லாலி சுப லாலி
அரவிந்தன் சோதரிக்கு லாலி சுப லாலி 2

துடிக்கர மேந்துவார்க்கு லாலி சுப லாலி
துர்க்காமுத்து மாரிக்கு லாலி சுப லாலி
மிடியாவும் தீர்ப்பவர்க்கு லாலி சுப லாலி
மீனாக்ஷி காமக்ஷிக்கு லாலி சுப லாலி 3

மகிடா சூரமர்த்தனிக்கு லாலி சுப லாலி
மயிலணித் தாயவர்க்கு லாலி சுப லாலி
அகிலாண் டேஸ்வரிக்கு லாலி சுப லாலி
அன்னைவட லியம்மைக்கு லாலி சுப லாலி 4

## மங்களம்

**பல்லவி**

**ராகம்: சுருட்டி** **தாளம்: ஆதி**

வடலியம்பன் தாயவர்க்கு
ஜெயமங்களம் - அன்னை
வாழ்சுன்னாக மயிலணிக்குச்
சுப மங்களம்.

**அநுபல்லவி**

படவர வணி அரர்க்கும்
பார்வதி சிவகாமிக்கும்
கணபதி கந்தனுக்கும்
கண்ணனுக்கும் மங்களம்.

**சரணம்**

துர்க்காலக்ஷ்மி ஸரஸ்வதிக்கும்
தோகைவள்ளி குஞ்சரிக்கும்
நர்த்தன ராஜனுக்கும்
நாரணிக்கும் மங்களம்
வர்த்தனிக் கபாலம் சூடும்
வடுக பைரவருக்கும்
பக்தருக்கும் தொண்டருக்கும்
பாரோர்க்கும் மங்களம்.

சுபம்

சுன்னாகம் மயிலணி
ஸ்ரீமுத்துமாரியம்மன் ( வடலியம்மன்) திருவூஞ்சல் முற்றும்
இயற்றியவர்:- கலாபூஷணம், கலாரத்னா, மஹாவித்துவான்
யாழ்ப்பாணம் பிரம்மஸ்ரீ மா.த.ந. வீரமணிஐயர்


சுன்னாகம் தெற்கு சிவபூதராயர் கோயில்

உ
சிவமயம்

# சுன்னாகம் சிவபூதராயர் ஊஞ்சல்

## காப்பு

தென்சுன்னை வாழுஞ் சிவபூத ராயர்தமக்(கு)
இன்சொல் மணிஊஞ்சல் ஈரைந்து-தேன்சொல்லாற்
சொல்லத் துணையாய்ச் சுவைக்குங் கரிமுகவன்
செல்வக் கமலவடித் தேன்.

## நூல்

பொன்னாரும் பவளமணித் தூண்க ளாலும்
பொற்புமிகும் வைரத்தின் வளையி னாலும்
மின்னாருந் தரளமணி வடத்தி னாலும்.
விலைமதியா மாணிக்கப் பலகை யாலும்.
சுன்னாகந் தெற்குவாழ் வுறவே செய்த
சுடருமணி ஊஞ்சலின்பீ டத்தில் ஏறி
என்னாகங் குடிகொள்வீர்! ஆடீர் ஊஞ்சல்
இறைசிவபூ தராயரே! ஆடீர் ஊஞ்சல். 1

பக்கமெலா மிக்கமலர் மாலை யாலும்,
பந்தரெலாந் தொங்குமணி முத்தி னாலும்,
செக்கரெலாந் திரண்டனசெம் பட்டினாலும்
செய்துபல வாழைதோ ரணங்கள் நாட்டிச்
சொர்க்கமெனச் செய்தமணி மண்ட பத்தே
சுன்னாகந் தென்பதியோர் வாழ வாழ்ந்து
திக்கிறைவர் தொழுகழலீர்! ஆடீர் ஊஞ்சல்
சிவபூத ராயரே! ஆடீர் ஊஞ்சல். 2

வையமெலாங் காக்கின்ற வரதன் என்றும்.
மலர்கமலந் துலக்கமுறும் வரனா ரென்றும்,
மெய்யெலாம் நீறுபுனை விமல னென்றும்
வேறுபல சொல்லி அவர்அடியின் மேவிச்
செய்திடுமத் துதியெல்லாஞ் செய்யும் அன்பர்
சித்திபெறச் சுன்னைநகர் தெற்கில் வாழும்
தெய்வமெலாந் தொழுகழலீர்! ஆடீர் ஊஞ்சல்
சிவபூத ராயரே! ஆடீர் ஊஞ்சல். 3

பத்திபுரி பத்தர்பலர் பாதம் போற்றப்,
பழுமறைச்செந் தமிழ்வேதம் பலபேர் சாற்றச்
சுத்தமன முற்றவர்கள் மலர்கள் தூற்றத்
துய்யபனி நீர்சிவிறி கொண்டே ஊற்ற,
சித்தமலர் மலர்ந்தருளின் தேவ னாகித்
தென்சுன்னை வாழுமன்பர் சிறந்து வாழச்
சித்திபல செய்பவரே! ஆடீர் ஊஞ்சல்
சிவபூத ராயரே! ஆடீர் ஊஞ்சல். 4

கற்றுணர்நா ரதமுனிவ னென்னுங் காட்சிக்
கைலீணை வல்லவர்கள் கனிந்த பாடல்
சுற்றியஎத் திசையிலுறும் அவர்கட் கெல்லாம்
சுகானந்தம் விளைத்திடரின் தொடரைக் கீற
திற்றியமாம் பழம்வாழைப் பழங்கள் கொண்டு
சேவிக்குந் தென்சுன்னை சிறந்து வாழச்
சிற்றுணர்வில் லாதவரே! ஆடீர் ஊஞ்சல்
சிவபூத ராயரே! ஆடீர் ஊஞ்சல். 5

அண்டமெலாங் கைகுவிக்க அண்ட மீதே
ஆழிவரு மதியமென அநேக கோடி
தண்டரளஞ் சொரியும்வலம் புரிகள் ஆர்ப்பத்,
தவளமதிக் குடைகள்பல தயங்கிச் சூழத்
தெண்டிரை போற் கவரிபல இருபால் வீசத்,
தென்சுன்னை நன்னகரஞ் சிறந்து வாழத்,
தெண்டுகமண் டலக்கையீர்! ஆடீர் ஊஞ்சல்
சிவபூத ராயரே! ஆடீர் ஊஞ்சல் 6

பூவடிக்குள் உலகளந்த மாயன் என்னப்,
பொழியுமழை நெடுமுகில்கள் பொலிந்து மின்ன,
மாவடிக்கண் மகளிரென மயில்கள் வன்ன,
வாசம்விரித் தாடுமெழின் மலிந்து மன்ன,
நாவடிக்கு மிசைகள்பல வண்டு பன்ன,
நந்தவன மோங்கியதென் சுன்னை வாழச்
சேலடிப்பா துகையுடையீர்! ஆடீர் ஊஞ்சல்
சிவபூத ராயரே! ஆடீர் ஊஞ்சல். 7

பங்கமறு சம்பாவின் அமுதும், நெய்யும்,
பால்தயிரும், முக்கனியும், பழமுந், தேனும்,
தெங்கிளநீர் வெற்றிலைபாக் காதி யான
செய்யநிவே தனங்களொடு சேவை செய்து,
தங்கள்மன தாரஉம தடியில் தாழுந்
தன்மையினர் நன்மைபெறீஇத் தழைக்கு மாறு
செங்கமல மணிதொடையீர்! ஆடீர் ஊஞ்சல்
சிவபூத ராயரே! ஆடீர் ஊஞ்சல். 8

மூத்ததாய், இளையதாய் என்னுந் தாய்மார்
முறையினிரு பால்வைக, முளரி கேள்வர்
பார்த்தென வார்காதுதனிற்கு ழைகள் தூங்கப்,
பனிமதியின் வதனஒளி பண்பின் ஓங்க,
ஏத்துமடி யார்கலை யாவும் நீங்க
எனை உமது திருவடிக ளென்றுந் தாங்கச்
சேர்த்திடுமுப் புரிநூலீர் ஆடீர் ஊஞ்சல்
சிவபூத ராயரே! ஆடீர் ஊஞ்சல் 9

அன்பர்தமக் கினியாரே! ஆடீர் ஊஞ்சல்
அகங்குழையார்க கினியாரே! ஆடீர் ஊஞ்சல்
பொன்புனைகா தணியாரே! ஆடீர் ஊஞ்சல்
பொருளெனக்குத் தணியாரே! ஆடீர் ஊஞ்சல்
வன்பரைக்காத் தளியாரே! ஆடீர் ஊஞ்சல்,
மதிநிகர்தண் அளியாரே! ஆடீர் ஊஞ்சல்,
தென்சுன்னை வாழ்பவரே! ஆடீர் ஊஞ்சல்,
சிவபூத ராயரே! ஆடீர் ஊஞ்சல். 10

### வாழி

வாழிபூ தலத்தோர்கள் மழையும் வாழி,
மறையவர்கா ராளரொடு வணிகர் வாழி,
வாழிபசு நிரைமகளிர் கற்பு வாழி,
செங்கோன் முறைமை மறையும் வாழி,
வாழி நாள் தோறும் அடி பணியுந் தொண்டர்,
திருப்பணி செய்துவைத்த மேலோர் வாழி,
வாழிதென் சுன்னைநகர்ப் பூத ராயன்,
வரதனரு ளாலவ்வூர் வாழி, வாழி.

இயற்றியவர் - முருகேசு பண்டிதர்


சுன்னாகம் வருஷப்புலம் ஸ்ரீ மகாமாரி அம்மன் ஆலயம்

உ
சிவமயம்

# வருஷப்புலம் ஸ்ரீமகாமாரி அம்பாள் ஊஞ்சல் பாட்டு

## விநாயகர் துதி

பொன்னாரும் மணிமுடியாய் திகழ்ந்து மின்னும்
பொலிவளங்கள் சூழதமிழ் ஈழத்தாயின்
மின்னாரும் நுதலெவே மிளிர் யாழ்ப்பாணம்
மிகுந்துமலி மங்களமாம் திகல மன்ன
சுன்னாகப்பதி வரியப் புலத்தில் வாழ்ந்து
சோபன மாய்ச் சுபமருளும் மஹா மாரிக்கே
பன்னாரும் தமிழூஞ்சல் பாடி ஏத்த
பதி விநாயகன் பாதம் காப்ப தாமே

## நூல்

பவளக்கால் நான்கும் நான் மறைகளாகப்
பனினிடும்ஆ கமம் வயிர விட்டமாக
புவனியிலே வடம் ஞானக் கலைகை ளாக
பிரணவமாம் ஓங்காரம் பீட மாக
தவநிறையும் தமிழஞ்சல் தனிலே வைகி
தண்ணருளைத் தந்தாடும் தாயே மாரீ
சில் மயமாம் தல வருசப் புலத்தி மேவும்
சிற்பரையே மஹாமாரி ஆடீர் ஊஞ்சல். 1

காசினியில் பத்தியெனும் கால் நிறுத்திக்
கட்டிணைத்தே புலனைந்தை விட்டமாக்கி
தேசுலவு நாற்கரண வடங்கள் மாட்டி
திருவருளாம் துணையான பலகை கோத்து
பேசுமெழில் சீவனவன் பேரின் பத்தின்
பெறற்கரிய முத்தியெனும் ஊஞ்சலாட
ஆசியருள் நல்வருசப் புலத்தில் மேவும்
ஆரணியே மஹா மாரீ ஆடீர் உஞ்சல். 2

மணிப் பொன்னின் முடியா மலரும் ஆட
மலர்ந்த திரு வதனதில் அருளும் ஆட
அணிப்பூவின் மணியாரம் மார்பில் ஆட
அலங்காரப் பூங்கூந்தல் விரிந்தே ஆட
பணித்தங்க வளையாட பதக்க மாட
பசு மார்பில் மாங்கல்யம் பதிந்தே ஆட
பிணி தீர்க்கும் தலைவருஷப் புலத்தில் மேவும்
பூரணியே மஹாமாரி ஆடீர் உஞ்சல். 3

மஞ்சளணி குங்குமமும் மாலை யாட
மன்னு செவிக் குண்டலங்கங்கள் மின்ன ஆட
கஞ்சமலர் விழியருளைப் பொழிந்து ஆட
கரம் அபய வரதங்க கனிந்தே ஆட
கொஞ்சு தமிழ் இதழமுதில் இன்பம் பூக்க
குலவு மெழில் நகைபுரிந்து அருளும் தேவீ
மஞ்சுலவு தலைவரியப் புலத்தில் மேவும்
மனோ ஹரியே மஹாமாரீ ஆடீர் ஊஞ்சல். 4

மரகதத்தின் பச்சைவன மேனி ஆட
மாலாட அயனாட அரனும் ஆட
உரகவட ஒய்யாரப் படமுமாட
உடுக்கை திரி சூலமொடு கபால மாட
கரகமெனும் வேப்பமிலைக் கும்ப மாட
காற்சிலம்பு கலகலவென் றிசைத்தே ஆட
பரகதியைத் தரும் வருஷப் புலத்தில் மேவும்
பார்வதியே மஹாமாரி ஆடீர் ஊஞ்சல். 5

ஆதித்த ஞாயிறு வெண் குடையை ஏந்த
ஆலவட்டம் தனைத்திங்கள் தூக்கி நிற்ப
காதல் தண் மன் மதனும் செவ்வாய் பூக்க
கரகரதி இலை வேம்பு தனைத் தாங்க
கீதத்தை கலைச்செல்வி யாழன் போடு
கிளர்ந்டவே வெள்ளியரி யாசனித்தே
பாதத்தை அருள் வருஷப் புலத்தில் மேவும்
பராபரையே மஹாமாரி ஆடீர் ஊஞ்சல் 6

செந்திருவும் வந்தமர்ந்தோர் வடந்தொட் டாட்ட
செய்யகலை வாணியுமோர் வடந்தொட்டாட்ட
புந்தி மகிழ்ந் தரம்பையரோர் வடந்தொட்டாட்ட
சுந்தரியாம் மஹாமாரி அம்மை ஆடீச்
சுகுணவருள் தந்தெம்மை ஆண்டு கொள்ள
கந்தமலர்ப் பொழில் வருஷப் புலத்தில் மேவும்
கருமாரி மஹா மாரி ஆடீர் ஊஞ்சல். 7

கமல மலர்ப் கழலிணைகள் கருணை யோடு
காசினியில் பக்தருக்கே அருளும் தேவீ
குமுத மலர்ச் செவ்விதழில் முறுவல் பூத்துக்
குறை தவிர்த்து வருமருளும் தாயே காளீ
அமுதமென நின்புகழைப் பாடி ஏத்தும்
அடியவருக் கினிய தெலாம் அருளும் மாயே
தமிழமுதத் தலைவருஷப் புலத்தில் மேவும்
தயாபரியே மஹாமாரி ஆடீர் ஊஞ்சல். 8

முன்னொரு நாள் கொடுமரக்கன் மகிஷா சூரன்
முனிவருக்கும் தேவருக்கும் கொடுமை செய்ய
பன்னெடிய திரிசூலப் படையை ஏந்தி
பாயுமொரு சிங்கவா கனத்தில் ஏறி
மின்னலென வந்தரக்கன் மார்பில் ஏற்றி
மிடி செய்த அரக்கர் குலம் மடித்த காளீ
கன்னல் தமிழ் வளர் வருஷப் புலத்தில் மேவும்
கருணை மிகு மஹாமாரி ஆடீர் ஊஞ்சல். 9

அரியவனின் சோதரியே ஆடீர் ஊஞ்சல்
அம்பிகையே அபிராமி ஆடீர் உஞ்சல்
அரனவனின் நாயகியே ஆடீர் ஊஞ்சல்
ஆனந்த பைரவியே ஆடீர் ஊஞ்சல்
அரவணியும் ஆரணியே ஆடீர் ஊஞ்சல்
அடியவருக் கருள் பவளே ஆடீர் ஊஞ்சல்
புரமேனும் நற் தலவருஷப் புலத்தில் மேவும்
புரந்தரியே மஹாமாரி ஆடீர் ஊஞ்சல் 10

பித்தமொடு வாதங்கள் சிலேற்ப னங்கள்
பிணிகள் தனைத் தீர்ப்பவளே ஆடீர் ஊஞ்சல்
பக்தியுடன் தொழுவாரின் நோய்கள் தீர்க்கும்
பராபரியே மஹாமாரி ஆடீர் ஊஞ்சல்
சித்திரையில் அம்மைசின்ன முத்து நோய்கள்
எமக்கென்றும் வராமல் காத்தருளும்
முத்தழகீ தலைவியப் புலத்தில் மேவும்
முதுகாளீ மஹாமாரி ஆடீர் ஊஞ்சல். 11

பூசுரரும் ஆவினமும் வாழி! வாழி!
பூமாரி பொழிந்திந்தப் புவியும் வாழி!
தேசு மிகு செங்கோலின் நெறியும் வாழி!
திருமகளிர் கற்பு நெறி ஞானம் வாழி!
பேசு தமிழ் மொழி வாழி சைவம் வாழி!
புவியெல்லாம் மாரியருள் பொலிந்து வாழி!
வீசு தமிழ் மணவரியப் புலமும் வாழி!
விளங்கு திரு மஹாமாரி வாழி! வாழி! 12

## எச்சரீக்கை

வருஷப்புலம் வாழும் மஹாமாரி எச்சரீக்கை
வாரகியே வந்தே அருள் தாயே எச்சரீக்கை
அரிமாலயன் அருஞ் சோதரி காளீ எச்சரிக்கை
அரநாயகி திரி சூலினி மாரீ எச்சரிக்கை 1

பரமேஸ்வரி ஜெகதீஸ்வரி நீலி எச்சரீக்கை
பதினாலுல கேத்தும் சக்தி மாயே எச்சரீக்கை
புரிருஷப் புலம் வாழ்ந்திடும் மாரீ எச்சரீக்கை
புவனேஸ்வரி கருணாநிதி தாயே எச்சரீக்கை 2

மகிடாசூர மாயே சம்காரிணி எச்சரீக்கை
மஹா தேவனின் மனோகாராணி மாரீ எச்சரீக்கை
அகிலாண்டிடும் சிவனேஸ்வரி ரூபி எச்சரீக்கை
அழகார் புர வருஷப்புலம் மாரீ எச்சரீக்கை 3

அகிலாண்டிடும் சிவனேஸ்வரி ரூபி எச்சரீக்கை
அழகார் புர வருஷப்புலம் மாரீ எச்சரீக்கை 3

### பராக்கு

துதிப் போர்க் அருள் நல்கும் தேவீ பராக்கு
துரந்தரியே நிரந்தரியே நீலீ பராக்கு
மதிப்போர்க்கு மகிழ்ந்தருள செய்வோம் பராக்கு
மகா மாரீ வருஷப்புலம் தாயே பராக்கு 4

திரிசூல ஏந்திடும்நற் தாயே பராக்கு
தீனதயா பரியே மாயே பராக்கு
அரிமாயன் சோதரியே காளி பராக்கு
அம்பிகையே அபிராமி ஆதீ பராக்கு 5

சிங்கவா கினி நீயே தேவீ பராக்கு
சிற்பரையே கற்பகமே மாரீ பராக்கு
அங்கயற் கண்ணியே ஆயீ பராக்கு
ஆனந்த பைரவியே சூலி பராக்கு 6

### லாலி

வருஷப்புல வராளிக் லாலி சுப லாலி
வாராகி வைஷ்ண விக்கு லாலி சுப லாலி
அரியயனார் துதிப்போர்க்கு லாலி சுப லாலி
அம்பிகை மஹாமாரிக்கு லாலி சுப லாலி 7

கரியகண்டன் நாயகிக்கு லாலி சுப லாலி
கருமாரி யம்பாளுக்கு லாலி சுப லாலி
வரிகுழலின் எழிலிக்கு லாலி சுப லாலி
விளங்குதிரி சூலினிக்கு லாலி சுப லாலி 8

நாகபடம் அணிபவர்க்கு லாலி சுப லாலி
நாயகி மகா மாரிக்கு லாலி சுப லாலி
எகனவன் தேவியர்க்கு லாலி சுப லாலி
எழிலி வடி வழகியர்க்கு லாலி சுப லாலி 9

முற்றிற்று

உ
சிவமயம்

# ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் திருவூஞ்சல்

## காப்பு

பூமேவு பொன்னகராம் யாழ்ப்பா ணத்துப்
புகழ்பூத்த சுன்னாகம் செல்வ பூமி
பாமேவு தலத்தினிலே எழுந் தருளும்
பார்வதியாம் புவனேஸ் வரித்தா யான
நாமேவு சக்தியவள் நளின மாக
நல்லதமிழ் ஊஞ்சலிலே இனிதே ஆட
கார்மேவு வண்ணத்துக் கவிஞ னான
கணபதியின் செஞ்சரணம் காப்ப தாமே

## நூல்

சீராந்த நால்வேதம் தூண்க ளாகச்
செழும்சிவா கமம்வயிர விட்ட மாக
நீரார்ந்த கலைஞானம் கயிற தாக
நிறைந்திடும் ஸ்ரீசக்ரம் பீட மாக
ஏரார்ந்த செல்வங்கள் எழிலாய்ப் பூக்கும்
இறைவியவள் தன்னருளால் கலைக ளோங்கும்
பாரார்ந்த சுன்னாகச் செல்வ பூமிப்
புவனேஸ் வரியம்மா ஆடீர் ஊஞ்சல். 1

இகமதிலே பக்தியெனும் தூண்நி றுத்தி
இனியபஞ்ச புலன்களையே விட்ட மாக்கி
அகமதிலே நாற்கரண வடங்கள் மாட்டி
அன்னையவள் திருவருளாம் பலகை தேக்கி
பரமதிலே முத்தியெனும் ஊஞ்ச லாடப்
பக்குவம்சேர் ஆத்மாவுக் கருளும் தேவீ!
புகழ்பூத்த சுன்னாகச் செல்வ பூமிப்
புவனேஸ் வரியம்மா ஆடீர் ஊஞ்சல். 2

மணிகுறிற்றும் நவரத்த முடியு மாட
மலரிதழில் முறுவலொடு அருளு மாட
அணியார மாங்கலியம் மார்பி லாட
அழகுநய னங்களிலே கருணை ஆடப்
பணியரவின் வளைகரத்தில் குலுங்கி ஆடப்
பாம்புக்குண் டலங்களொடு பதக்க மாடப்
பிணிதீர்க்கும் சுன்னாகச் செல்வ பூமிப்
புவனேஸ் வரியம்மா ஆடீர் ஊஞ்சல். 3

மஞ்சளொடு குங்குமத்தின் திலக மாட
மணிமார்பில் மங்கலநாண் ஜொலித்தே ஆடச்
செஞ்சிமிழ்வா யிதழாட நகையு மாடச்
செங்கரத்தில் சூலமொடு பாச மாடக்
கஞ்சமலர்ச் சேவடியில் கழலு மாடக்
கரம்அபய வரதங்கள் ஈய்ந்தே ஆட
பஞ்சமிலாச் சுன்னாகச் செல்வ பூமிப்
புவனேஸ் வரியம்மா ஆடீர் ஊஞ்சல். 4

மரகதத்துப் பச்சைவண மேனி ஆட
மலர்மாலை மணியாரம் மார்பி லாடக்
கரதலத்தில் கன்னலொடு கபால மாடக்
கைவளையும் மேகலையும் குலுங்கி ஆட
வரமருளும் கருணைதவழ் நயன மாட
வண்டாகச் செண்டாடக் குழலும் ஆடப்
புரதலச் சுன்னாகச் செல்வ பூமிப்
புவனேஸ் வரியம்மா ஆடீர் ஊஞ்சல். 5

திருவடியே சரணமெனத் தினமும் வந்தே
தோத்தரித்து நினைப்போற்றித் துதிப்போ மம்மா!
மருவுமலர்ப் பதங்களிலே நிதமும் தமிழ்
மலர்மாலை சூட்டியுனைப் பணிவோம் அம்மா!
கருதரிய கருணைவடி வழகி யான
காருண்ய அன்னையே புவனத் தம்மா!
பெருதலச் சுன்னாகம் செல்வ பூமிப்
புலனேஸ் வரியம்மா ஆடீர் ஊஞ்சல். 6

திங்கள் முகத்தழகி செவ்வாய் பூத்துச்
    சொரிந்திடும் அன்புதன்னால் அருள்வாள் அன்னை
பங்கஜச் செல்வி யாளன் பரந்தா மனின்
    பாசமிகு சோதரியாள் வெள்ளித் தண்டை
துங்கமலர்ப் பதமொலிக்கும் கமலா சனி
    திகழ்கோடி ஞாயிறுவின் தேசு டையாள்
பொங்குதமிழ்ச் சுன்னாகச் செல்வ பூமிப்
    புவனேஸ் வரியம்மா ஆடீர் ஊஞ்சல். 7

நவமான சுன்னைநகர்க் கந்தை யாவும்
    நற்றலமாம் செல்லவள வினிலே நாளும்
தவமாகப் புவனேஸ் வரியே உன்னைத்
    தரணியிலே அனுதினமும் தொழுது வந்தார்
புவனேஸ்வ ரீநீயும் கனவில் தோன்றிப்
    பூமியில்செல் லவளவில் கோயில் கொண்டாய்!
புவிமீதில் சுன்னாகம் செல்வ பூமிப்
    புவனேஸ் வரியம்மா ஆடீர் ஊஞ்சல். 8

செகமீதில் அருள்சுரக்கும் உன்னை என்றும்
    ஸ்தாபகர் கந்தையாவின் வம்ஸத் தாரும்
இகமீதில் ஆதரித்து உன்னைப் பாடி
    இனித்திடுபூ ஜைகளுமே செய்ய நீயும்
அகமீதில் ஸகலஸெள பாக்கி யங்கள்
    அருளினாய் அன்னைபுவ னேஸ்வ ரியே!
புகழோங்கும் சுன்னாகச் செல்வ பூமிப்
    புவனேஸ் வரியம்மா ஆடீர் ஊஞ்சல். 9

ஆம்பல்மலர் விழியழகி ஆடீர் ஊஞ்சல்
    அன்பருக் கருள்பவளே ஆடீர் ஊஞ்சல்
சாம்பசிவன் நாயகியே ஆடீர் ஊஞ்சல்
    சாரங்கன் சோதரியே ஆடீர் ஊஞ்சல்
தீம்பசுந்த மிழ்சுவைப்போய் ஆடீர் ஊஞ்சல்
    தீனத யாபரியே ஆடீர் ஊஞ்சல்
பூம்பதியாம் சுன்னாகம் செல்வ பூமிப்
    புவனேஸ் வரியம்மா ஆடீர் ஊஞ்சல். 10

### வாழி

பூசுரரும் தேவர்களும் பசும் வாழி!
    பூந்தமிழும் மாரிவளம் செங்கோல் வாழி!
தேசுமிகும் மங்கையரின் கற்பும் வாழி!
    தெய்வீகச் சைவநெறி ஞானம் வாழி!
பேசுதமிழ்ப் பண்பாடு பொலிந்தே வாழி!
    பெரும்பதியாம் சுன்னாக வூரும் வாழி!
பாசுரக்கும் செல்வ பூமித் தலமும் வாழி!
    புவனேஸ்வ ரித்தாயும் வாழி! வாழி!

### எச்சரிக்கை

வாட்டமெல்லாம் தீர்ப்பவளே தாயே எச்சரீக்கை
வாராகி வைஷ்ணவியே தேவீ எச்சரீக்கை
கேட்டதெல்லாம் கொடுப்பவளே புவனீ எச்சரீக்கை
கோயில்கொண்ட செல்வபூமிப் புவனா எச்சரீக்கை

புவனேஸ்வரி பரமேஸ்வரி நீலி எச்சரீக்கை
புவிமீதினில் அபயம்தரும் சூலி எச்சரீக்கை
தவமேவடி வானளங்கள் தாயே எச்சரீக்கை
தரும்காருண்ய உருவேசிவ கௌரி எச்சரீக்கை

### பராக்கு

கற்பூர நாயகி கமலீ பராக்கு
கருணா கரிஉமையே தேவீ பராக்கு
பொற்பூரும் சுன்னாகப் பதியோய் பராக்கு
புவனேஸ் வரியம்மா பவதி பராக்கு

அருள்வடி வானவளே ஆதீ பராக்கு
அகிலாண்ட நாயகியே ஜோதி பராக்கு
திருவாழும் சுன்னாகத் தேவீ பராக்கு
திருவடி தரும்தாயே பவானி பராக்கு

## லாலி

அன்னைபுவ னேஸ்வரிக்கு லாலி சுப லாலி
அபயம் அருள்பவர்க்கு லாலி சுப லாலி
சுன்னைப்பதித் தேவிக்கு லாலி சுப லாலி
சுபமங்க ளரூபிக்கு லாலி சுப லாலி
கன்னல்கை ஏந்துவார்க்கு லாலி சுப லாலி
காதாம்பரி உமைக்கு லாலி சுப லாலி
என்னைஎன்றும் காப்பவர்க்கு லாலி சுப லாலி
எழிலிபுவ னேஸ்வரிக்கு லாலி சுப லாலி

## மங்களம்

ராகம்: சுருட்டி தாளம்: ஆதி

பல்லவி

புவனேஸ் வரியன்னைக்கு
ஜெயமங்களம்- இந்தப்
புவியினுள்ளோர் யாவர்க்கும்
சுபமங்களம்

அனுபல்லவி

கணபதி முருகனுக்கும்
கன்னிவள்ளி குஞ்சரிக்கும்
குணபதி பைரவர்க்கும்
கோகுல் நந்தனுக்கும்

### சரணம்

சுன்னாகத் தலத்திற்கும்
செல்வ பூமிக் கோயிலுக்கும்
ஏன்னாளும் பக்திசெய்யும்
ஏழில்பக்தர் தொண்டருக்கும்
பொன்னால யம்அமைத்துப்
போற்றிஆத ரிப்பாருக்கும்
மன்னார்ந்த பூசுரர்க்கும்
மகிதலம் யாவர்க்கும்.

ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் திருவூஞ்சல் முற்றும்

இயற்றியவர் "கவிமாமணி" கலாரத்னா "கலாபூஷணம்"
"மஹாவித்துவான்"யாழ்ப்பாணம் (இணுவில்)
பிரம்மஸ்ரீ மா.த.ந. வீரமணி ஐயர் (M.A - J.P)



கந்தரோடை அருளானந்த விநாயகர் கோயில்

# கந்தரோடை
# அருளானந்த விநாயகர்- திருவூஞ்சல்

காப்பு

சீரேறும் யாழ்ப்பாண தேசந் தன்னிற்
செய்யகந்த ரோடையெனும் பதியின்மேவும்
ஆரேறுஞ் சடைமுடியோன் புதல்வரான
ஆரருளா னந்தவிநா யகர்தம் மீது
பாரேறு மூஞ்சலெனும் பதிகம் பாடப்
பத்தியொடு பரவடியார்க் கருள்பா லிக்குங்
காரேறும் யானைமுக முடைய வன்னோன்
கமலமல ரடியிணைகள் காப்ப தாமே.

நூல்

மன்னியநதால் வேதங்கள் தூண்க ளாக
வழுத்துமுப நிடதங்கள் விட்ட மாகப்
பன்னுசிவா கமநூல்கள் கயிற தாகப்
பரவுசிவ ஞானமதே பலகை யாக
உன்னரிய வகையமைந்த வூஞ்சற் பீடத்
துவகையுட னமர்ந்தடியார் வினைக ணீக்கி
அன்னமலி வயற்கந்த ரோடை வாழும்
ஆனந்த விநாயகரே யாடீரூஞ்சல். 1

சந்திரனுஞ் சூரியனுங் கவிகை தாங்கச்
சாருமருத் துயரால் வட்டம் வாங்க
மந்திரமா மறைமுனிவர் கீதங் தேங்க
மன்னுபல வாச்சியங்க ளொலியின் வீங்க
இந்திரைகேள் வனுமயனு மறைக ளோதி
யிருமருங்குந் தொழுதுநின்று வடந்தொட் டாட்ட
அந்தணர்க ளுறைகந்த ரோடை வாழும்
ஆனந்த விநாயகரே யாடீ ரூஞ்சல். 2

தொல்லுலக முழுதீன்றுங் கன்னி யாகித்
துவாதசாந் தத்தலத்தி னொளியா யோங்கி
அல்லமர்கண் டத்தீசன் றேவி யாகி
யடியனுளக் கன்மலைவா ழுன்னையீன்ற
வல்லபைதன் றிருக்கணவா மயூர வாசி
வாகனற்கு முன்னவரே மணமார் செங்கேழ்
அல்லிமலர் வயற்கந்த ரோடை வாழும்
ஆனந்த விநாயகரே யாட லூஞ்சல். 3

முந்துபரா பரையாதி யிச்சை ஞானம்
முதன்மைபெறு கிரியையென மருவியென்றும்
ஐந்துதொழி னடாத்துசிவ சத்திமான
வைந்துகரத் தோடமரு மாதிமூர்த்தி
தந்தமத வேழமுக வடிவு கொண்டு
சகலசரா சரபுவனந் தாமே யாகி
அந்தமில்சீ ரமர்கந்த ரோடை வாழும்
ஆனந்த விநாயகரே யாட லூஞ்சல். 4

செம்பொன்வரை யானசுழி முனையி னோடு
திகழுமிடை பிங்கலையாச் செப்பநின்ற
நம்புபிர ணயவடிவாம் வாசியேறி
நல்லடியார்க் கருள்புரியு ஞான மூர்த்தி
வம்பியல்குண் டலிவல்லி ரவியை நோக்க
மன்னியமூ லாதார மருவுந் தேவே
அம்புயமார் வயற்கந்த ரோடை வாழும்
ஆனந்த விநாயகரே யாட லூஞ்சல். 5

மலரயனுந் திருமாலுந் தேடிக் காணா
மறைப்பொருளாந் தம்பிரான் றோழர் முன்னே
உலகுபுகழ் மூதாட்டி வழிபா டேற்றே
யுயர்கயிலை மலையடையச் செய்த செம்மல்
கலகமிடு மதவாதப் பிணியோர் தங்கள்
கனவகத்துங் காணரிய துரிய மூர்த்தி
அலர்மலியும் பொழிற்கந்த ரோடை வாழும்
ஆனந்த விநாயகரே யாட லூஞ்சல். 6

மணியியல்கிம் புரிக்கோட்டு வதன மாட
மன்னுயிர்கே வலசகல மருவி யாடப்
பணியியல்பூ ணணியுதரங் கரங்களாடப்
பரவுபல புவனசரா சரங்க ளாடத்
தணிவிலருண் மதுமலர்பூங் கழல்க ளாடச்
சலமிலடி யவர்சிவமா நிலையி லாட
அணியலர்பூம் பொழிற்கந்த ரோடை வாழும்
ஆனந்த விநாயகரே யாடீ ரூஞ்சல். 7

பேறுதரு சைவநெறி பெரிது வீறப்
பித்துறுமா யாவாத நெறிகள் பாறத்
தேறுபதி பசுபாசத் தெளிவு நாறத்
தெய்வசிவா னந்தமதுச் சிறந்தே யூற
மாறுபடு பகபாச ஞான மாற
மன்னுட்ரு வருண்ஞான மலிந்தே யேற
ஆறணிபூம் பொழிற் கந்தரோடை வாழும்
ஆனந்த விநாயகரே யாடீ ரூஞ்சல். 8

கருதுபர வீட்டினரே யாடீரூஞ்சல்
கயமுகனை வீட்டினரே யாடீ ரூஞ்சல்
உருவமுறு கோட்டினரே யாடீ ரூஞ்சல்
உம்பர்திருக் கோட்டினரே யாடீ ரூஞ்சல்
மருவுமராக் கச்சாரே யாடீரூஞ்சல்
மன்னுயிருக் கச்சாரே யாடீரூஞ்சல்
அருமறையோ ருறைகந்த ரோடை வாழும்
ஆனந்த விநாயகரே யாடீ ரூஞ்சல். 9

தேடருநான் மறையுணரந் தணர்கள் வாழி
தேவர்குல மானினங்கள் முகில்கள் வாழி
நீடுசெங்கோன் மன்னரொடு பின்னோர் வாழி
நிலவுதமிழ் மறைவாழி சைவம் வாழி
தோடுடைய செவியனடி யடியார்கள் வாழி
துங்கமணி யைந்தெழுத்து நீறு வாழி
ஆடுகொடி மதிற்கந்த ரோடை வாழி
ஆனந்த விநாயகனா ரருளும் வழி. 10

இயற்றியவர் -

தென்கோவை ச. கந்தையாபிள்ளை அவர்கள்

திருக்கோவிற் பாமாலை – 185


சுன்னாகம் மயிலணி ராஜ ராஜேஸ்வரி அம்மன் கோயில்

கந்தரோடை - வற்றாக்கைப்பதி

## ஸ்ரீ விசாலாக்ஷி அம்பாள் சமேத விஸ்வநாதஸ்வாமி - திருவூஞ்சல்

### காப்பு

பூமலியும் பூந்தமிழும் சைவ நீதி
புகழ்மலியும் தமிழீழ யாழ்ப்பாணத்து
தேமருவும் நகர்கந்த ரோடை தன்னில்
தேவிவிசா லாக்ஷியம்மை ஸமேத ரான
நாமவெழில் விஸ்வநாதப் பெருமான் வைகி
நந்தமிழின் திருவூஞ்சல் தனிலே ஆடப்
பாமருவு வீரகத்தி விநாய கன்பூம்
பதவனசம் என்றென்றும் காப்ப தாமே.

### நூல்

நாற்சுருதி வேதங்கள் தூண்க ளாக
நளினமிகு சிவாகமமே விட்ட மாகச்
சாற்றிடுநற் கலைஞானம் கயிற தாகச்
சக்திபொலி ஓங்காரம் பீட மாக
நாற்றிசையும் தோத்தரித்து வணங்கும் அன்னை
நாரிவிசா லாக்ஷியம்மை ஸமேத ராகிப்
போற்றுகந்த ரோடைவற்றாக் கையில் மேவும்
பதிவிஸ்வ நாதரே ஆடீர் ஊஞ்சல். 1

உளத்துந்து பக்திநாற் றூண்நி றுத்தி
ஓரைந்து புலன்விட்டம் ஒருங்கே கூட்டி
களத்துந்து நாற்கரண வடங்கள் மாட்டி
கனிந்ததிரு வருளென்ற பலகை தேக்கி
வளத்துந்து சீவாத்மா முத்தி யூஞ்சல்
வந்தமர்ந்தே ஆடவருள் புரியும் தேவா!
குளக்கந்த ரோடைவற்றாக் கையில் மேவும்
குருவிஸ்வ நாதரே ஆடீர் ஊஞ்சல். 2

அம்புலியும் அரவணியும் நதியும் ஆட
அழகுவிரிக் கதிர்மணியின் சடையும் ஆட
கொம்புநுதல் விழியாடத் திலக மாடக்
குழையாடத் தோடாட நகையு மாட
வெம்புகரித் தோலாடச் சூல மாட
விசாலாக்ஷி அம்மையவள் சேர்ந்தே ஆடச்
சம்புகந்த ரோடைவற்றாக் கையில் மேவும்
சாம்பவிஸ்வ நாதரே ஆடீர் ஊஞ்சல். 3

புகலரிய வேதங்கள் போற்றி ஆடப்
புனி தமழு மான்படையும் பூணூல் ஆட
சகலபுவ னங்களொடு அண்டம் ஆடச்
சக்திவிசா லாக்ஷியம்மை மருவி ஆட
இகமாட இறையாட அரியு மாட
இனியவயன் வாணியொடு இனித்தே ஆட
நகர்கந்த ரோடைவற்றாக் கையில் மேவும்
நளினவிஸ்வ நாதரே ஆடீர் ஊஞ்சல். 4

கரங்கொண்ட டமருகமும் அனலு மாடக்
கழுத்தரவு படம்விரித்து அசைந்தே ஆட
உரங்கொண்ட புலித்தோலும் இசைந்தே ஆட
உரகவட மாடத்தலை மாலை ஆட
அரன்கொண்ட அக்குமணி ஆர மாட
அம்மைவிசா லாக்ஷிபதச் சிலம்பு மாடப்
புரக்கந்த ரோடைவற்றாக் கையில் மேவும்
பதிவிஸ்வ நாதரே ஆடீர் ஊஞ்சல். 5

அலர்கதிசேர் திரிசூலப் படையும் ஆட
அடிமலரில் செஞ்சிலம்பு தண்டை ஆட
வலப்பதமும் முயலகனை மிதித்தே ஆட
வரதமொடு அருள் அபய கரமு மாடக்
கலைச்சந்த்ரன்ட சடைமுடியில் ஒளிர்ந்தே ஆட
காசிவிசா லாக்ஷியம்மை களித்தே ஆட
மலர்க்கந்த ரோடைவற்றாக் கையில் மேவும்
மஹாவிஸ்வ நாதரே ஆடீர் ஊஞ்சல். 6

ஞாயிறுவும் திங்கள்வெண் கவிதை தாங்க
    ஞாலச்செவ் வாய்மகளிர் கவரி வீச
வாயிதமிழில் வாத்தியமாம் கொம்பு தன்னை
    வானவரும் இசைத்திடவே வியாழன் பூண்டு
தூயவெள்ளித் திருவூஞ்சல் பீடம் மீதே
    தேவிவிசா லாக்ஷியொடு ஆச னித்தே
தோயுகந்த ரோடைவற்றாக் கையில் மேவும்
    தேவவிஸ்வ நாதரே ஆடீர் ஊஞ்சல். 7

பித்தனென ஒருவனுனை இகழ்ந்தா லென்ன
    பிச்சாண்டி என ஒருத்தி புகன்றா லென்ன?
வித்தகநின் கவிதைபிழை என்றா லென்ன?
    வில்லேந்தி வீரனுனை அடித்தா லென்ன?
சுத்தசிவா நந்தமுகத் தேனாய் நின்றே
    சொரிந்தருளை அடியவருக்கு நீயும் தேவா!
சித்தகந்த ரோடைவற்றாக் கையில் மேவும்
    ஸ்ரீ விஸ்வ நாதரே ஆடீர் உஞ்சல். 8

மாணிக்க வாசகத்தேன் மதுவை மாந்தி
    மண்சுமந் தடிபட்டாய் சொக்க நாதா!
காணிக்கை யாகக்கண் தானம் செய்த
    கண்ணப்பன் காலுதையும் பொறுத்தாய் தேவர்
கோணிக்கு ழைந்தழுத கவுணி யர்க்கே
    கௌரியொடு ஞானப்பால் கொடுத்தாய் ஈசா
கேணிக்கந்த ரோடைவற்றாக் கையில் மேவும்
    கோன்விஸ்வ நாதரே ஆடீர் ஊஞ்சல். 9

ஆனந்தத் தாண்டவனே ஆடீர் ஊஞ்சல்
    அம்பலப் பொற்பாதா ஆடீர் ஊஞ்சல்
ஞானந்த வழ்குருவே ஆடீர் ஊஞ்சல்
    ஞாயிறு கோடி ரூபா ஆடீர் ஊஞ்சல்
மோனந்த வழ்நாதா ஆடீர் ஊஞ்சல்
    முத்திக்கு வித்தானாய் ஆடீர் ஊஞ்சல்
தேன்கந்த ரோடைவற்றாக் கையில் மேவும்
    திருவிஸ்வ நாதரே ஆடீர் ஊஞ்சல். 10

மங்கள நாயகனே ஆடீர் ஊஞ்சல்
மாமறையின் பொருளோனே ஆடீர் ஊஞ்சல்
திங்கள்சு மப்பவனே ஆடீர் ஊஞ்சல்
திருக்காசி வாசனே ஆடீர் ஊஞ்சல்
அங்கயற் கண்ணிபதி ஆடீர் ஊஞ்சல்
அருளுருவ மானவனே ஆடீர் ஊஞ்சல்
செங்கந்த ரோடை வற்றாக்கையில் மேவும்
செழும்விஸ்வ நாதரே ஆடீர் ஊஞ்சல். 11

**வாழி**

நூலோரும் தேவர்களும் கோவும் வாழி!
நுண்ணமுதத் தண்மாரி நீடு வாழி!
கோலோச்சும் நீதிபுரி மன்னன் வாழி!
கோனடியார் பக்திவளம் பெருகி வாழி!
மேலோர்கள் போற்றுசைவ நீதி வாழி!
மெல்லியலார் கற்புநெறி ஞானம் வாழி!
சீலகந்த ரோடைவற்றாக் கையும் வாழி!
தேவிவிசா லாக்ஷிவிஸ்வ நாதர் வாழி!

சுபம்


கந்தரோடை வற்றாக்கைப்பதி ஸ்ரீ விசாலாட்சி அம்பாள் ஸமேத விஸ்வநாதஸ்வாமி கோயில்

## திருப்புகழ்

கைத்தல நிறைகனி யப்பமொட வல்ெரி
கப்பிய கரிமுகன அடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவ
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடு மரன்மகன்
மற்பொரு திருள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை யிபமாகி
அக்குற மகளுடனச்சிறு முருகனை
அக்கண மணமருள பெருமாளே.

உம்பர்தருந் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
எந்தனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவல த்தாலருள்கைக் கனியோனே
அன்பர் தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே.

விடமடைசுவேலை அமரர்படைசூலம்
விசையன்விடுபாண மெனவேதான்
விழியுமதிபாரவிதமுமுடைமாதர்
வினையின்விளைவேதும் அறியாதே
கடியுலவுபாயல்பகலிரவெனாது
கலவதனில்மூழ்கி வறிதாய
கயவனறிவீனன் இவனுமுயர்நீடு
கழலிணைகள்சேர அருள்வாயே
இடையர்சிறுபாலைதிருடிகொடுபோ
இறைவன்மகள் வாய்மை அறியாதே
இதயமிகவாடியுடையபிளைநாத
கணபதியெனாம அவரோட
அகல்வதெனடாசொல்எனவுமுடிசாட
அறிவருளும் ஆனை முகவோனே.

## வாழ்த்து

திருச்சிற்றம்பலம்

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள்ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்.

திருச்சிற்றம்பலம்

# சங்கரப்பிள்ளை மண்டல நாயகம்

(யாழ் சுன்னாகம் கிராமத்தலைவராக பணிபுரிந்தவர் குலத்தால் குணத்தால் மேலான ஒழுக்கத்தால் அரசறிந்த குடும்பமாய் விளங்கியவர்)

முன்னாள் சுன்னாகம் கிராமத் தலைவராம்
சங்கரப் பிள்ளை மண்டல நாயகம்
தமிழை நன்றாகக் கற்றுத் தேறி
அமிழ்தாய் ஆங்கிலம் கற்று உயர்ந்தவர்.
அத்தனை தகுதிகள் மெத்தக்கண் டதனால்
கிராமத் தலைவராய் நியமனம் பெற்றவர்
கடமை கண்ணியம் கட்டுப் பாட்டினால்
நாவே யடைய நாடே யசையும்
அதிகார புருஷராக அன்பராய் வாழ்ந்தவர்
அதனால், மக்களால் பாராட்டப் பெற்றவர்
மக்களிடை ஏதேன் பிரச்சனை வந்தால்
தக்கமுறை தீர்த்துச் சமாதானஞ் செய்தவர்
மாகாண அதிபரும் மண்டலநா யகத்தை
தாமாகப் பாராட்டிய தனிப்பெருந் தலைவர்

### இல் வாழ்க்கை

தலைவனுக் கேற்ப தகுதியால் ஒத்த
நிலையுடை இரத்தின தேவியாம் மங்கையை
பெற்றார் சொற்படி பெரிதும் விரும்பி
உற்றார் மற்றோர் பாராட்ட ஏற்று
வாழ்க்கைத் துணைவியாய் மதித்து வாழ்ந்தவர்
வீட்டின் விளக்காக விளங்கினார் அதனால்
ஆண்மக்கள் நால்வரை பெண்மக்கள் நால்வரைப்
பெற்று மகிழ்ந்து பெரும்செல்வ மாக
பற்றுடன் வளர்த்து பாங்காய் வாழ்ந்தனர்
தந்தை தாயரைப் போலப் பிள்ளைகளும்

செந்தண்மை பூண்டு சிறப்பாய் வாழ்ந்தனர்
ஆரம்பக் கல்வியை ஊரிலே கற்றபின்
அடுத்துக் ஆங்கில உயர் கல்வியைப் பெற
ஆண்பிள்ளைகளை ஸ்கந்த வரோதயாக் கல்லூரியிலும்
பெண்பிள்ளைகளைச் சுன்னாகம் பெரிதாய் விளங்கிய
இராம நாதன் மகளிர் கல்லூரியிலும்
கற்பித்து உத்தியோகம் கைவரச் செய்தனர்

**பருவமடைந்த பிள்ளைகளுக்கு**

மக்களில் கல்வி உத்தியோகத்திற் கிணங்க
மருகரை, மருகிமாரைத் தேர்ந்தே எடுத்தனர்
கலாநிதி செல்லப்பா சாந்தினி தனையும்
திருஞான சம்பந்தர் அம்பிகா தனையும்
விக்கி னேஸ்வரற்கு மாதினி தனையும்
கோணேஸ் வரனே கேசினி தனையும்
மணம் செய்வித்தது போல்
பெண்பிள்ளைகளுக்கு வாழ்க்கைத் துணைவராய்
பத்ம லோசினிக்கு பாலேந்தி ராவையும்
கமல லோசினிக்கு வரதரா சாவையும்
தோகை அம்பிகைக்கு குகதா சனையும்
நளின லோசினிக்கு சந்திர குமாரையும்
திருமணஞ் செய்வித்து சிறப்பாக வாழ்வும் கண்டு
மண்டலந் தம்பதியினர் மகிழ்ந்தனர் பெரிதே

நீரும் நிழலும் நிலம்பொதியும் நெற்கட்டும்
பேரும் புகழும் பெரு வாழ்வும்- ஊரும்
வருந்திருவும் வாணாளும் வஞ்சமிலார்க் கென்றும்
தருஞ்சிவந்த தாமரையாளர் தான்

- இது ஒரு பழம் பாடல்

மண்டல நாயகம் இரத்தினா தேவி
தம்பதி பெற்ற பிள்ளைகள் எண்மரும்
செந்திருவாம் செந்தாமரைச் செல்வியை வழிபட

சிந்தனை செய்து சிறப்பினைத் தரும்
மகாலட்சுமி யம்மையை வடிவமைத் திடவும்
சந்திர சேகரப் பிள்ளையார் கோயிலில்
கன்னி மூலையில் தாபிக்க எண்ணினர்.
அன்று சந்திர சேகரப் பிள்ளையார் ஏத்தி
நன்றே வரதர் பிள்ளையார் கதையை எழுதினார்
புலவர் குமாரசுவாமி பன்னூல் இயற்றினார்
செல்லாச்சி அம்மா முத்தி யடைந்தார்
இவ்வாறு பற்பலர் வணங்கி நூல் செய்தனர்
மண்டல நாயக பிள்ளைகள் தாமும்
தந்தைபோல் போற்றி தாமே யுயர்ந்தனர்.

கோயிலின் தென்மேற்கே கன்னி மூலையில்
தாயாம் மகாலட்சுமியை தாபிக்க எண்ணினர்
கோயிற் குருக்களாம் சோமாஸ் கந்தரும்
மேவியவாமகன் சந்திர காந்தனதும்
யோசனைப் படியே மாமல்ல புரஞ்சேர்
சிற்பக் கலைஞர் நரசிம்மன் வடித்த
அன்னை மகாலட்சுமியின் அரும்பெரும் வடிவத்தை
விசய ஆண்டு ஆடித்திங்களிருபத் தேழில்
வான்தொரு விமானக் கோயிலில் முறையாக
ஆகம விதிப்படி அந்தணர் மறையோத
ஞாலம் போற்ற பிரதிட்டை செய்வித்தார்.
புரட்டாதி மாதம் பொருந்துருவ ராத்திரிநாள்
அபிஷேக ஆராதனை முறைப்படி செய்கின்றார்
ஒன்பது நாளும் துர்க்க வாணிக்கும்
மங்கலம் முழங்கப் பூசைகள் செய்து
அமுதொடு அவலும் கடலை மோதகமும்
கனிகளும் படைத்து கர்ப்பூர ஆரத்தி
புனிதமாகக் காட்டி புகழ்ந்து பாடி
செல்வமெல் லாம்வேண்டி திரிகரண சுத்தியால்
அல்லல்கள் களைந்திட ஆராதனை செய்வர்

அடியார் மகிழ அர்ச்சனை விபூதியுடன்
படையலை விருந்தாய்ப் பகிர்ந்து மளிப்பார்

### வரலட்சுமி பூசை

மகாலட்சுமி யன்றி வரதலட்சு மியையும்
தாபித்து வணங்கும் தன்மை யுடையராய்

### வரலட்சுமி விரதம்

சுமங்கலிகளும்.கன்னிப் பெண்களும் திருவிளக்கேற்றி

செங்கமலப் பொலந்தாளில் திகழுந்து நிதம்
வீற்றிருக்கும் திருவே யுன்னை
அங்கமலத் தயனொடு மால்
அலர்கதிராய் வெண்மதியாய் அமரர்க் கூட்டும்
பொங்கழலாய் இருள் துரக்கும்
பூங்கொடியே நெடுங்கானில் பொருப்பில் மண்ணில்
எங்குளை நீ அவனன்றோ
மல்லல்வளம் சிறந்தோங்கி இருப்பதம்மா

### விரத நாள்

ஆண்டுதொறும் ஆவணியில்
பௌர்ணமிநாள் முதல் வெள்ளிக்கிழமை தன்னில்
நீண்ட புகழ் சந்திரசே கரப்பிள்ளை
யார் கோவில் நிருதி மூலையில்
வேண்டியுனை சுமங்கலிகள் கன்னிப்பெண்கள்
விருந்தாக விளக்கேற்றியே
தூண்டுமணி யோசையுடன் பூசையிட்டு
கரமதனில் நூலுங்கட்டுவாம்

**எப்படி**

தாமரைப்பூ மஞ்சள் நிறப் பூக்கொண்டு
மாலையிட்டு வரலட்சுமியே என்று
ஆமளவும் பசியிருந்து அன்புடனே
அவள் பாதபூசை செய்து நாளும்
சேமமுற அர்ச்சித்து யன்னார்க்கு
கேட்டவரும் ஈந்துக்கு வாழவைப்பாள்
ஏமமுற விளக்கேற்றி பூசையிட
நோக்கு வாள், என்னென்றுமே, இஃதுண்மையே

குறிப்பு:-

யாவரும் குறித்த தினத்தில்
வரலட்சுமி விரத மிருந்து
விளக்கேற்றிப் பூசையிட்டு
படையலிட்டுத் தொழுதால்
யாவையும் பெற்று வாழலாம்.

சுன்னாகம் சங்கரப்பிள்ளை மண்டலநா யகம் சிறப்புற
தேசமறிய
எந்நாளும் மறவாமல் வருஞ்சந்ததி அறிந்தவரைப்
பற்றிப் போற்ற
பொன்னான அடையாளம் ஒன்றினை அவர் வாழ்ந்த
புதுமனையில்
முன்னாக அமைத்திடவே வேண்டுகிறேன்
புலவர்மணி சிற்றம்பலவானே

பாடிய புலவர், கலாபூஷணம், புலவர்மணி ஆசிரியர்-
வை. க. சிற்றம்பலம், இணுவில்.

# நன்றி உரை

"திருக்கோவிற் பாமாலை" என்ற இத் தொகுப்பு நூலுக்கு , கலா பூஷணம், சைவப்புலவர் சு. செல்லத்துரை, செஞ்சொற்புலவர் ஆறு திருமுருகன், சைவத்திரு அ. பரமநாதன் ஆகியோர் ஆலோசனை வழங்கினர். திரு.ப. சேயோன் அவர்கள் அச்சுப் பிரதிகளை ஒப்புநோக்கி உதவினார். ஆலயங்களின் முகப்புப் படங்களைப் படம் பிடித்து உதவியவர் திரு. சி. தஜீதரன் (இராசன்) மற்றும் க. செல்வகுமார் M.A இவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நூலுக்கு ஆசியுரை வழங்கிய நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், செஞ் சொற்செல்வர் ஆறுதிருமுருகன், கலாபூஷணம், சைவப்புலவர் சு. செல்லத்துரை, சிவஸ்ரீ சோ. சந்திரகாந்தக் குருக்கள் ஆகியோருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பஞ்ச புராணம் ஓதுகின்ற முறை பற்றிய எழுதிய திருவாவடுதுறை ஆதீனப் புலவர் திரு. ஏ. அனுஷாந்தன் அவர்களுக்கும், ஊஞ்சற்பாட்டுக்கள் தந்து உதவியவர்களுக்கும், சுன்னாகம் சந்திரசேகரப் பிள்ளையார் கோவிலில் மகாலஷ்மி பிரதிஷ்டை பண்ணியதை முன்னிட்டு சிவபதமடையமுன் பாடல் இயற்றித் தந்த முதுபெரும்புலவர், கலா பூஷணம் வை.க. சிற்றம்பலம் அவர்களுக்கும், இந்நூலை அழகுற அச்சிட்டு உதவிய கரிகணன் (தனியார்) நிறுவனத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**இங்ஙனம்**

**குடும்பத்தினர் சார்பில்**

**ம. கோணேஸ்வரன்**

